Registered as a News paper in Ceylon

விலை சதம் 20




ஈழநாடு

வார மலர்

மலர் 13 பங்குனி 26 ஸபர் 12 (9-4-71) வெள்ளிக்கிழமை இதழ் 51

# இன்று முழுநாளும் ஊரடங்கு உத்தரவு அமுலில் இருக்கும்

கோட்டை, வெள்ளி

ஊரடங்கு உத்தரவு போயா தினமான இன்று முழுநாளும அமுலிலிருக்கும். நேற்றுப் பிற்பகல் 3மணிக்குப் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவு இன்று முழுநாளும் அமுலிலிருந்து நாளை சனிக்கிழமை காலை 6 மணிக்கு முடிவடையும்.

## உள்ளூர் பாதுகாப்புப் படை புதிய பிரிவு அமைக்கப்பட்டது

கோட்டை, வியாழன்

உள்ளூர் பாதுகாப்பு படையென புதிய உதவிப்படையொன்று உருவாக்கப்பட்டுள்ளது. நாசகார சக்திகளுக்கு எதிராகவும் நாசவேலைகளைத் தடுத்து முறியடிக்கவும் உருவாக்கப்பட்டிருக்கும். இப்படை இப்போது கொழும்பு நகரில் அமைக்கப்பட்டிருக்கிறது. இப்படையில் சேர்ந்து பணி புரிவதற்கு கொழும்பு நகரில் உள்ள பலர் முன்வந்துள்ளனர்.

இதர நகரங்களிலும் இதுபோன்று உள்ளூர்ப் பாதுகாப்புப் படைகள் அமைக்கப் படவிருக்கின்றனவாம்.

## மதத்தலைவர்கள் கோரிக்கை

நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு அரசாங்கத்துக்கு ஆதரவளிக்குமாறு மதத்தலைவர்கள் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மல்வத்தை, அஸ்கிரிய பௌத்த மத பீடத் தலைவர்களும் கொழும்பு மேற்றிராணியார், மெதடிஸ்த தலைவர், அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் ஆகியோரும் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நாட்டில் குழப்பத்தையும் கலகத்தையும் ஏற்படுத்தியிருப்பதையும் வன்முறைச் செயல்களில் ஈடுபடுவோரையும் மதத்தலைவர்கள் கண்டித்துள்ளனர்.

## "தொழிலாள வர்க்கம் அரசுக்கு உதவ வேண்டும்"

### தொழிற் சங்கங்கள் வேண்டுகோள்

கோட்டை, வியாழன்

'ஏழை எளிய மக்களால் ஆட்சி பீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட, தொழிலாளருக்கும் பொதுமக்களுக்கும் நன்மைசெய்யும் கொள்கைகளைக் கொண்ட இன்றைய அரசாங்கத்துக்கு உதவியும் ஒத்துழைப்பும் அளிப்பது தொழிலாள வர்க்கத்தினதும் பொதுமக்களினதும் கடமையாகும்' என்று தொழிற்சங்கங்களின் இணைப்புக்குழு விடுத்துள்ள வேண்டுகோள் ஒன்றில் கேட்டுள்ளது'

தொழிலாளர் சம்மேளனம், இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனம், ராஜ்ய லிபிகாரு சம்மேளனம், அரசாங்க தொழிற்சங்க சம்மேளனம், அரசாங்கசேவைத் தொழிற்சங்க சம்மேளனம், ஸ்ரீலங்கா அரசாங்க சேவைக் குமாஸ்தாக்கள் சம்மேளனம், பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர் சம்மேளனம், ஸ்ரீலங்கா தேசிய ஆசிரியர் சம்மேளனம்ஆகியவை கூட்டாக இந்த வேண்டுகோளை விடுத்துள்ளன.

செனட்சபையை ஒழித்தல், புதிய அரசியல் அமைப்பை உருவாக்குதல், வர்த்தக ஸ்தாபனங்களைச் சுவீகரித்தல் போன்ற ஏகாதிபத்தியக் கொள்கைகளுக்கெதிரான முற்போக்குத் திட்டங்களைச் செயல்படுத்த முன்வந்துள்ள அரசாங்கத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்கச் சிலர் முன்வந்துள்ளனரென்பதற்குப் போதிய ஆதாரங்கள் உண்டு என்று தொழிற்சங்க சம்மேளனங்கள் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

அரசாங்க உடமைகளைச் சேதப்படுத்துதல், பல லட்சக்கணக்கான பெருமதியுடைய அரசாங்கத்தின் சொத்துக்களை நாசமாக்குதல், குண்டுகள், துப்பாக்கிகள் மற்றும் பயங்கர ஆயு

(14-ம் பக்கம் பார்க்க)

## மா, சீனி இறக்குமதி

கோட்டை, வியாழன்

கொழும்பு துறைமுகத்தில் மா, சீனி போன்ற உணவுப் பொருட்களை 24 மணி நேரமாக தொடர்ந்து தொழிலாளர்கள் கப்பலிலிருந்து இறக்குமதி செய்து வருகிறார்கள் என்று அறிவிக்கப்படுகின்றது.

நாட்டு மக்களுக்கு

## அமைச்சர்கள் குமாரசூரியர் கெனமன் வேண்டுகோள்!

கோட்டை, வியாழன்

சர்வாதிகார பாசிச முறைக்கலகக்காரர்களை அடக்கி மக்களால் தெரிவு செய்யப்பட்ட உண்மையான சுதந்திர மக்கள் அரசாங்கம் உண்மையான சோஷலிஸ சுதந்திரத்தை நிறைவேற்றுவதற்கு மக்கள் தொடர்ந்து ஆதரவளிக்க வேண்டும் என்று தபால் தந்தி அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியரும், வீடமைப்பு கட்டட நிர்மாண அமைச்சர் திரு. பீட்டர்கெனமனும் வானொலி மூலம் நேற்று நாட்டுமக்களுக்கு விடுத்த வேண்டுகோளில் கேட்டுக் கொண்டனர்.

திரு. குமாரசூரியர் தமிழ்த் தேசிய சேவையில் தமிழிலும் திரு பீட்டர் கெனமன் ஆங்கில தேசியசேவையில் ஆங்கிலத்திலும் உரைநிகழ்த்தினர்.

"நாட்டில் கிளர்ச்சியை உண்டாக்கி, நாசகாரவேலையிலீடுபட்டிருக்கும் இயக்கத்தை அடக்கி, சுதந்திர சோஷலிஷ ஆட்சியைப் பலப்படுத்த நாட்டுமக்கள் உதவவேண்டும்".

இவ்வாறு தபால் தந்தி அமைச்சர் செனட்டர் திரு. செல்லையா குமாரசூரியர் இன்று பொதுமக்களுக்கு வானொலிமூலம் விடுத்துள்ள வேண்டுகோளில் கேட்டுக் கொண்டார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:

1970-ம் ஆண்டுமேமாதம் 27-ந் திகதி பெரும்பான்மை பலத்துடன் ஆட்சிக்கு ஐக்கிய முன்னணி வந்தது

புதிய அரசியல் திட்டத்தை உருவாக்கவும், கூட்டுத்தாபனங்கள் மூலம் நாட்டுத்தேவைக்கான முன்னேற்றங்களைச் செய்யவும் முன்வந்தது. ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தை தானேற்கவும்என முன்னேக்குள்ள இலக்கை நாடி இயங்கியும் வருகின்றது.

இந்த அரசாங்கத்தின் ஆக்கபூர்வமான செயல்களை [illegible] முன்வந்துள்ளனர்.

(14-ம் பக்கம் பார்க்க)

## திருமண அழைப்பு

நிகழும் சாதாரண ஸ்ரீ பங்குனிமீ 28-ம் நாள் (11-4-71) ஞாயிற்றுக்கிழமை பகல் 11.30மணியிலிருந்து 12.30 மணிவரையில் உள்ள சுபமுகூர்த்த வேளையில்,

எமது மகன் திருநிறை செல்வன் சிவஷண்முகம்

எமது மகள் திருநிறை செல்வி மனோகரி

அவர்களுக்கும்

மணமகள் இல்லத்தில் நடைபெற இருக்கும் திருமணத்திற்கு தாங்கள் குடும்ப சகிதமாய் சமூகம் தந்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்,


செ. இரத்தினசபாபதி (இளைப்பாறிய றெயில்வே அதிகாரி)
திருமதி இரத்தினசபாபதி
73, சிவன்கோவில் மேலை வீதி,
வண்ணார்பண்ணை.
3235

ஆ. வை. தங்கராஜா (இளைப்பாறிய கிராம முன்னேற்ற அதிகாரி
திருமதி தங்கராஜா
(அதிபர் நவாலி மகாவித்தியாலயம்
258, யாழ்வீதி, மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று
# புளியம்பொக்கணை நாகதம்பிரான் பொங்கல்

கண்டிக்குளிக் கிராமத்திற்குத் தென்பகுதியாக அமைந்துள்ள புளியம்பொக்கணை என்னும் கிராமத்தில் கோவில்கொண்டருளிய நாகதம்பிரானின் திருவருட்திறனையும் அப்பெருமானின் பொங்கல் விசேடத்தையும் பலருமறிவர். பிரதம பூசகர் திரு நா. வீரகத்திப்பிள்ளை ஓய்வுபெற்ற உடையார் திரு. வே. அருணாசலம் இன்னும் பல முதியோர்கள் பக்தியோடு கோயிலை நிர்வகித்துவருகின்றனர்.



புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய முன்புறத் தோற்றம்

## பாம்பு தோன்றிய வரலாறு

சகல வளங்களும் பொருந்திய கிராமம் புளியம்பொக்கணை. இக்கிராமத்தைச் சுற்றி நெத்தலியாற்றின் கிளைகளில் தண்ணீர் எக்காலமும் சலசலத்தோடுகின்ற காட்சி எவர் மனதையும் கவராதிருக்க முடியாது. இத்தகைய பொன் விளையும் பூமியில்தான் குடியேறியிருந்தார் வன்னியகுலதிலகராகிய நீதிநாயக முதலியார் என்பவர். இவர் மிகவும் கல்வியறிவும் குணவிசேடங்களும் உடைய தனவந்தராகி தனது தகமைக்கேற்ற கமலமென்னும் பெண்ணை விவாகம் செய்து இல்லறம் நடத்திவரும்போது பல காலங்கள் பிள்ளையில்லாதிருந்து எம்பெருமான் திருவருளினால் இரு ஆண்மகவுகளை ஒன்றன்பின் ஒன்றாகப்பெற்று மனத்துயர் நீங்கிச் சந்தோஷமுடன் வாழும் நாளில் பின்னும் அம்மாது கற்பமுற்று பங்குனி உத்திரம் பௌர்ணமி சேர்ந்த சுபதினத்தில் ஒரு பெண்மகவோடு ஒரு நாகபாம்பையும் பெற்றனள். அதைக்கண்டவர்கள் பயந்து பாம்பை எடுத்து வெளியில்போட அது மெதுவாக நகர்ந்து தாயின் படுக்கையை அடைந்தது. இதனைக் கண்ணுற்ற மாது பாம்புக்குப் பாலூட்டி வளர்த்தனர். இப்படி இருக்கும் காலத்தில் மற்றப்பிள்ளைகள் யாவரும் விகுத்தப்பியமடைந்து தங்கள் உடைமைகளை பிள்ளைகள் மூலமாகக் கொடுத்தனர் பாகமிட்டுக் கொடுத்தவேளை இப்பாம்பு மிகவும் கோபிப்பதைக் கண்டு இப்பாம்பையும் அறிந்து அதற்குமோர் பங்காக்கிச் சாதனம் எழுதினார்கள். அப்பாம்பு சமாதானமாகி தன் பாகத்தைத் தங்கைக்காக்கி தாய் தந்தையரோடு வீட்டில் வாழ்ந்தது.

## இறைவன் கனவில் தோன்றி...

காலம்செல்ல அயலிலுள்ள சர்ப்பங்களெல்லாம் இப்பாம்போடு வந்துசேர்ந்து பல்கிப்பெருகத் தொடங்கின ஒருநாள் பிறசர்ப்பங்களின் இடையூறுகளைத் தாங்கமுடியாதுவிளக்குமாற்றினால் அடிக்க அவைகளுடன் இப்பாம்பும் மறைந்தகன்றது. இவர்கள் எல்லா இடங்களிலும் தேடியும் பாம்பைச்காணவில்லை.

பின் ஒருநாள் சிவபெருமான் சொர்ப்பனத்தில் தோன்றி நீங்கள் விரட்டியலைத்த பாம்புகள் கொக்காவில் வனந்திரமூடாக வன்னிநாட்டிலுள்ள புதூர் என்னுமிடத்தில் தங்கியிருக்கின்றன நீவிர் அவற்றைச் சகலவரிசைகளோடும் சென்று அழைத்து வந்து புளியம்பொக்கணையில் ஓர் ஆலயமமைத்து அச்சர்ப்பத்தை தெய்வமாக வணங்குங்கள் என அருளிமறைந்தனர்.

அவ்வாறே அவ்விடத்தில் ஆலயமமைத்து பூசைகள் செய்து அரவு பிறந்த தினமாகிய பங்குனி உத்தர பௌர்ணமியில் ஆண்டுதோறும் பொங்கல் விழா நடைபெற்று வருகிறது.

பெற்றோர் சிவபதமடைந்த பின்பு மான் வலனியனென்பவர் அர்ச்சகராகி ஆராதனை செய்துவருங்காலத்தில் இலங்கையை ஆட்சி புரிந்த ஒல்லாந்த அதிகாரிகள் இதனை நம்ப மறுத்தனர் பூசகரைப் பார்த்து பாம்பைக காட்ட முடியுமா? என அதிகாரிகள் கேட்டனர். அதற்கு இசைந்த பூசகர் உடனே முழுகிப் பூசைக்குரிய முறைகளைச் செய்து ஒரு வனந்தினுள்ளே வெள்ளைப் புடவையை முறுக்கிப்போட்டு பாம்பு ரூபமாக ஒல்லாந்த அதிகாரிகள் காணவேண்டுமென ஆண்டவனைத் தியானித்தார். உடனே எம்பெருமான் திருவுளமிரங்கி ஒல்லாந்த அதிகாரிகள் காணும் பொருட்டு வனத்தினுள்ளாகப் பெருமிரைச்சலோடு ஐந்துதலையுடைய நாகபாம்பாகப் படம் விரித்து நின்றாடியது. அதனைக் கண்ட ஒல்லாந்த அதிகாரிகள் பயந்து நடுங்கி தாம் கண்ட சர்ப்பத்தின் பட அமைப்பைப் போல் ஒரு சர்ப்பத்தை வெள்ளியினால் செய்வித்துக் கொடுத்து ஆலயக் கட்டிடம் அமைக்கப் பொருளுதவியும் செய்து போனார்கள். இதுபோலவே பல அற்புதங்கள்பல பின்னரும்நிகழ்ந்தன.

இலங்கையில் சகல பாகங்களிலுமிருந்து அடியார்கள் ஆண்டுதோறும் இங்கு நடைபெறும் பொங்கலுக்கு வந்து வணங்கி அருள்பெற்றுச் செல்கிறார்கள்.

இன்று நடைபெறவிருக்கும் ஆண்டுற்சவப்பொங்கல் நாளில் மணிக்கூண்டுகோபுர கட்டிட நிதியை முன்னிட்டு ஆண்டுற்சவ மலர் வெளியிடும் இடம் பெறும். இவ் வெளியீட்டு மலரினைச் சிறப்பாகச் செய்து வெளியிட தலைவர் திரு. இ. க. சுப்பிரமணியமும் செயலாளர் திரு சி. சு. சின்னத்தம்பியும் முன்வந்துள்ளனர்.



இவ் விருட்சத்தில்தான் ஒவ்வொரு வெள்ளியிலும் ஆண்டுற்சவப பொங்கலும், சர்ப்பங்களுக்கு பால் பழம் வைக்கப்படுகிறது.

# சுன்னாகம்
# ஹரிஹரபுத்திர ஐயனார்

சிவாகம ஞானசாகரம்
சிவஸ்ரீ சி. நா. சோமாஸ்கந்தக் குருக்கள்

இறைவன் ஜீவராசிகளுக்குத் திருவருள் பாலிக்கும் நோக்குடன் அவ்வப்போது ஒவ்வொருவிதமான வடிவங்கொண்டு திருவிளையாடல் புரிகிறான். அவைகளையே ஒவ்வொரு தெய்வமாக நாம் போற்றி வழிபடுகிறோம். ஒவ்வொரு மூர்த்திகளுக்கும் அடியார்களுக்கு அருள் செய்யும் பாங்கைச் சுவைபடக் கூறும் புராணங்கள் பலவுள.

உலகைக் காக்கும் தெய்வமான விஷ்ணு ஒருசமயம் மோகினிவடிவம் தாங்கியதாகவும், அச்சமயத்து அவரைத் தமது சக்தியென உலகிற்கு உணர்த்தும் நோக்குடன், அழித்து, மறைத்தருளும் தெய்வமான சிவபெருமான் தமது திருக்கரத்தால்பற்றவும், உடனே அவரது ஸ்பரிசத்தினால் அவதரித்த இளங்கொழுந்தே ஹரிஹரபுத்திரன் எனப்படும் ஐயனார் என்றும் கூறுவர். இவரை சாஸ்தா எனவும், ஐயப்பன் எனவும், ஐயன் எனவும் அழைப்பர். இவர் தமது தொழிலாக துஷ்ட நிக்கிரகத்தையும் சிஷ்ட பரிபாலனத்தையும் கொண்டுள்ளார். இவருக்கு பூரணை புஷ்கலை என இரு தேவியரும் உளர். கலியுகத்தில் பூவுலக மாந்தர்களின் காவல் தெய்வமாகவும், எளிதில் காட்சியளித்து அருளும் கருணாமூர்த்தியாகவும் விளங்கும் ஐயனார் பாரதநாட்டின் பல பாகங்களிலும் கிராம பரிபாலகனாக விளங்குகிறார். இலங்கையிலும் ஆங்காங்கு கோவில் கொண்டிருப்பினும் சுன்னாகம் தாழையடி எனும் திவ்விய ஸ்தலத்தில் மிகவும் புதுமையுடன் விளங்குகின்றார்.

இந்த ஸ்தலத்தைச் சூழத் தாழை மரங்கள் அடர்த்தியாக வளர்ந்து ஸ்தலவிருட்சமாக விளங்குகின்றன, வலது பக்கத்தில் 'அமிர்த புஷ்பகானி' எனும் தீர்த்தமும், சந்திரசேகர விநாயகர் சந்நிதானமும் அமைந்து சிறப்பைத் தருகின்றன. 'ஐயனே-எனைக் காப்பாற்று' என்று மெய்யன்புடன் வணங்குவோரை, அறிமுகமான ஒருவர்போல ஐயன் அணுகி வேண்டியன உதவிப் பின்னர் மறைந்தருளும் அதிசயம் இங்குமட்டுமே காணக்கூடிய ஒன்றாகும். தனது பக்தன் ஒருவனுக்கு நீதி கிடைப்பதற்காக நீதி ஸ்தலத்திற்கு வழிப்போக்கனாக வந்து சாட்சியம் கூறிய புதுமையும் இன்றும் முதியோர் கூறிப் பரவசமடைகின்றனர். முன்னொரு சமயம் களவு எடுத்தவனின் கண்ணை மறைத்துக்காட்டிக் கொடுத்ததாகவும் கதை உண்டு.

அதர்மமான செயல்களையும் நீதியற்ற பேச்சுவார்த்தைகளையும் ஆலயத்தில் கையாளுவோர் ஐயனின் கடுங்கோபத்திற்கு ஆளாகத் தவறுவதில்லை. பக்தர்கள் சிலருக்குப் பாம்பாகவும், வேறு சிலருக்கு நாயாகவும் இன்னும் சிலருக்கு மனித உருவிலும் அவ்வப்போது ஐயனார் தோன்றித் தன்னை உணர்த்தியருள்வார்' இங்கு நடைபெறும் திருவிழாக்கள் மிக்க சிறப்புடையன ஐயனாரின் தேர்த் திருவிழாவிற்கு நாட்டின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் திரண்டு பால்க்காவடி, தூக்குக் காவடி, பறவைக் காவடி முதலிய பல நேர்த்திக்கடன்களை ஆற்றுவதுடன் தீ மிதித்து

(13 ம் பக்கம் பார்க்க)

# உள்ளம் திறந்து விட்டார்!

— வித்துவான் சி. ஆறுமுகம் —

சுன்னாகப் பெருமக்கள் வாழ்க வாழ்க
தூய நெஞ்சால் திருக்கோவில் திறந்து விட்டார்!
மன்னுபெருஞ் செயல்புரிந்த மக்கள் தம்மை
வாழ்த்துதற்குக் கொடுத்துவைத்தேன்!
மனிதரெல்லாம்
பன்னரிய பரம்பொருளின் மக்கள் என்ற
பண்புணர்ந்த சமுதாயம் நாமே என்று
உன்னியுணர்ந் தறங் காத்தார் ஓங்கி வாழ்க.
உவமையிலாச் சமுதாயம் உயர்ந்தே வாழ்க!

'ஒன்றுகுலம் ஒருதெய்வம்' என்றே வாழ்ந்த
ஒப்பரிய சமுதாயம் ஒருகாலத்தில்
நன்றிழந்த செயல்புரிந்த தென்னும் மாசை
நம்பியரும் நங்கையரும் அகற்றி விட்டார்!
என்றென்றும் மனிதகுலம் இணைந்தே வாழும்!
ஏற்றமுறும் தமிழினமும்! முனிநா முய்ந்தோம்!
மன்றுபழி கூறுபெருங் கொடுமை நீக்கி
மனிதாபி மானத்தைக் காத்தோர் வாழி!

உள்ளத்தால் உணர்வதனால் தமிழரெல்லாம்
ஒருவரென்ற இலட்சியத்தை உலகங் காண
வெள்ளம்போல் திரண்டுபத்தர் கூட்டங் காட்டி
வென்றதம்மா! சைவம் உண்மை
நெறிதான் என்று
பள்ளத்தில் வீழ்ந்தவரும் உணர்ந்தே விட்டார்!
பாரெங்கும் நன்மைபரந் தெழுக, நன்றே
அள்ளியுண்போம், தெய்வநலம் அருகில் வாரீர்!
அன்புவளர் சுன்னாகம் வாழ்க! வாழ்க!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சிலுவையை கண்டெடுத்த புனிதவதி



இறைமகனார் இயேசு உயிர் நீத்த சிலுவையின் பகுதிகள் இன்று உலகின் பல பாகங்களிலும் பக்தர்களால் மிகுந்த வணக்கத்துடன் ஆராதிக்கப்படுகின்றன. இயேசுவின் மரணத்தின் பின்னர் சிலகாலம் மறைந்திருந்த திருச் சிலுவையை வெளியுலகுக்குக் கொண்டுவந்த பெருமை ஹெலனா சீமாட்டிக்கே உரியது.

இப் புனிதவதியின் இளமைச் சரித்திரம் வரலாற்று ஆசிரியர்கட்கு ஒரு புரியாத புதிர். ரோமானிய சக்கரவர்த்தி யொருவன் இவ் வாரணங்கைத் திருமணம் செய்து பின்னர் மற்றொரு அழகியின் பாலிமையல் கொண்டு அவளைக் கடிமணம் செய்தற்காக ஹெலனாவைத் தள்ளிவிட்டு அவளிடம் பிறந்த புதல்வனைக் கொண்டு சென்றானென்கின்றனர் சில வரலாற்றாசிரியர்கள். இதனால் வாழ்க்கையில் விரக்தியடைந்து ஜெர்மனியிலுள்ள ரீர் என்ற தன் சொந்தக் கிராமத்தில் ஹெலனா வசித்தாளென்றும் அக்காலத்திலேயே அவள் கத்தோலிக்க மதத்தில் சேர்ந்து கொண்டாளென்றும் சொல்லப்படுகிறது.

ஹெலனாவின் புதல்வனே பின்னர் ரோமைச் சக்கிராபத்தியத்தின் பிரபல்யம் பெற்ற மன்னனாக விளங்கிய பெரிய கொன்ஸ்தந்தின் சக்கரவர்த்தி. சக்கரவர்த்தி கொன்ஸ்தந்தின் தமது அன்னையை அழைத்துக் கொண்டபின் கத்தோலிக்க மதத்தில் சிறிது பற்றுக் கொண்டார். அத்தருணத்தில் ரோமானிய சக்கராதிபத்தியத்தை அழிக்கவந்த எதிரிகள்மேல் கொன்ஸ்தந்தின் படையெடுத்துச் சென்றார்.

அஞ்சா நெஞ்சனும் ஆணழகனும் வீரதீர பராக்கிரமம் பெற்றவருமான கொன்ஸ்தந்தின் போர்க்களத்தில் சலிப்படையக்கூடியவொரு நிலையுண்டானது. அத்தருணத்தில் தன் அன்னை வணங்கும் கிறிஸ்துவை நோக்கி அவன் பிரார்த்தித்தான் எனவும் கிறிஸ்துவின் அருளால் அற்புதமானவொரு காட்சியைக் கண்டான் எனவும் அறியக் கிடக்கிறது. காட்சியில் ஒளிப்பிரபை மிக்க சிலுவையொன்று தோன்றியது. இச்சிலுவையின் உதவியால் நீ வெற்றியடைவாய் என்ற அசரீரி வாக்குக் கேட்டது.

கொன்ஸ்தந்தின் உடனடியாகத் தனது கொடியில் சிலுவையடையாளத்தை வரைந்து படையணியின் முன்னணியில் அக்கொடியைக் கொண்டுசெல்ல ஆணையிட்டான். மாபெரும் வெற்றி அவனுடையதாயிற்று. எனவே கிறிஸ்து மதத்தில் சேர்ந்துகொண்டதுமன்றி அம்மதம் பரவுவதற்கு தன்னாலியன்ற உதவிகளும் தந்தான். தனக்கு வெற்றிதந்த கிறிஸ்து நாதருக்குப் புகழ்ச்சியாக ஜெருசலேம் புண்ணிய பூமியிலே கல்வாரி மலையினுச்சியிலே இரட்சகர் சிலுவையில் தொங்கிய தலத்தில மாபெரும் தேவாலயம் ஒன்றைக் கட்டியெழுப்பவும் ஆடத்தங்கள் செய்தான்.

அவனது அன்னை ஹெலனா சீமாட்டி அவ்வாலய வேலைகளைத்தானே மேற்பார்வையிடவும் கிறிஸ்து தொங்கிய புனித சிலுவை மரத்தைக் கண்டடையவும் திட்டமிட்டாள். பெரும்பணத்துடனும் ஏராளமான உதவியாளர்களுடனும் ஜெருசலேம் சென்றாள். கி. பி 326-ம் ஆண்டில் தனது எண்பதாவது வயதில் இறைவனில் நம்பிக்கை கொண்டு தனது தேடுதல் முயற்சியைத் தொடங்கிய ஹெலனாவுக்கு பல தடைகள் காத்திருந்தன. எனினும் விடாமுயற்சியுடன் ஆய்வு வேலைகளைத் தொடர்ந்து இறுதியில வெற்றியும் கண்டாள் அப் புனிதவதி.

கல்வாரிமேட்டின் ஒரு பக்கத்தில் நன்கு அகழ்ந்தபோது கிடைத்தற்கரிய செல்வங்கள் பல அகப்பட்டன. தேவகுமாரனும் இரு கள்வர்களும் அறையப்பட்ட சிலுவைகள், திருமீட்பரின் கரங்களையும் கால்களையும் திருச்சிலுவையுடன் பிணைத்த ஆணிகள், இயேசு அணிந்திருந்ததையலில்லாத நீண்ட அங்கி, இயேசுவின் சடலத்தைச்சுற்றி அடக்கம் பண்ணப்பட்ட திருக்கம்பளம், இயேசுவின் சிலுவை மீது தொங்கவிடப்பட்ட அறிவிப்புப்பலகை என்பன அங்கு காணப்பட்ட புனித பொருட்களாகும். மூன்று நூற்றாண்டுகட்கு உலகை விட்டு மறைந்திருந்த இப் புனித சின்னங்களை மீண்டும் வெளிக்கொணர்ந்த ஹெலனா சீமாட்டி அவை உலகில் உள்ளவரைக்கும் கிறிஸ்தவர்களினதும் தொல்பொருளாராய்ச்சிப் பிரியர்களினதும் நினைவிலிருந்து நீங்காதிருப்பாள் என்பது திண்ணம்.

திருச்சிலுவை பல பகுதிகளாக்கப்பட்டு ரோமைக்கும் உலகின் பல்வேறுபகுதிகளுக்கும் கொண்டுசெலலப்பட்டது. கணிசமான பகுதிகள் ரோமையிலும் ஸ்பெயினிலும் பாதுகாக்கப்படுகின்றன இத்தாலியில் டியுரின் நகரில் இரட்சகர் இயேசுவின் திருச்சடலத்தைச் சுற்றிப் புதைக்க உதவிய திருக்கம்பளம் பாதுகாக்கப்படுகின்றது. இத்திருக்கம்பளத்தில் இயேசுவின் முன்புறமுதுகுப்புற உருவச்சாயல்கள் பதிந்துள்ளன உலக இரட்சரின் உண்மைத்தோற்றத்தை உலகுக்கு அறிவித்துக்கொண்டிருக்கும் இத்திருக்கம்பளத்தில் பதிந்துள்ள உருவங்கள் பல்வேறு விஞ்ஞான மருத்துவ சோதனைகட்கும் படப்பிடிப்புகட்கும் ஆளாகியுள்ளன.

ஜெர்மனியில் உள்ள ரீர் நகரில் இரட்சகரின் தையலில்லாத உள்ளங்கி பாதுகாக்கப்படுகின்றது. திருச்சிலுவையின் மீது பிலாத்து தேசாதிபதியால் தொங்கவிடப்பட்ட அறிவிப்புப் பலகையில் உடைந்துபோக எஞ்சியபகுதி ரோமைநகரில் திருச்சிலுவைத் தேவாலயத்தில் உள்ளது.

ஹெலனா சீமாட்டியால் கண்டெடுக்கப்பட்ட, தேவகுமாரனைச் சிலுவையில் பிணைத்த ஆணிகளிலொன்று மிலான் நகரத்திலும் இன்னொன்று மொன்சா நகரத்திலும் இன்னொன்று ரீர் நகரத்திலும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இப்பொருள்கள் மன்னுயிரை மீட்க மனித உருவெடுத்த இரட்சகர் இயேசுக்கிறிஸ்துவின் திருப்பாடுகளை உலகுக்கு என்றென்றும் நினைவூட்டிக் கொண்டிருக்கும் புனிதசின்னங்களாகும்.

— சாமுவேல் பெனடிக்ற் —

# ஏனிந்தக் கோலம்?

கண்கள் உட்குழிந்து பஞ்சடைந்து சோர்வுற்றும் கன்னங்கள் ஒட்டிக் குழிவிழுந்தும் கொடிய உபாதைக்கு உட்பட்ட வண்ணம் எவரும் கண்டு மனமிரங்கத்தக்க ஓர் உருவம் சிலுவையிலே தொங்கிக் கொண்டிருக்கிறது. தலையில் முள்முடி. இரத்தம் பெருகி ஓடிக் கன்னங்களை நனைத்துச் சொட்டுச் சொட்டாக வடிந்து கொண்டிருக்கிறது. உடலைமூட உடையில்லை. எலும்புகள் யாவும் தெளிவாகத் தெரிகின்றன. விலா எலும்புகள் மெதுவாக மேல் எழுந்து கீழ் இறங்குகின்றன. சுவாசிக்க முடியாத நிலை. இடையைச் சுற்றி ஓர் துண்டு. இரண்டு கைகளும் நன்றாக விரித்து ஆணியால் அறையப்பட்டுள்ளன. நரம்புகள் அறுந்து எலும்புகள் நொருங்கி இரத்தம் வடிகின்றது.

இரண்டு கால்களையும் ஒன்றன்மேல் ஒன்றாக வைத்து நெடிய ஓர் ஆணியினால் அறையப்பட்டுள்ளது.

காண்போரின் உள்ளம் கசியும்வண்ணம் இரத்தம் வடிந்து தரையில் ஓடுகிறது. என்ன கோலம் இது?

காண்போர் இரங்க, எதிரிகள் வீரம்பேசிக் கேலி பண்ண எதையும் தாங்கிக் கொண்டு சிலுவையில் தொங்கும் இறைமகனின் திருக்கோலத்தின் பரிதாப நிலையை எண்ணிப் பார்த்தால் சிந்தை உருகாதார் யார்?

'நீ தேவசுதனானால் கீழே இறங்கி வா' என்று ஒரு சமாரார் ஒலமிட பகடி பண்ணி தகாத வார்த்தைகளைப் பேசிக் கொண்டிருக்க தொங்கிக் கொண்டிருக்கிறார் நம் இரட்சகர்.

[illegible] ஞெகிச் செல்லவிட்டால்

> செங்கடலைத் திறந்துவிட்ட இறைவனுக்கு விலாவை திறந்து செங்குருதி வழிய விட்டது தருமா?

கல்வாரி மலையில் இரு கள்வருக்கு நடுவே சிலுவையில் தொங்கிய நம் யேசுவின் ஆக்கோலத்தைக் காணலாம்.

இளமை தவழ்ந்தஉடுவம் காண்போரைக் கவரும அழகுடன் புதுமைகள்பல செய்து குருடரைப் பார்க்கவும், செவிடரைக் கேட்கவும், மரித்தோரை உயிர் பெறவும்செய்த இறைமகனை ஏனோ மனுக்குலம் இம்சித்தது. தம்மைப் பின்பற்றியவர்க்கு மட்டுமன்றி சகலருக்கும் நன்மை செய்த இறைவனை சிலுவையில் அறைந்து இக்கோலத்தை உண்டு பண்ணியது நம் பாவச் செயல்களே!

மன்னாதி மன்னனாகப் பிறவாது ஏழையின் கோலங்கொண்டு எமக்காக உதவிய இறைவனை ஏனோ வெறுத்தது உலகம். யாதொரு தீங்கும் செய்யாது, மானிடர்க்குத் துயர்தராத இறைவனை இம்சித்தது. எகிப்துநாட்டின் அடிமைத் தளையிலிருந்து மீட்ட இறைவனுக்கு ஏனோ பாரச்சிலுவை பரிசாகக் கிடைத்தது. நாற்பது ஆண்டு களைகப் பாலைவனத்தின் ஊடாக வழிநடத்தி மன்னா எனும் அப்பத்தை வானத்திலிருந்து பெற்றுக் கொடுத்த வல்லவர். தாகமாய் இருக்கிறேன் என்றபோது கச்சக் காடி கிடைத்தது! உன்னை நல் உணவு வகைகளைப் படைத்து இன்புற்றிருக்கச் செய்தமனுமகனதுவிலாவை ஈட்டிகுத்தித்திறந்தது!

எகிப்தியரின் தலைச்சன் பிள்ளைகளைக்கொன்று பாரவோனைச் செங்கடலில் ஆழ்த்தி, எகிப்தின் கொடுமையில் இருந்து விடுவித்த இறைவன் குருக்களின் கையில் ஒப்படைக்கப்பட்டு கொடிய உபாதைக்குட்படுத்தப்பட்டார். கடலைத் திறந்து வழிகாட்டிய இறைவனின் விலா திறக்கப்பட்டது! மேகத் தூணாய் முன்சென்ற இறைவன் பிலாத்துவின் நீதிமன்றம் வரை இழுத்துச் செல்லப்பட்டார்! கானான் தேசத்தின் அரசைப் பெற்றுக்கொடுத்தஉத்தமன் நாணல்தடியால் அடிக்கப்பட்டு முடிசூட்டப்பட்டார். சகலவசதியும் செய்து கொடுத்து உயர்நிலைக்கு மக்களை கொண்டு வந்த இறைவன் சிலுவை மரத்தில் அறைந்து உயர்த்தப்பட்டார்!

என்ன கொடுமை இது? இறைமகனுக்கு ஏன் இந்தக் கோலம்? நம் பாவச் செயல்களின் கொடூரச்சுமையினால் அல்லவா இறைமகன் இக்கோலத்திற்கு உட்பட்டார். இல்லையேல் இறைமகனுக்கு இந்நிலை உண்டாகி இருக்க இடமேயில்லை! மக்களைமீட்க உலகு வந்த இறைமகன் தான் படைத்த தரையில் இடமின்றி பாரச்சிலுவையில் அந்தரத்தில் மெய் நோகத் தம் ஆவியை விட்டார் நமக்காக.

“ நிமால் ”

## தேவதலத் திறவுகோல் சிலுவை வாழ்க!

—கவிஞர் கற்கை சரவணனர்—

பிறந்திட்டான் இவ்வுலகில் பிதாவினோடு
பேதமற இணைந்திருந்த பிரிய மைந்தன்
துறந்திட்டான் தூயபர லோகவாழ்வு
தூதர்களும் ஏதர்களும் கீதம் பாடச்
சிறந்திட்டான் கன்னியவை சேயனாகத்
தீர்க்கருரைப் படிபெத்லேம் ஆனகத்தில்
திறந்திட்டான் தெய்வதலக் கதவம் பாரீர்
தீதுகளைத் தடைகவெனச் சிலுவை யாலே.

நேயமுறு சுதன்யேசு அருளே வாழ்க
நித்தியபரம் பிதாவினிறை அன்பு வாழ்க
தூயபரி சுத்தாவி ஐக்கியம் வாழ்க
துகடீர்மெய் யடியார்கள் சங்கம்வாழ்க
காயமுறு முடலுணவா மப்பம் வாழ்க
கசிந்துபொழிந் திடுசெந்நீர்ப் பானம் வாழ்க
ஞாயமுறு நிவேதனமாய் ஆவி நல்க
நம்மீட்பரி சுமந்ததிருச் சிலுவை வாழ்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலப்பதிகாரத்தில் சிந்தையைப் பறிகொடுத்த சிங்கள எழுத்தாளர்

அண்மையில் யாழ்ப்பாணநகருக்கு வருகைதந்திருந்த மக்கள் எழுத்தாளர் முன்னணியின் (சிங்கள) ஐந்து பிரதிநிதிகளுள் தமிழைக் கலைமாணிப் (பீ. ஏ.) பட்டப்படிப்புக்கு ஒரு பாடமாக எடுத்துச் சித்தியடைந்த ஒருவரும் இருந்தார். அவர்தான் விசுவநாத் வச்சிரசேன அவர்கள் இவரது தமிழ்ப்புலமைஇவரை இன்று அரசமொழித் திணைக்களத்தில் தமிழ் மொழிபெயர்ப்பு கண்காணிப்பாளர் பதவிக்கு உயர்த்திவிட்டிருக்கிறது



## பேட்டி: விசுவநாத்வச்சிரசேன

பாளியிலும் சிங்களத்திலும் பண்டிதர்ப் பட்டம் பெற்றிருக்கிறார். இத்தோடு வடமொழி, தமிழ், ஆங்கிலத்திலும் நல்ல புலமை உள்ளவர். தமிழில் சில கட்டுரைகளைச் சிங்களத்திலிருந்து மொழிபெயர்த்து எழுதியுள்ளார்.

மணிமேகலைபற்றி ஆங்கிலத்தில் ஒரு அரிய ஆராய்ச்சிக்கட்டுரையும் எழுதியிருக்கிறார்.

முப்பத்தெட்டு வயசுநிரம்பிய இவர் பார்வைக்கு ஒரு 'பொடியனைக்' காட்சி தருகிறார் திருமணம் செய்துகொண்ட இவருக்கு மூன்று குழந்தைகள் உண்டு. மூத்த குழந்தை ஆண் — மற்றைய இரண்டும் பெண்குழந்தைகள். சரளமாகத் தமிழில் உரையாடும் இவர் பழகுதற்கு இனியவர் — நடையுடையில் எளியவர்.

அவரிடம் எனக்கு ஏற்கனவே சிறு தொடர்பிருந்தது. மலேசியாவிலும், தமிழ் நாட்டிலும் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மகாநாடுகளில் ஆராய்ச்சிக்கட்டுரை படிக்கும்படி தூண்டினேன். சந்தர்ப்ப வசதியீனத்தால் அவர் கலந்துகொள்ளவில்லை. அவரிடம் சில கேள்விகளைக் கேட்டேன். அதற்கு அவர் மகிழ்ச்சியுடன் அளித்த விடைகள் இதோ:

கே: உங்களைத் தமிழ்படிக்கத் தூண்டிய சூழல், காரணம் என்ன? சிறுவயதில் இருந்தே தமிழ் பரிச்சயம் உண்டா?

சிறுவயது தொடக்கம் தமிழ் படிக்க ஆர்வம்கொண்டவனாக இருந்து வருகின்றேன். முதன்முதலில் பாலபோதினி முதற்புத்தகத்தை ஒரு பௌத்த பிக்குவின் துணைகொண்டு படிக்கக் கற்றுக்கொண்டேன். பின்னர் அதே பிரிவேனாவில் சிங்களம், பாளி, வடமொழி ஆகிய மொழிகளைப் படிக்கலானேன். சிங்களத்திலும் பாளிமொழியிலும் பண்டிதர்ப்பரீட்சையெழுதி சித்தியும் அடைந்தேன். அப்பொழுது எனக்கு வயது 20 பாலபோதினி இரண்டாம் புத்தகம்வரை படித்த எனது தமிழ்ப்படிப்புக்கு முற்றுப்புள்ளிவைக்கநேரிட்டது. ஓராசிரியரின் துணையுடன் பாலபோதினி இரண்டாம் புத்தகம்வரைதான் படித்து முடித்தேன்.

பிறகு தபாற்கந்தோர் பணியாளர் ஒருவர் என்னிடம் தமிழ் எழுத்துக்களைப் படிக்க வந்தார். அவருக்கு தமிழ்நெடுங்கணக்கினை முதலில் சொல்லிக்கொடுத்தேன்; பின்னர் தமிழ்கற்பதில் அவருக்கும் அவா உண்டானபடியால் நான் தமிழைப் படிப்பிக்கலானேன். அப்பணியாளருக்குச் சொல்லிக்கொடுக்கவேண்டியதால் நானும் தமிழை நன்றாகப் படிக்கத் தொடங்கலானேன். தமிழ்த் தினசரிகளையும் சஞ்சிகைகளையும் நாவல்களையும் வாசிக்கலானேன். இப்படி வாசிக்கும் பழக்கம் என்னை எழுத்துலகிற்கு அழைத்துக் கொண்டுசென்றது. கட்டுரைகளை எழுதப்பயின்றேன்.

கே: பல்கலைக்கழகத்தில் யாரிடம் கல்வி பயின்றீர்கள்?

பின்னர் தமிழ்மூலம் எஸ். எஸ். ஸி. எடுத்து சித்தியடைந்தேன். அடுத்த ஆண்டில் அதாவது 1958-ம் ஆண்டில் பல்கலைக்கழக புகுமுகப் பரீட்சையிலும் சித்தியடைந்து பேராதனைப் பல்கலைக்கழகத்திற் சேர்ந்தேன். அங்கு அமரரான பேராசிரியர் கணபதிப்பிள்ளை, பேராசிரியர் வி. செல்வநாயகம், தற்போதைய பேராசிரியர் சு. வித்தியானந்தன், கலாநிதி சதாசிவம் ஆகியோரிடம் தமிழ் கற்றுவந்தேன்.

கே: தமிழ்மொழி பற்றித் தங்கள் கருத்தென்ன?

ப: தமிழ்மொழி ஒரு சிறந்த மொழியாகும். சிங்கள மொழியுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது அதன் பழமை தெரிகிறது. பழமையில் புதுமையினைக் காணத் தமிழைப் படியுங்கள் என்று நான் தமிழர் அல்லாதவரைக் கேட்க விரும்புகின்றேன்.

கே: பழந்தமிழ் இலக்கியத்தில் உங்களுக்குப்பிடித்த தொகை எது? ஏன்?

பழந்தமிழ் இலக்கியங்களுள் அகநானூற்றுக்கும், கலித்தொகைக்கும் எனது மனதைப் பறிகொடுத்துள்ளேன். இவ்விரண்டு நூல்களிலும் அக்காலத்து மக்களின் அகவாழ்வை மட்டுமன்றி சமுதாய அமைப்பையும் சங்கப் புலவர்கள் மிகவும் தெளிவான இலக்கிய ஓவியங்களாகப் படைத்துள்ளார்கள்.

கே; தமிழ்க் காப்பியங்களுள் உங்களுக்குப் பிடித்தமானது எது? ஏன்?

ப-தமிழ்க் காப்பியங்களில் இளங்கோவடிகள் யாத்த சிலப்பதிகார காப்பியத்தைப் பெரிதும் விரும்புகிறேன்: இளங்கோ அடிகளின் சொல்லாட்சியைக் கண்டு பிரமித்துப்போகும் அதே நேரத்தில் மனித உள்ளத்தின் ஆழத்தை அளவு போடும் அவர்தம் நுண்ணறிவினையும் கண்டு மனம் பூரிக்கிறேன்.

கே: பௌத்த காப்பியமான மணிமேகலையை சிங்களத்தில் காப்பிய வடிவில் ஆக்க முயல்வீர்களா?

ப: மணிமேகலை ஏற்கெனவே சிங்களத்தில் சம்பு வடிவில் ஹிஸ்ஸல்லே தம்மரத்தின தேரோ அவர்கள் யாத்துள்ளார். அதனை மீளவும் காப்பியவடிவில் இயற்றுவதில் நோக்குவதில் நோக்கம் இராது.

கே- நீங்கள் தமிழில் எழுதிய கட்டுரைகள் எத்தனை? எவையெவை?

ப: தினகரன் பத்திரிகையில் விஞ்ஞானம் பற்றிய கட்டுரைகள் வெளிவந்து கொண்டிருக்கும் 'களஞ்சியம்' என்னும் கலை அம்சத்தை முதன்முதலில் துவக்க உதவினேன் அது 1965 ஆம் ஆண்டு மேமாதத்தில் நடந்தது, அத் தொடரில்12 கட்டுரைகளை சிங்களத்திலிருந்துமொழிபெயர்த்து அளித்தேன் நான் பல்கலைக்கழக மாணவனாக இருந்த காலத்தில் கட்டுரைகள் சில எழுதியுள்ளேன், ஏன் 1963 ஆம் ஆண்டில் 'ஈழநாடு' பத்திரிகையிலும் நவாலியூர் சோ. நடராசன் தமிழில் இயற்றிய 'பொம்மை வண்டி' என்னும் நாடக நூல் பற்றிய விமர்சனக் கட்டுரையை எழுதியுள்ளேன்.

கே-தற்காலத்தமிழ் இலக்கியத்தில் உங்களுக்குப் பிடித்தமானது எது?

ப: தற்காலத் தமிழ் இலக்கியத்தில் கல்கியின் சரித்திர நாவல்களை மிக ஆவலுடன் படிக்கிறேன். அகிலன் எழுதிய நாவல்களையும் படித்திருக்கிறேன். வையாபுரிப் பிள்ளையின் தற்கால ஆராய்ச்சி நூல்களையும் நான் படித்துள்ளேன்.

கே: மகாகவி பாரதி பாரதிதாசன் ஆகியோரைப் பற்றிய உங்கள்கருத்துக்கள் என்ன?

ப: மகாகவி பாரதி புதுயுகப்புரட்சியின் கர்த்தாவாக கொள்ளத் தக்கவன். அவரால் பாடப்பெற்ற பாடல்களின் புதுமையையும் கடவுள் பக்தியையும் காண்கின்றேன். பாரதி இனவெறிக்கும் பிரிவினைக்கும் எதிராகபோராடியவர். பாரதிதாசன் சீர்கெட்டு அழிந்துபோன தமிழ்சமூகத்தைத் தட்டியெழுப்பி மூட நம்பிக்கைகளைக் களையும்படி தமது கவிதாசக்தியால் அறிவின்மை இருளில் குருடரான மக்களை எள்ளிநகையாடியவரே. பால்ய திருமணம் சாதிக்கொடுமை ஆகியவற்றிற்கு எதிராகவே புரட்சிக் கவிகளை எழுதியவர்.

கே: சிங்கள-தமிழ் இலக்கிய ஒருமைப்பாடுகள் பற்றிய உங்கள் கருத்து என்ன?

ப: இந்த ஒருமைப்பாடு கண்டிமன்னர்கள் அவையில் இருந்தபுலவர்களால்ஓரளவு சாதிக்கப்பட்டுள்ளது என்பதைக் கூறவிரும்புகின்றேன். கண்ணகியின் கதை சிங்களத்தில் "கோவலன் கதாவ" என்னும் பெயரில் கவிவடிவில் அவர்கள் யாத்துள்ளனர். அது மட்டுமன்றி "வேதாளன் கதாவ" "மகா பதரங்க சாதகய" போன்ற பல கவிதைகள் தமிழ் மூலத்திலிருந்து சிங்களத்தில் யாத்துள்ளனர். தமிழ் பிரபந்த வகைகள் கண்டிய மன்னர் அவைப்புலவர்கள் காலத்தில் சிங்களத்தில் எழுதப்பட்டு வந்திருக்கின்றன. அவற்றுள் "பரணி" பிரபந்தம், "ஹட்டன் கவி" என்னும் பெயராலும் "மாலை" பிரபந்தம் "மாலய" என்னும் பெயராலும் சிங்களத்தில் இயற்றியுள்ளனர். ஆகவே இந்த ஒருமைப்பாடு புதியதல்ல- இது பழமைவாய்ந்த நீண்ட வரலாறு என்று கூறலாம்.

கே: சிங்களவர்-தமிழர் நிரந்தர ஒற்றுமைக்கு நீங்கள் கூறும் வழி என்ன?

(11) சிங்களவர்- தமிழர் நிரந்தர ஒற்றுமைக்கு நான் காணும் வழிகள்:-

(அ) பொதுமக்கள் தாமே நெருங்கிப் பழகுவதற்கு அமைந்துள்ள வாய்ப்புகளைத் தடை செய்யாது விடல் வேண்டும்.

(ஆ) ஈரினத்தவரும் பரஸ்பரம் மற்றவரின் மொழியைக் கற்றறிதல்வேண்டும். இதற்கு அரசாங்கம் வழிவகைகளைச் செய்து கொடுக்கவேண்டும். இத்துறையில் இலங்கை வானொலி தொடங்கியுள்ள முயற்சி பாராட்டுக்குரியது.

(இ) பொதுமக்கள் மத்தியில் நிலவும் மூடநம்பிக்கைகளை அகற்றல்வேண்டும்.

(ஈ) பொருள் படைத்தவர்களுக்கும் பொருள் இல்லாதவர்களுக்கும் இடையில் உள்ள பிளவு அகற்றப்படல் வேண்டும்.

(உ) அரசியல்வாதிகளின் விஷமப்பிரசாரங்களுக்குத் தடை விதித்தல்வேண்டும்.

(ஊ) "யாதும் ஊரே யாவரும் கேளிர" என்ற பழம்பெரும் பொதுவுடைமைக் கொள்கைக்கிணங்க வாழ மக்களுக்கு அறிவு புகட்டல் வேண்டும்.

(12) நவீன சிங்கள-தமிழ் இலக்கியப் படைப்புக்களை பரஸ்பரம் சிங்கள - தமிழ் மக்கள் அறிய நீங்கள் கூறும் வழி என்ன?

நவீன சிங்கள-தமிழ் இலக்கியப் படைப்புகளைப் பரஸ்பரம் இரு மொழி பேசுவோர் அறிய நல்ல மொழிபெயர்ப்பாளர்களைக் கொண்டு சிறந்த இலக்கியங்களை இரு மொழிகளிலும் பெயர்த்து புத்தகவடிவில் உதவவேண்டும். இத்தொண்டினை நிறைவேற்ற ஈரினங்களிடையில் உள்ள வள்ளல்களும் அரசாங்கமும் நன்கொடைகளை அளித்து உதவ முன்வரல்வேண்டும். ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலம், யுனெஸ்கோ போன்ற அமைப்புகள் இப்பணிக்குச் சிறந்த முறையில் உதவலாமெனக் கருதுகின்றேன்.

(13) உங்கள் யாழ் விஜயம் திருப்திகரமாக இருந்ததா? உங்களைக் கவர்ந்தது எது?

யாழ். விஜயம் வெற்றிகரமாகவே நடந்தேறியது. எனக்கு நல்ல திருப்தி. யாழ்ப்பாணக் குடாநாட்டுக் கமத்தொழில் முறைகள் எனக்கு மிகவும் பிடித்தமானவை. யாழ்ப்பாணத்துச் செம்மண்ணும் என் இதயத்தைக் குளிரச் செய்தது.

(14) "ஈழநாடு" மூலம் வாசகர்களுக்கு விடுக்கும் செய்தி என்ன?

"ஈழநாடு' சிங்கள எழுத்தாளர் வருகையை ஆத்மசுத்தியோடு வரவேற்றது; ஆசிரியத் தலையங்கம்கூட எழுதியது. சிங்கள எழுத்தாளர்களை அறிமுகம் செய்து வைத்தது, சிங்கள-தமிழ் நல்லுறவை வளர்க்க "ஈழநாடு" முயல்கிறது. இந்தப் பணி தொடரவேண்டும். அதற்குத் தமிழ் மக்கள் நல்லாதரவு நல்கவேண்டும்.

பேட்டி கண்டவர்: ஆ. தேவராசன்

---

### மானிப்பாயில்

# ஞானப்பிரகாசர் நினைவாக உருவாகும் தேவாலயம்

மானிப்பாயில் அர்ச். அந்தோனியாருக்குப் புதிய ஆலயம் ஒன்று அமைப்பதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இதற்கான ஏற்பாடுகள் பங்குத் தந்தை வண. எஸ். ஜே. இம்மானுவல் சுவாமிகள் தலைமையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன இவ்வாலயம் தமிழ் மொழிக்கும், சமயத்திற்கும், சமூகத்திற்கும் அரும்பணியாற்றிய நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் நினைவாக அமையும் இதற்கான அத்திவாரக்கல் சுவாமிகளின் சிராத்ததினமான கடந்த மாதம் 13-ந் திகதி நாட்டப்பட்டது. இவ்வாண்டு ஜூன்



மாதத்தில் வரும் அந்தோனியார் திருநாளுக்கு ஆலயத்தின் ஒருபகுதியையாவது நிறைவேற்றும் வகையில் வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

இவ்வாலயத்திற்கான திட்டம் சுவாமி ஞானப்பிரகாசர் பிறந்த பூமியிலேயே அவர் மறைவுக்குமுன் நிறைவேற்றுமுகமாக ஆரம்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இத்திருப்பணி வேலைகளுக்கு ஊர்ப் பொதுமக்களிடமிருந்து நிதிசேகரிக்கப்பட்டு வருகிறது கட்டிடத்திற்குத் தேவையான பொருட்களையும் மக்கள் நன்கொடையாக வழங்கிவருகின்றனர், பலவாலியர்கள் தனியாக [illegible] தானப்பணியில் ஆர்வத்துடன் [illegible]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கதவு திறந்தது!

## — நா. மகாலிங்கம் —

டண் டாண், டண் டாண், டண் டாண். யாழ்ப்பாணத்தின் வடபாலுள்ள அந்தக் கிராமத்தின் அமைதியை அழிப்பதற்கு கோவில் மணி அப்படி அடிக்கவில்லை. அங்கு வசிக்கும் அறியாமையை அழிப்பதற்குத்தான் அந்தமணி தினந்தோறும் அடிக்கிறது. கிராமத்தில் மிகவும் பிரசித்திபெற்ற கோவிலான கலியுகவரதன் கோவிலின் மணியோசைதான் அது. அந்தக் கோவில் குமாரசுவாமிக்குருக்களுடைய பரம்பரைச் சொத்து. அதைவிட அவருக்குள்ள மற்ருெரு செல்வம் அவருடைய மூன்றுவயதுப் பாலன். அவர் மனைவி பிள்ளையை அவரிடம் கொடுத்துவிட்டு அமரத்துவம் அடைந்து இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. அன்று தொட்டு தன் குழந்தைக்கும் கலியுகவரதனுக்கும் தொண்டுசெய்வதே தன்கடமையாகக் கொண்டிருந்தார் வசதிகளிருந்தும் மிகவும் எளிமையாக அறவாழ்வு வாழ்ந்துவந்தார். கோவில் கருமங்கள் மிகவும் சிறப்பாக நடைபெற்றன. நாள்தோறும் பூசைகள், வருடந்தோறும் திருவிழாக்கள் எல்லாம் நடைபெற்றுவந்தன. எல்லாம் ஆகம விதிப்படி நடைபெற்றுவந்தன. ஆனல் சென்றவருடம்தான் அவருக்குச் சோதனை ஏற்பட்டது. அக்கிராமத்தில் உள்ள தாழ்த்தப்பட்டவர்கள் தாங்கள் உள்ளேநின்று வழிபட உரிமை கோரினூர்கள். குருக்களோ ஆகமவிதியினின்றும் வழுவ ஒருபோதும் ஒப்பவில்லை. அதன் விளைவு, கோரிக்கை கலவரமாகியது. திருவிழாவே நிறுத்தப்பட்டது. இருந்தும் கலவரம் நிற்கவில்லை. ஒருநாள் இரவு அக்கினி பகவான் அக்கிராமத்தை ஆட்கொண்டார். அதனுல் வீடுகள் பொருள்கள் இழந்தவர்கள் எத்தனையோபேர். எரிகாயங்களுக்குள்ளானவர்கள் எத்தனையோபேர். சிவராமன் இழந்ததோ தன் தாயின் உயிரை. சிவராமன் தாழ்த்தப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவன். மிகவும் கடவுள்பக்தி உடையவன். தன்தாயை இழப்பதற்குக் காரணமாக இருந்த அக்கிராம மக்களின் அறியாமையை நீக்கும்படி ஆண்டவனிடம் பிரார்த்தித்ததை தவிர வேருென்றும் செய்யவில்லை, செய்ய முடியவுமில்லை. அவனைப் பொறுத்தவரையில் அக்கிராமமக்கள் அனைவருமே அறியாமையில் வாழ்ந்தார்கள். ஆகமங்களை ஆதாரம் காட்டி தாழ்த்தப்பட்டவர்களுக்கு மனித உரிமை கொடுக்க மறுப்பது குருக்களினதும் அவரைச் சார்ந்தவர்களினதும் அறியாமை. மனித உரிமையைப் பெறுவதற்கு கொம்யூனிஸ்டுகளின் பேச்சை நம்பிக்கலவரம்செய்து பொருள் சேதம், உயிர்ச்சேதம் முதலியவற்றிற்காளாவது தாழ்த்தப்பட்டவர்களின் அறியாமை. இதை இருபாலாரும் உணர்ந்து சமாதானமாக ஒன்றுசேர வழிவகுக்க வேண்டும் என்று ஆண்டவனை வேண்டிக்கொள்வான். வெளியில் சொல்வதில்லை. காரணம் வெளியில் பேசினுல் இருபகுதியாருமே அவனை எதிர்ப்பார்கள்.

இவனுடைய நண்பனுன வரதனோ கடவுள் பக்தியில்லாதவன். அவன் ஒரு கொம்யூனிஸ்ட். கொம்யூனிஸம் என்பதற்கு அவனுடைய விளக்கம் தாழ்த்துப்பட்டவர்களுக்கு விடுதலை அளித்தல் என்பதுதான் அவனுக்குத் தாழ்த்தப்பட்டவர்களிடையே நல்ல ஆதரவு இருந்தது. நல்ல ஆதரவென்ன சிவராமனைத் தவிர்ந்து அத்தனைபேரும் அவனை ஆதரித்தார்கள். சிவராமனுக்கு இந்தப் புரட்சியெல்லாம் பிடிக்காது. இம்முறையால் வீண் நஷ்டம்தான் உண்டாகும். உரிமை கிடையாது. அப்படிக்கிடைத்தாலும் அதனுல் அமைதி இருக்காது. தொடர்ந்து சண்டைச்சரவுகள் இருந்துகொண்டே இருக்கும். சமாதானமாக உண்மையான மனமாற்றத்தால் கிடைக்கும் உரிமையே அன்பையும் அமைதியையும் நிலைநாட்டும் என்பது சிவராமனின் கொள்கை. இந்தச் சமாதான மனமாற்றம் என்பது இந்த யுகத்திலும் நடைபெருது. விடுதலைக்கு வழி புரட்சிதான் என்பது வரதன் கொள்கை.

அடுத்தவருடம் திருவிழாக்காலம் நெருங்கிக்கொண்டிருந்தது. அதற்கு வேண்டிய ஆயத்தங்களைக் குருக்கள் சிறுகச் சிறுகச் செய்யத் தொடங்கிவிட்டார். இம்முறையும் திருவிழா நடைபெறுமோ இல்லையோ என்ற சந்தேகம் இருந்து கொண்டுதான் இருந்தது. 'நான் சொல்வது ஒன்றும் இத் தாழ்த்தப்பட்டவர்களுக்குப் புரியுதில்லையே. ஆகமத்தையே காணுதவர்களுக்கு ஆகமத்தைப்பற்றி என்ன தெரியும். ஆண்டவன் சந்நிதானம் அசிங்கப்படுத்தக் கூடிய இடமா? ஆண்டவனே கலியுகவரதா, நீதான் இவர்களுடைய அறியாமையை நீக்கி இவ்வருடத் திருவிழா சிறப்பாகச் சண்டையில்லாமல் நடைபெற வழிவகுக்க வேண்டும்' என்று தினந்தோறும் ஆண்டவனை வேண்டிக்கொள்வர்.

தினந்தோறும் தவருமல் பூசைக்குச் சென்றுவந்தவர்களில் சிவராமனும் ஒருவன். ஆனல் இப்பொழுது அவன் செல்வதில்லை. காரணம் கடவுளுக்குப் பூசை நடந்தாலும் கதவு பூட்டப்பட்டுத்தான் இருக்கும். ஆகையால் அவன் வீட்டிலேயே கடவுளைத் தியானித்து வந்தான். "இந்த வருடமாவது இக்கிராம மக்களின் அறியாமை நீங்கி, எல்லாரும் சமம் என்ற உண்மையை குருக்களைச் சார்ந்தவர்களுக்கும்-சமாதானம்தான் சிறந்தது என்பதைமற்றவர்களுக்கும் உணர்த்தி திருவிழா சிறப்பாக நடைபெறநீதான் வழிவகுக்கவேண்டும்'' என்று தினந்தோறும்கலியுகவரதனை வேண்டிக்கொள்வான்

இந்தமுறைத் திருவிழாவின்போது எல்லோரும் சமமாகநடத்தப்படவேண்டும், அல்லாமல் எங்களுக்குக்கதவு திறந்து விடாவிட்டால் இக்கோவிலுக்கே கதவு இல்லாமல் செய்துவிடுவேன் என்று சபதமெடுத்திருந்தான், வரதன்.

நாட்களோ இது ஒன்றையும் பற்றிக் கவலைப்படாமல் நகர்ந்து கொண்டிருந்தன. நாளை கொடியேற்றம், திருவிழாவுக்கு வேண்டிய ஏற்பாடனைத்தும் குருக்கள் முடித்துவிட்டார். திருவிழாவை ஆடம்பரமில்லாமல் நடத்தத் தீர்மானித்திருந்தார். அன்று மாலை பரதனின் தலைமையில் ஒரு குழு குருக்களைச் சந்திக்கச் சென்றது. அவர்கள் வருவதைக் கண்ட குருக்கள் அவர்களை வாசலிலேயே வரவேற்ருர். காரணம் தாழ்த்தப்பட்டவர்களை வீட்டுக்குள் விடுவதில்லை. விவாதம் வாசலிலேயே ஆரம்பிக்கப்பட்டது. ''நாளை திருவிழாவின்போது கோவில் கதவு திறக்கப்படுமா?'' என்று வரதன் கேட்டான். அவரவர்கள் அவரவர்களுக்குரிய முறைப்படி அதாவது ஆகமத்தில் கூறியுள்ளபடி நடந்தால் கதவு திறக்கப்படும். ஆகமத்தைஎதிர்த்துஆண்டவன் சந்நிதானத்தை அவமதித்தால், திருவிழா கதவு மூடியபடியே நடைபெறும்'' என்ருர் குருக்கள்.

''அதாவது எங்களை உள்ளே செல்ல அனுமதிக்கமாட்டீர்''

''அனுமதிதர நான் யார்? ஆகமத்தில் உள்ளபடி நடப்பதுதான் ஆண்டவனுக்கு நான்செய்யும்சேவை'' என்ருர் குருக்கள்.

''ஆகமத்தைப்பற்றி எங்களுக்குக் கவலையில்லை. அதை எதிர்த்து உள்ளே நுழைந்தால் என்ன செய்வீர்களாம்.''

''நான் என்ன செய்யமுடியும். ஆண்டவனுக்கே பொறுக்காது. சென்ற வருடம் ஆண்டவன் என்ன செய்தார், அக்கினிபகவானை அனுப்பவில்லையா?''

''வீடுகளுக்கு நெருப்பு வைத்தது ஆண்டவன் என்கிறீரா?''

''அறியாமல் பேசப்படாது. ஆண்டவன் ஒருபோதும் நேரடியாகச்செயற்படுவதில்லை. அடியார்கள் மூலம்தான் சத்தியத்தை நிலைநாட்டுவார். அறுபத்து மூன்று நாயன்மார்களின் சரிதம் படிக்கவில்லையா நீங்கள்? படித்திருந்தால் இதெல்லாம் விளங்கும்'' என்ருர் குருக்கள்.

'அந்த அக்கினியை அனுப்ப ஆண்டவனுக்கும் அவரின் அடியார்களுக்கும்தான்தெரியுமா என்பதை நாங்களும் பார்த்துவிடுகிறேம்' என்று கூறிவிட்டு அவர்கள் சென்றுவிட்டார்கள்.

குருக்களுக்குத் திகில்பிடித்துவிட்டது அப்படிப்பேசியிருக்கப்படாது என்று நினைத்தார். பேசினுலென்ன உண்மையைத்தானே கூறினேன். அத்தனையும் ஆகமத்திலுள்ள விஷயம்தானேஎன்று நினைத்துக்கொண்டாலும் விபரீதம் விளைந்துவிடாதிருக்கப் பொலிசுக்கு விபரத்தைத் தெரிவித்தார். திருவிழாவின்போது கோவிலுக்குப் பலத்த பாதுகாப்பளிக்கப்படுமென்று இன்ஸ்பெக்டர் கூறியனுப்பினூர். அன்றிரவு அவருக்கு உறக்கம்வரவேயில்லை. புரண்டு புரண்டு-படுத்தார். கண்கள் மூடவில்லை. நேரமோடிக்கொண்டிருந்தது எவ்வளவு நேரந்தான் யோசித்துக்கொண்டிருப்பது மணிக்கூட்டைப் பார்த்தார் மூன்று மணி. வழக்கமாக நான்கு மணிக்கு ஸ்நானம் செய்யச்செல்லும் அவர் இன்று மூன்று மணிக்கே எழுந்துவிட்டார். மகனைப் பார்த்தார் ஏதுமறியாத அக்குழந்தை அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தது. நிம்மதியாக ஸ்நானம் செய்யச் சென்ருர்.

சிறிது நேரத்துக்கெல்லாம் ஒரு வெடிச்சத்தம் கேட்டு அதிர்ச்சியால் அசைவற்று நின்ருர் குருக்கள். திரும்பிப் பார்த்தார் அவருடைய வீடு தீப்பற்றி எரிந்துகொண்டிருந்தது. அப்படியென்ருல் என் வீட்டுக்கு வெடிவைத்துவிட்டார்களோ? யோசிக்கத் தலைசுற்றியது அப்போது அவருக்குத் தன் பிள்ளையின் நினைவு வந்தது. பாபு என்று கதறியபடியே வீட்டை நோக்கி ஓடினூர். ஆனல் அவரை, அவர் வீட்டிற்குள் செல்ல அக்கினிபகவான் அனுமதிகொடுக்கவில்லை அவ்வளவுக்கு ஆக்கிரமித்துக்கொண்டிருந்தான் தீப்பற்றியெரிகிறதே தவிர வெடிவைத்த அடையாளம் இல்லை. என்ன நடந்தது என்று விளங்காமலும் என்ன செய்வதென்று தெரியாதும் திகைத்துப்போய் நின்ருர் குருக்கள்.

அந்நேரம் ஓர் உருவம் அக்கினிபகவானின் கோபாவேசத்தையும் பொருட்படுத்தாது வீட்டிற்குள் பாய்ந்தோடியது. சிறிது நேரத்திற்கெல்லாம் அவ்வுருவம் குருக்களின் குழந்தையை மார்போடணைத்தபடி வெளியே வந்தது. இருவருக்கும் பலத்தஎரிகாயம். அதற்குள்ளாக அங்கே கூடிவிட்ட சனக்கூட்டம் இருவரையும் பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டுசென்றது. ஐயரின் வீட்டுக்குத் தீவைத்த விடயமும் ஆண்டவன் திருக்கதவுக்கு வெடிவைத்த விடயமும் காட்டுத்தீயை விட வேகமாகக் கிராமம் முழுவதும் பரவியது.

எரியும் வீட்டிற்குள் அகப்பட்ட ஐயரின் பிள்ளையையும்அதைக்காப்பாற்றிய சிவராமனையும் காண அந்தக் கிராமமே அன்று பெரியாஸ்பத்திரியில் கூடியிருந்தது. குழந்தைக்கு அவ்வளவு ஆபத்தில்லை. ஆனல் சிவராமனின் உயிரை அவனுடலுக்குள் நிறுத்திவைக்க யமனுடன்வைத்தியர்கள்போராடிக்கொண்டிருந்தார்கள். சிவராமனுக்கு அறிவு வந்தது. குருக்களை அருகே வரும்படி சைகை செய்தான். அவரும் சென்ருர். தாழ்த்தப்பட்ட குலத்தைச் சேர்ந்த அவன் அவருடைய வீட்டிற்குள் சென்றதற்காகவும் அவருடைய மகனைக் கையால் தொட்டு அவர்களின் பரம்பரை ஆசாரத்துக்குப் பங்கம் விளைவித்ததற்காகவும்- தன்னை மன்னிக்கும்படி

(12-ம் பக்கம் பார்க்க)

''லேடன்'' LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ கால்மேஸ்
(Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74 A, கே. கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம்.
போன்: 330

## யாழ்ப்பாணச் சிறப்பு

எந் நாட்டிலுஞ் சிறந்தது யாழ்ப்பாண தேசமே. அந்நாட்டில் வளர் கல்விஅதிகப்பிரகாசமே. அந்நிலத்தோரனை வருந் தேவ பத்திக்குரியவர்களே. அறிவிலுமிகப் பெரியவர்களே. வேதாகமங்களில் விசுவாசர்களே மிகவுமன்புள்ள நேசர்களே. எப்படியெனில் யாம் பிறந்துவளர்ந்த நாற்பதின் மூன்று வருடத்துக்குள்ளே அநேக நாட்டைக் கண்டனம் அந் நாட்டுள்ளோர் சிநேகத்தையுங் கொண்டனம் யாழ்ப்பாணத்தார் பேசுந்தமிழ் மொழித திறம்போலேனையோர் பேசக் கேட்டிலம் ஏனையோர் பேசு மொழியெல்லாந் தமிழ்மொழியென்றே திட்டிலம்; ஏனெனில் யாழ்ப்பாணத்தார் தமிழொன்றே பேசித்தேறுகிருர்கள் மற்றநாட்டார்தமிழ்லுக்குத் தெலுங்கு கன்னடங் கலந்து கூறுகிருர்கள். யாழ்ப்பாணத்தாரெழுதுவன வெல்லாந் தமிழிற்கொப்பே. மற்றவர்களெழுதுவனவெல்லாந்தமிழிற்குத் தப்பே. ஆதலால் எல்லா நாட்டாருந் தமிழ் நன்கு பேசவும் எழுதவும் பிரயாசப்படும்படி சிந்தித்துத் துதிக்கின்றனம். வந்தித்து மதிக்கின்றனம். எம்மை இகழ்ந்தேசினவர்களுக்கும் புகழ்ந்து பேசினவர்களுக்கும் இணக்கமாக வந்தனம் வணக்கமாகத் தந்தனம். யாந்தென்ளுடு துறந் தெந்நாட்டிற் புகுந்தமையால் இலக்கண விலக்கியக் களஞ்சிய மெழுதா நின்றனம். அவை இனிவரும் தாரகை வாசித்துவரும் பெரியோர்களுக்குத் தோத்திரம் மாணாக்கர்களுக்காசீர்வாத மாத்திரம்.

இப்படிக்கு

தமிழ்ப்புலவராகிய வேதகிரி முதலியார்

(உதயதாரகை 9-3-1843, பக்:54)

## வெள்ளி மல்லிகை

# தமிழ் கிழார் வ. மு. இ.

### அ. செ. மு.

தமிழ்ப் பண்டிதர் வ. மு. இரத்தினேஸ்வர ஐயர் முதுமைத்தளர்ச்சியில் வாடுவதாக அறிந்து மனத்துயருற்றேன். பண்டிதர் ஐயாவை அவரது நிழலுருவப்படத்தில் முதன்முதலாகப் பல்லாண்டுகட்கு முன் 'ஈழகேசரி' ஆண்டுமலர் ஒன்றில் இளமைமிகு தோற்றத்தினராய்ப்பார்த்ததும் பின்பு அண்மையில் சில ஆண்டுகள் முன்னதாக 'ஈழநாடு' காரியாலயத்தில் பழுத்த தமிழ்ப் பழமாகப் பல தடவை சந்தித்து தேன் அமுது சுவைத்து மகிழ்ந்ததும் நினைவுகளாயின. இவ்வளவு காலமாகியும் உடலிலே இத்தனை வயதேறியும் இன்னும் என்ன துடிப்பும் துடிக்கும் தமிழிலே! ஐயா தமது பழைய நாட்களையும் தமிழ்தந்த வெளிநாட்டுப் பயணங்கள் பற்றியும் கன்னித்தமிழ் விறுவிறுப்புடனே சொல்லிய போது நான் அவர் வாயைப் பார்த்துக்கொண்டே என் வேலையையும் மறந்து இருந்துவிடுவேன். அவரது பொன்னான அனுபவங்களைக் கேட்டபோது - 'இதையெல்லாம் எழுதினாரேயானால் எவ்வளவு சுவையாக இருக்கும். இன்றுள்ளவர்களுக்கு எவ்வளவு உபயோகமாக இருக்கும்!' என்று அப்பொழுது எண்ணி வாயூறுவேன். ஆனால் அவரால் இந்த முதுமையிலும் தளர்ச்சியிலும் பேனா பிடித்து வன்மையுடன் எழுத இயலுமோ இயலாதோ என ஐயுற்றதினால் என் எண்ணத்தை அவரிடம் வெளியிடத் தயங்கினேன். எப்படியோ எந்த 'மாசத்தின் தூண்டுதலினாலோ பண்டிதர் ஐயா பிற்பாடு சிலதினங்களுக்குள்ளாக தமது பழைய நாள் வாழ்க்கை அனுபவங்களை நான் எண்ணியபடி என் ஆசைப்படி தித்திப்பான தமிழ்விருந்தாக பல வாரங்களுக்கே தொடர்ந்து எழுத ஆரம்பித்துவிட்டார்.

இந்தவயதில் நாமெல்லாம் இவ்வளவு 'ஷோக்'காக எழுதவியலுமா என்று வியப்புற்றேன். அவர் எழுத்தையும் விறுவிறுப்புக் குன்றாத தமிழ்நடையையும்பார்த்து. எழுதுவதைப்பற்றிக் கவலைப்படுகிறேனே, இத்தனை வயசுவரை நாம் உயிர்வாழ்வது என்பதே ஒரு பகற்கனவாயிருக்கும்போது!

**பங்குனித்திங்கள்**

பங்குனித்திங்களில் ஏன் நாடெங்கும் அம்மன்கோவில்களில் 'குளித்தி' நடக்கிறது! திங்கட்கிழமை சந்திரவாரம் அல்லவா? சூரியனுக்குரிய வாரம் ஞாயிறு. எனவே சூரியவெப்பம் உடலையும் உள்ளத்தையும் உறுத்தாமல் தணிக்கவேண்டி நடத்தும் பொங்கலையும் பூசையையும் ஞாயிறு வாரத்தில் நடத்துவதுதானே பொருத்தமாயிருக்கும்என்று கேட்கலாம்.

தைப்பொங்கல்கூட ஆதவனுக்குரிய பொங்கல்தான். ஆனால் தைப்பொங்கல் ஞாயிற்றுக்கிழமைகளில் வந்தால்தானா அதைக் கொண்டாடுகிறோம்.

பங்குனிக் குளுத்தியை ஞாயிறு வாரத்துக்கு அடுத்த திங்கட்கிழமைகளில் கொண்டாடி 'ஆதித்த பகவானே நீ பூவுலக மக்களுக்கும் உயிரினங்களுக்கும் நிலவாகுக' என்று ஆதவனிடம் ஒருவேளை வேண்டிக்கொள்கிறார்கள்போலும்! சூரியனிடம் பெற்ற ஒளிதானே சந்திரிகைக்கு! இதெல்லாமிருந்தாலும் கண்ணகிஅம்மன் உட்பட எல்லா அம்மன்கோவில்களிலும் இந்த பங்குனிவிழா கொண்டாடப்பட்டு வருவதற்குக் காரணம் ... ... ஒருவேளை பங்குனித் திங்களை இளங்கோ அடிகள் சிலம்பில் எங்கேயாவது குறிப்பிட்டுப் பாடியிருக்கிறாரோ, அது ஒரு பழந்தமிழ்நாட்டு விழாவாக — கணவனோடு கூட உயிர்நீத்த 'மாசக்தி' தெய்வங்களுக்கு எடுக்கும் விழாவாக அக்காலத்தில் நடைபெற்றிருக்குமோ தெரியவில்லை,

அல்லது, கண்ணகிக்குச் சேரன் செங்குட்டுவன் சிலை எடுத்த விழா ஒருவேளை பங்குனித் திங்களில் நடைபெற்றிருக்குமோ? அதுவுமில்லையானால் கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தன் கண்ணகி விழாக்காண சேரநாடு சென்று ஈழம் திரும்பியகாலை கண்ணகிவழிபாட்டினை ஈழத்தில் ஆரம்பித்துவைத்த சுபதினமாக இருக்குமோ பங்குனித் திங்கள்.

பங்குனிமாதம் பலவழி நடந்து நம்மூர் மாரியம்மன் கோவில் குளுத்தி விழாச் சென்று அடியார் கூட்டத்தைப் பார்த்துக்கொண்டே சிலமணிக்காலம் பொழுதுபோக்கியதனால் எழுந்த எண்ணங்கள்தாம் இவை. 'அம்பா, நீ இரங்காயெனில் புகலேது இவர்களுக்கெல்லாம்!

**'தெமழ வாத்தியம்'**

சியனு அநெயனு தயனு என்ற மூன்று எழுத்துகளும் சேர்ந்து சிந்து பிறக்கிறது சிங்களத்தில். நயனு அல்டயனு டயனு னுயனு மூன்றும் சேர்ந்து நடனம் பிறக்கிறது. சிந்தும் நடனமும் தமிழிலும் உண்டு இதனைத் தெரிந்துவைத்துக்கொண்டு 'ராத்திரீர்களோ, உங்கள் ஆட்டம்பாட்டமெல்லாம் தமிழ் தந்த கலைச்செல்வங்கள் தாமே. உங்களுக்கென்று சொந்தமாக ஏதுமிருந்ததில்லை' என்று என்கூடப் பணியாற்றிய சிங்களத் தோழர்களிடம் எப்பொழுதாவதுகூறிப் பெருமைப்பட்டிருக்கிறேன். இதற்கு, சிறுவயதில் பல்லாண்டுகளுக்குமுன் நான் கல்வி கற்ற பள்ளிக்கூடமொன்றில் மாணவரும் ஆசிரியரும் ஒன்றாகக்கூடியிருந்து ஒரு புத்த குருவிடம் கற்ற சிங்கள அரிச்சுவடியே ஆதாரமாயிருந்திருக்கிறது. அப்பொழுதெல்லாம் என் சிங்களத்தோழர்கள்வாயிலிருக்கும் சிகரெட்டின் புகையை உள்ளே இழுத்து என்முகத்திலே ஊதியதுபோல 'பூ' என்று வாயினால் ஊதிவிட்டுப் போய்விடுவார்கள். இதெல்லாம் 1956க்குமுன் சென்றுபோன சமாப்தம்.

சில தினங்களுக்கு முன் யாழ்ப்பணத்தன்பர் ஒருவருக்கு சிங்களத்தில் ஒரு கடிதம் வந்தது அவர் என்னிடம் கொண்டோடி வந்தார், தனக்குத் தெரியாத சிங்களத்தில் உள்ள ஆபத்தையொன்றும் எண்ணிப்பார்க்காமலே எப்படியோ தட்டித்தடவி பழையதான அரிச்சுவடி ஞானத்தைக் கொண்டு கடிதத்தில் டைப் அடித்திருந்த வாசகத்தில் இரண்டுசொற்களுக்குள் எழுத்துச் சேர்த்துவிட்டேன். 'தெமழவாத்தியம்' என்பதுதான் நான் வென்று வாசைகூடிய ஆர்த்தசுத்த சிங்களம்.

இலங்கைவானொலி தமிழ்ப் பகுதி தம்பூரா கலைஞர் பதவிக்கு 'கஜெட்' அறிவித்தலைப் பார்த்துவிட்டு மனுப்பண்ணியிருந்தாராம். அதற்கு நேர்முகப் பரீட்சைக்கு வரும்படி வானொலியார் விடுத்த அழைப்புதான் அது ஆறை அழைப்பு யாருக்கும்புரியாத சிங்களத்தில் ஏன் வந்தது? நேர்முகப் பரீட்சைக்குப் புகுமுக 'டெஸ்ட்' ஒன்றும் இந்தவிதமாக நடத்திப்பார்க்கிறார்கள்போலும்! அல்லது ஒருவேளை வாத்திய இசை மொழிபேதங்களைக் கடந்து நிற்பது என்ற 'தேசியகலைஞானம்' காரணமாக இருந்திருக்குமோ?

இதய வீணையின் நரம்பை
மீட்டியே
இன்பம் சேர்த்திடுமே...

அந்தவிதமாகவும் ஒரு மொழி இருக்கிறதாமே. கேட்டால்- அதற்குப்பதில் ஒருவேளை கண்வெட்டாக இருக்குமோ!

கண்வெட்டோ புயல் மின்வெட்டோ-என்று தமிழ் நிகழ்ச்சி அதிகாரி அப்படி ஒரு கவிகூடப் பாடியிருக்கிறாரே!

## பப்பாளிப்பழம்

# அழகு குறைவாக இருப்பதால் அலட்சியப்படுத்தாதீர்!

எது விலை உயர்வாகவும் அரியதாகவும் இருக்கின்றதோ அதை உயர்வாகத்தான் எம்மவர்கள் கருதுவார்கள். இந்தப் பப்பாளிப் பழத்தை எல்லோரும் அறிந்திருந்தாலும் அது மலிவாகவும் எமது ஊர்களில் கிடைப்பதாலும் அப்பிளைவிட அழகில் குறைந்து இருப்பதாலும் அதை அதன் மகிமை தெரியாதவர்கள் அலட்சியப்படுத்திவிடுவார்கள்.

**அமெரிக்கா தாயகம்**

பப்பாளி மரமா? பப்பாளி பழமா? அது எப்படி இருக்கும் என தெரியாதவர்களும் உண்டு, பப்பாளிமரம் தொன்று தொட்டு இலங்கையிலிருந்து வந்ததா? இல்லை. அது அமெரிக்காவைத் தாயகமாகக்கொண்ட பப்பாளி பாசிவ்லோரி என்னும் தாவர குடும்பத்தைச் சேர்ந்ததாகும்.

இந்தப்பப்பாளியின்வெண்ணிறமுள்ள பாலும், சதையும், விதையும் மருந்து தயாரிக்கப்பயன்படுகின்றன. மருந்தாகப் பாவிக்குமிடத்து:

இருதய பலமுண்டாக்கவும் குடற் புழுக்களைக்கொல்லவும் ஜீரணம் உண்டாக்கவும் ருது உண்டாக்கவும் கூடிய குணங்கள் உண்டு.

**மதுபானம் பாவிப்பவர்கட்கு**

மதுபானம் பாவித்த பின்னர் ஏற்படும் தலையிடி தலைச்சுற்று அரோசகம் சோம்பல் பசியின்மை உன்மத்த நிலை என்பன ஏற்பட்டால் அதைப் போக்க- காலையில் சில பப்பாளிப்பழத் துண்டுகளைச் சாப்பிட்டால் தீரும். அத்துடன் கல்லீரலையும் சீரடையச் செய்கிறது.

## பல நோய்களுக்கு மருந்து இந்தப் பழம்

கல்லீரலோ மண்ணீரலோ சீர்கேடு அடைந்து அடிக்கடி சுரம் காணுவதுண்டு. கல்லீரலில் ஏற்படும் பிணியியல் தன்மையால் அது வீங்கி கட்டிபடுவதுண்டு. இதை இந்தியாவிலும் இலங்கையிலுமுள்ள கிராமப்புற வாசிகள் காய்ச்சல்கட்டி என்பார்கள். கல்லீரல் ஓரளவிற்கு மேல் வீக்கம் அடைந்துவிட்டால் அதைச் [illegible] செய்வது அவ்வளவு சுலபமல்ல.

**மகிமை**

ஆனால் நான இந்தியாவில் உள்ள மதுரைக்கு அண்மையிலுள்ள கிராமத்திற்குச் சென்றபோது அங்குள்ள ஒரு வயோதிப மாது சொன்ன தகவலின் பேரில் இந்தப்பப்பாளிப் பழத்தின் மகிமையைப்பற்றி நிறைய ஆராய முனைந்தேன். அதாவது நாட்பட்ட கல்லீரல் வீக்கம் உடைய 45 வயது ஆண் நோயாளிக்கு மருத்துவமனையில் சிகிச்சை செய்து பிரயோசனம் இல்லையென திருப்பி அனுப்பிய ஒரு நோயாளிக்கு நிறையப் பப்பாளிப்பழம் பல நாட்கள் சாப்பிடக் கொடுத்துச் சுலபமாக குணமாகிவிட்டதாம். அதே குணம் பப்பாளிப் பழத்தைத் தொடர்ந்து சாப்பிடுவதால் ஏற்படுவதாகவும் வேறு சில கிராமவாசிகள் சொன்னார்கள்.

**கல்லீரல் நோய்க்கு**

இலங்கை இந்தியாவிலுள்ள சில ஆராய்ச்சியாளர்கள் [illegible]தனர். மேற்கொண்டு நான் ஆராய்ச்சி செய்ய முனைந்தபோது அதற்கு இந்தியாவிலுள்ள திருவனந்தபுரம் மருத்துவக் கல்லூரியில் பிணியியல் ஆய்வுகூட வல்லுனரும் தற்போது உலக சுகாதார ஸ்தாபனத்தின் மூலம் இலங்கை வந்துள்ள இரு இந்திய டாக்டர்களும் உதவி புரிந்துகொண்டிருக்கின்றார்கள். எனவே கல்லீரல்நோய் உள்ளவர்கள் தினசரி 4 அவுன்ஸ் முதல் 8 அவுன்ஸ்வரை சாப்பிட்டு வந்தால் நல்ல பலன் ஏற்படக்கூடும்.

**வாழைப்பழமும் பப்பாளிப்பழமும்**

ஒரு குறிப்பிட்டளவு பப்பாளிப்பழத்திலும் அதேயளவு வாழைப்பழத்திலுமுள்ள சில பொருட்கள்:-

| | பப்பாளி | வாழை |
|---|---|---|
| சுண்ணும்பு சத்து- | 3. மி. கிராம்- | 3. மி கிராம் |
| புரதச் சத்து - | 1 கிராம் - | 4 கிராம் |
| காபோஹட்ரேட்- | 2. 7 கிராம் - | 10. 3 கிராம் |
| கொழுப்புச் சத்து- | 1 கிராம் - | 1 கிராம் |
| பார்பரஸ் - | 3 மி. கிராம்- | 14 மி கிராம். |
| விட்டமின் A - | 573 சர்வதேச அலகு | — |
| விட்டமின் B 1 - | — | 14. ச. தே. அ. |
| விட்டமின் B 2 - | 71 மைக்ரோகிராம் | 9 மை. கிராம் |
| விட்டமின் C - | 13 மி. கிராம் - | 1 மி. கிராம் |
| கலோரி மதிப்பு - | 11 | 43 |

மலச்சிக்கல் உள்ளவர்கட்கும் நீண்டகால வயிற்றுப்போக்குக்கும் பழம் மருந்தாகப் பயன்படுகிறது.

**மூல நோய் உள்ளவர்கட்கு**

பப்பாளிப்பழம் சாப்பிட்டுவந்தால் அது மலத்தை இளக்கி, மூல உஷ்ணத்தைக் குறைத்து இரத்தம் போவதையும் அதனால் ஏற்படும் இருதய பலவீனத்தையும் நிவர்த்தி செய்வதால் இந்நோய் இலகுவில் தீரலாம்.

**கர்ப்பிணிகளுக்கு**

குழந்தை அழகாகவும் திடகாத்திரமாகவும் பிறக்க கர்ப்பிணிகள் நாலுமாதத்திற்குமேல் காலையில் தினசரி 4 அவுன்ஸ் வீதம் பழத்தைச் சாப்பிடலாம், பப்பாளிப்பழம் கருவைச் சிதைக்கும் என்று தப்பான அபிப்பிராயம் மக்கள் சிலரிடையே பரவியுள்ளது. அது தவறான எண்ணமாகும். பப்பாளிப்பழம் எக்காரணத்தைக்கொண்டும் கருவைச் சிதைக்காது. ஆனால் பப்பாளிப்பாலுக்கு ருதுவை உண்டாக்கக்கூடிய குணமுண்டு.

**தாய்மாருக்கு**

பால்சுரப்பை கூட்ட பப்பாளிக் காய்களைக் கறியாக சமைத்துச் சாப்பிட்டால் பலன் ஏற்படும்.

**குழந்தைகளுக்கு**

அடிக்கடி ஏற்படும் மலச்சிக்கல், குடலில் புழு சேர்தல், பசியின்மை என்பன வற்றிற்கும் திடகாத்திரத்துக்கும் சாப்பிடக் கொடுத்து வந்தால் பலன்தரும்.

**பெரியவர்கட்கு**

பெரியவர்கட்கு ஏற்படும் தசை நரம்பு வலிகளுக்குப்

(11-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை அரங்கம்



கிராமிய நடனங்கள் ஒவ்வொரு நாட்டிலும் இன்றும் பாதுகாக்கப்பட்டுவருகின்றன. ரஷ்ய நாட்டில் 'நாட்டியப்பாதை' என கலைக்கழும் பழைய, புதிய நடனங்களை வளர்த்துப் பேணி வருகிறது. கிராமிய நடனத்தில் பெண்கள் கலந்து கொள்ளும் ஒரு காட்சி இது.

# நடிப்பு எப்படி இருக்க வேண்டும்?

கலை. நாடகக்கலை என்றவுடன் நாங்கள் கலைஅரசு சொர்ணலிங்கம் அவர்களை உடனே நினைப்போம். நான் எனது நண்பர் ஒருவரிடம் சொர்ணலிங்கம் அவர்கள். "சோறுபச்சடி துவரம்பருப்புக் குழம்பு சாப்பிடலாம்' என்ற பாட்டையே 35, 40 வருஷத்துக்கு முன்பும் பாடினார். சில வருடங்களுக்கு முன்பும் அதைப் பாடியிருக்கிருர். கலையரசு பட்டத்தை, 'சோறு பச்சடியோடு' அடிச்சிட்டார்' என்றேன் முசுப்பாத்தியாக. என் நண்பர் அப்படியன்று "சோறும் நாள்விதம் சாப்பிடுகிறோம். பச்சடியும் நாள்விதம் சாப்பிடுறோம். அவற்றை வெறுக்கிறோமா? அவர் பலபல அம்சங்கள் பொருந்திய கலைஞன்" என்ருர். 'சரிதான் என்றேன் நான் அவரது நடிப்புக்களைப் பார்த்து மகிழ்ந்திருக்கின்றேன், அந்தக்காலத்திலே 'பபூன்செல்லையா' எனக்கு அயலவராக

வைத்திருப்பது கலை - நாடகம் என்னில் வியப்பென்ன? எம் ஆர், ராதா 'நடிகவேள்' தலைசிறந்த நடிகர் - நாடகத் துறையாக இருந்தாலென்ன? சினிமாத்துறையாக இருந்தாலென்ன?

'பழையன கழிதலும் புதியன புகுதலும்' என்றவாக்கு நாடகக்கலை விஷயத்தில் முற்றமுற்றப் பொருந்தும். ஏன்? நம்வாழ்க்கையே ஒருநாடகம். 'நாடகமே உலகம்' என்ருர் முதியோர், புதிய விஷயங்களைப் புகுத்த நாடகம் ஒரு இலகுவான சாதனம். விண்வெளிப் பயணம் சந்திர மண்டல ஆராய்ச்சி விஷயங்கள் - சம்பாஷணைகள், பேச்சுக்கள் விகடமாக நாடகங்களிலே இடம்பெறும்போது அறியாதவர்கள் அறியவும், அறிந்தவர்கள் பேச்சுக்கள் நடைகள் அலங்காரங்கள் நாடக பாணி, மெருகு என்பவற்றை நோக்கவும், என்னே அவர்தம் ஆனந்தம்? இயல்,

கள் பூரிப்படைவார்கள் திருப்தியடைவார்கள் கருத்தான நாடகங்கள் ஆயினும் அதில் ஆயாசம் உண்டாகாமல் இருப்ப நாம் பகிடி. விகடம், முசுப்பாத்தி அமையக் கட்டங்களை இடையிடையே புகுத்தி எழுதல் வேண்டும்

அவதான சக்தியுடையவர்களே நாடகம் எழுதவும் நடிக்கவும் கூடியவர்கள். இயற்கையில் மற்றவர்களைக் கேலிசெய்யும் சுபாவம் உடையவர்கள் நல்ல நடிகர்களாகவும் இருப்பார்கள். ஒருவர் செய்வது, பேசுவது போலச் செய்பவர்கள் இலகுவில் நடிக்கக் கூடியவர்கள் ஆகிவிடுகிருர்கள். நன்ருகப் பாடுபவர்கள் குறிப்பிட்டளவு திறமையுடைய நடிகர்கள் ஆகலாம். அவர்களுடைய பாடும் திறனுக்கு ஏற்பப் பேசும் ஆற்றலும் நடிப்பும் உண்டாயின் அவர்கள் சிறந்த நாடக பாத்திரங்கள் ஆகலாம். கலையை வளர்க்க இப்போதிருக்கும் சினிமாப் படம் சிறந்த சாதனையல்லவென நாம் கூறமுடியாது. ஆபாசமற்ற கருத்து நோக்

— வை. ஆனந்த நடராஜா

இருந்தவர். அவர் பபூனுக வருவார். அவரும் இந்த 'சோறுபச்சடியை' விடமாட்டார். உயரமான வாட்டசாட்டமான ஆட்கள் இவ்விருவரும்.

### நாடகமும் சினிமாவும்

சினிமாக்கலைவேறு, நாடகக்கலைவேறு என்ற அபிப்பிராயம் எனக்கில்லை நாடகக்கலையின் வளர்ச்சிதான் சினிமாக்கலை என்றுஞ் சிலர் சொல்வதுபோல் சொல்லவும்மாட்டேன் நாடகக்கலையில் சிறந்த மன்னனுக விளங்கியவர் எம் ஜி, ராமச்சந்திரன். இன்றும் அவர் சினிமாக்கலை மன்னன் 'மக்கள் திலக'மாக விளங்குகிருர். சிவாஜிகணேசன் ஒரு சிறந்த நாடகக் கலைஞனே. பின்னர் அவர் 'பத்மஸ்ரீ சிவாஜிகணேசன் ஆகவில்லையா தமது சினிமாக் கலையிலே. கண்ணுக்கும் காதுக்கும் கருத்துக்கும் விருந்தாக அமைவது - எம்மைவேறு உலகத்தில் மகிழ்ச்சியுடன்

இசை, நாடகம் என்னும் வண்ணமாம் முத்தமிழ் சொல்நிறைத்து, சுவை சொரிந்து, கருத்தென்னும் மாணிக்கத்தைப் பதித்து நடிக்கும் நாடகங்கள் நம் நாட்டு மக்களை, இளைஞர்களை, நஞ்சிருர்களை எத்துண நிலைக்கு அவர்களை இலகுவாக ஏற்றும். நாடகக்கலை எவரையும் உயர்த்தும் ஏணி. கற்பனைக்குக் கொண்டுசெல்லும் விண்வெளிக்கப்பல் எனினும் மிகையாகாது'

சிறு நாடகங்களிலும் பெருநாடகங்களிலும் ஒரே கருவையே வைத்து நடிக்கலாம். சிறு நாடகங்களை அமைப்பது ஒரு சுருக்கம் சாரம் எழுதுவதுபோல் ஜீவாம்சங்களைத் தவருது புகுத்தி எழுதுவதாகும் பொழுதுபோக்கு நாடகங்கள், செவிக்கும் கண்ணுக்கும் இன்பப் பயப்பன. இவை ஆவசியம் அற்றவை என்று கூறமுடியாது

ஏனெனில் இவற்றை விரும்புபவர்களுக்கு இவை இன்பம் பயப்பதால் அவ

கம் கொண்டபடம் உத்தமமானது. நாடகத்தில் காட்சிகளைக் கொண்ட வர்ணத்திரை (சீன்) இடம் எது என்பதைக் குறிக்கிறது. ஆனல் சினிமாவிலோ அவ்வவ் இயற்கைக் காட்சிகளைத் தத்ரூபமாகக் கொண்டமைந்தமை அறிவை வளர்க்க மிகவும் அரிய சாதனமே. சினிமாவிலே 'இரவல் குரல்' கொடுத்து நடிக்கிருர்கள். இந்த மோசநிலையை நாடகக் கலையில் புகுத்தச் சிலர் விரும்புகிருர்கள், உண்மைக்கலைஞர்கள் அவ்வாறு செய்யமாட்டார்கள்.

பாடல்கள். கோபம், கவலை சந்தோஷம். வெறுப்பு, விருப்பு முதலிய அம்சங்களைத் தழுவி எடுக்கும் குணபாத்திரத்திற்கு ஏற்ப மெட்டு. ராகம் என்பன தெரியப்படவேண்டும். இந்தத்தெரிவும் நாடக வெற்றிக்கு ஒரு பிரதான அம்சமாகும். அடுக்கு மொழிகளே நாடகம் என்று சிலர் அடுக்கி விடுகிருர்கள் காது கிடுகிடுக்க. இதுவும் முறையல்ல. ஏற்ற இடங்களில் எதுகை மோனை அடுக்குகள் அமைய எழுதுவது முறையாகும், கிராமிய மொழியில் நாட்டில் நாளும் பொழுதும் வழங்கும் பேச்சில் எழுதுவது இயல் நடையாகும். இது நாடகத்துக்கு அத்தியாவாரமானது. புதிய கருத்துநோக்குக்கள் இயல் நடையில் ஒரு பாத்திரத்திற்கு அமையும்போது, அவ

முகபாவம், கண்ணெளி என்பன பிரதான அங்கமெனலாம். பேசும் கண், கனல் கக்கும் கண், சாந்தக்கண் என்பன சில பாகங்களே! வாயும் லேசல்ல- அது செய்யும் திருவிளையாடல் அனந்தம். பேசும் நாவைக் கொண்ட வாயல்லவா. இதில் அருவருப்பு, இதம் முதலியவற்றைக் காட்டுகிருேமல்லவா? பொதுவாக அங்க அசைவுகளுடன் நடிக்க வேண்டும். ஆனல் தேவையான இடங்களில் தேவையான முறையில் அசைத்து நடிக்கவேண்டும் நாடகக்கலைஞர் ஒருவர் ஒரு பாவத்தையே பழகுவதற்கும் இன்னெருவர் பழக்குவதற்கும் கண்டிப்பாக வித்தியாசம் ஏற்படலாம். எல்லோரும் ஒரேமாதிரியில்லை. ஒருவரைப்போல் ஒருவர் கதைப்பது உண்பது உறங்குவது அவதானிப்பது இல்லை. ஆகவே இவைகளை ஏற்ப அமைப்பது நாடக ஆசிரியருக்கு ஆராய்வான முயற்சியேயாகும். இதற்காக நான் நாடக பாத்திரங்களைச் சிருஷ்டிக்கும்போது அப்பாத்திரம் கொள்பவர் இடம் ஊடுக்குள் அவர் கண்ட உண்மைப் பாத்திரம் எப்படிச் செய்வார் எனக் கேட்பேன். பலரைத் தனித்தனி நடித்துக் காட்டச் செய்வேன். அதில் சிலரிடம் எத்தனையோ பிரதிபலிப்பைக் காண்பேன். நாஞ

## சினிமா என்ருல் என்ன நாடகம் என்ருல் என்ன — நடிப்பு நடிப்புத்தானே!

குடன் பேசும் மற்றப் பாத்திரத்திற்கு நாடக நடையும் அல்லது இருவர்க்கும் இரு நடையும் கலந்துவர எழுதலாம்.

### அபிநயமே நடிப்பு

"நடிப்பு" என்பது அபிநயம் என்னும்அங்கம். பாலர்களுக்குப் பாடசாலையில் அபிநயம் பாடல்களுடன் புகுத்தப்படுகிறது. ஆனல் அபிநயத்தின் உயர்ந்த நிலையே நடிப்பு. கை, கால், உடம்பு அசைப்புகளைவிட

கச் சில பாத்திரங்களையே இப்படியல்லவா செய்வார்களென்று காட்டுவேன். தவறுண்டா என்று கேட்டு மற்றவர்கள் சொல்லும் திருத்தத்தை உடனேயே புகுத்துவேன். நாடக பாத்திரங்களையேமுதலில் "இன்ன பாகத்தை நடி" பார்க்கலாம் என்று பார்த்துத் திருத்துவது அவசியம் எனக் கண்டால் திருத்தலாம். தத்ரூபமாக அப் பாத்திரத்தை நாம் காணலாமாயின் அதை அவ்வாறே விடலாம்



நிலத்திலிருந்து அந்தரத்தில் எழும்பி பாவந் தவருது ஆடும் நர்த்தகி "லோறன்சியா" என்ற நாடோடிய நாடகத்தில் ஒரு காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




(6)

"சரி என்னோடு வா"

என்று திரும்பித் தான்வந்த பாதையில் நடக்க ஆரம்பித்தார் வாத்தியார்.

அந்தப்புறத்திலேயுள்ள ஒரே ஒரு பாடசாலையில் ஒரே ஒரு ஆசிரியராய் இருந்து மிக இளமையிலேயே இளைப்பாறியவர் அவர். அவர் பெயர் இரண்டொருவருக்குத்தான் தெரியும். அங்கு படித்த மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் அவர் 'வாத்தியார்' தான்.

ஆனந்தனும் அவர் பின்னே, மந்திரத்தால் கட்டுண்டவனாய், தொடர்ந்து செல்கிறான்.

அம் மனிதர் இரண்டோர் அடி எடுத்து வைத்ததுமே திரும்பி நின்று சோமுவைக் காட்டிக்கேட்கிறார்.

"அங்கே நிற்பது உன் கூட்டாளியா?"

ஒருகணம் ஆனந்தன் தயங்குகிறான். அக்கணத் தயக்கத்திலே 'என் அண்ணா என்று சொல்லிவிடட்டுமா?'

"என்னை எதுக்காகக் கூட்டிப்போறாரோ, அண்ணாவையும் அதிலே மாட்டிவிடுறதா?'

'பெரியவர் நல்லவராத் தெரியுது. எனக்கு உதவி செய்ய யோசிக்கிறாரோ?'

'சின்னப்பையன் எண்டு எனக்குதவி செய்யிறவர், அண்ணையுஞ் சேர்த்து உதவிசெய்ய விரும்புவாரோ?'

'என்ன செய்யிறதெண்டு யோசிக்க முடியாமலிருக்கே' என்று பல கோணங்களிலிருந்தும் வந்த எண்ண அலைகளுக்கிடையில் மோதுண்ட நிலையில்,

"இல்லை" என்ற சொல் அவன் வாயிலிருந்து பிறந்துவிட்டது.

'அங்கே நிப்பது உன் அண்ணனா?' என்று கேட்டிருந்தால் 'ஆம்' என்று ஒப்பியிருப்பான். கேட்டகேள்வியே அவனுக்கும் அவன் தமையனுக்குமிடையில் ஒரு திரையை இறக்கிவிட்டது.

"அவனை உனக்குத் தெரியுமா?' என்று வாத்தியார் அடுத்துக் கேட்டபோது, முதல்வினாவைத்தான் வேறுருவில் கேட்கிறார் என்ற நினைப்பில், தன் முதல்பதிலை உறுதிப்படுத்துந் தோரணையில், "தெரியாது" என்று அழுத்தந்திருத்தமாகக் கூறிவிட்டான் ஆனந்தன்.

இந்த ஒரு சொல், தனக்கும் சோமுவுக்குமிடையே திடீரென விழுந்ததிரையை, இரும்புத்திரையாக மாற்றிவிட்டதை ஆனந்தன் உணரவில்லை.

திரும்பிப் பாராமலே தன்னைச் சில தினங்களாகத் தாய்-தந்தை- தமையனாய்க் காப்பாற்றிய சோமு மரத்தோடு மரமாகிவிட்டதை உணராமலே, ஆனந்தன் வாத்தியாரின் பின்னால் குறுகுறுக்கும் நெஞ்சோடு போய்க் கொண்டிருந்தான்.

"பணிஸ் எங்கே, அதை அந்தமேசையின்மேல்வை."

ஆனந்தன் வாத்தியாரின் தொனியிலேயிருந்த கனிவையும், கண்டிப்பையும்கண்டு, பாவையாகிப் பணிஸை மேசையின்மேல் வைக்கிறான்.

"உன் பெயரென்ன?" ஆனந்தனைப் பாராமலே வாத்தியார் கேட்கிறார்.

"ஆனந்தன்."

"உன் அண்ணன் பெயர்?"

"சோமசுந்..." தன்னையறியாமலே தான்செய்துவிட்ட பிழையை, அவன் திடீர் மௌனத்தால் அழிக்கப் பார்க்கிறான்.

வாத்தியார் ஆனந்தன்பக்கம் திரும்புகிறார்.

"அவன் எங்கே போனான்?"

"தெரியாது."

"தாய் தகப்பன்...?"

"இல்லை. அப்பா ஓடிட்டார் அம்மா செத்துப் போனா"

"ம். உன் அண்ணனையும் கூட்டிவா. இங்கு இருந்து கொள்ளலாம்.'

ஆனந்தன் புறப்பட்டுவிட்டான்

வாத்தியார் குறுக்கிடுகிறார் "கொஞ்சம் நில். நானும் வருகிறேன்."

இருவருமே வீதி வெயிலில் இறங்கி நடக்கிறார்கள். மௌனம் குடைபிடிக்கிறது.

அரைப்பர்லாங் தூரம் போன பிறகு அந்தமுடக்குக் கழிந்ததும் இருவருமே நிமிர்ந்து தூரத்தில் பார்வையைச் செலுத்துகிறார்கள்.

மரம் நிற்கிறது. மரமாய் நின்ற சோமு அங்கில்லை.

'அப்போதே அவன் உன் அண்ணன் என்று ஏன் சொல்லவில்லை?' -வாத்தியாரின் குரலில் ஏக்கமும் பரிதாபமும் தொனிக்கின்றன.

மௌனத்திலே தன்னைப் போர்த்திக்கொண்டு போன ஆனந்தனை இந்த ஏக்கமும் பரிதாபமும் பற்றிக்கொள்கின்றன.

அண்மையில் போய்ப் பார்க்கிறார்கள். சோமு அங்கு நின்ற அடையாளம் கூட இல்லை.

'நீ இவ்விடத்திலேயே நில்'-வாத்தியார் தட்டிக்கடை இருந்தபக்கம் நடந்து போகிறார்.

பச்சாத்தாபம் என்ற முள்ளு மிதியடியில் தன் இதயம் நடந்து உதிரஞ் சொட்ட, இன்றிலிருந்து ஒரு வாரத்துக்கு முன் தன் தாயிறந்து போனவரை நடந்தவற்றைப் பின்னடை போட்டுப் பார்க்கிறான் ஆனந்தன்.

அண்ணனைத்தேடி யாரோ போயிருக்கத் தான் மரத்தின் கீழே காத்து நிற்பதிலிருந்து டதினமும் தனக்கு உணவூட்டத்தன் அண்ணன் பட்ட கஷ்டங்களுக்காக தன் தாய் சிதையின்மேல் சிதைந்து போவதுவரை பின்னோக்கி, அவன் தன்னுள்ளே அவிந்து, அவிந்துகொண்டேயிருந்தான்,

அரைமணி கழித்து வாத்தியார் வந்தார் தனித்துஅவனுக்குக் கிட்ட வந்ததும் 'நீ வா' என்று தொடர்ந்து, நடந்தார்.

வீடு போகும்வரை வாத்தியார் எதுவுமே பேசவில்லை.

வீடு போனதும் அவர் ஓர் அறையினுள் போய் ஓர் அலமாரியைத் திறந்துவிடுகிறார்.

"ஆனந்தன் உனக்கு வேண்டியவேட்டி, சட்டை, துவாய் எல்லாம் எடுத்துக்கொள். போய், அதோ தெரிகிறதே கிணறு, அதில் குளித்துவிட்டு வா"

அவர் குரலிலே கண்ட தொய்வு ஆனந்தனையும் சோர்வடையச் செய்தது. எனினும் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து துணிகளைப் பார்க்கிறான். அவனையொத்த சிறிய பெரிய சிறுவர்களுக்குத் தகுதியான உடைகள் அலமாரி நிறைய இருக்கின்றன.

"கிணற்றடி மேடையின் கீழே சவர்க்காரம் இருக்கிறது நீ போட்டிருக்கிற உடைகளைத் தோய்த்துப் போடு.'

வாத்தியாரின்குரல், குரல் வந்த திசையைத் திரும்பிப் பார்க்கத் துணிவில்லாமலே ஆனந்தன் கிணற்றடிக்குச் சென்றான்,

துணிகளைத் துவைத்து உலரப்போட்டு, குளித்துவிட்டு வந்தபோது வாத்தியார் ஏதோ புத்தகத்தில் ஒன்றிப்போயிருப்பதைக் கண்டான். அவனது பிஞ்சு உள்ளத்துக்கு அங்கு நிலவிய அமைதியின்பொருளே புரியவில்லை. ஒவ்வொன்றும் கதைகளில் நடப்பது போன்று புதிருக்குள்மூழ்கிக் கிடப்பதாகவே அவனுக்குத் தெரிந்தது.

'எதிரேயிருக்கிற அறையிலே மேசையின்மேல் சாப்பாடிருக்கிறது. இலை எடுத்துப் போட்டுக்கொண்டுசாப்பிடு.'

அமைதி வானத்தைக் கிழித்துக்கொண்டு புறப்பட்ட இவ்வார்த்தைகள் முதலில் அவனைத்திடுக்கிட வைத்தன. தன்னைச் சமாளித்துக்கொண்டு சாப்பாட்டறையினுள் நுழைந்தான்.

பழக்கமில்லாத கருமம். தானாகவே போட்டுக் கொண்டு சாப்பிடுவது.

இலையின் மேல் சாதம், அதைச் சூழப் பருப்பு கீரை குழம்பு, துவையல் என்பவற்றைத் தனக்குத்தானே பரிமாறிக் கொண்ட போது அவன் தன்னைத்தானே நம்ப மறுக்கிற நிலை ஏற்பட்டு விட்டது.

'இப்படிச் சாப்பாடு கல்யாண வீடுகளில் பெரியவர்களுக்குத்தானேகொடுப்பார்கள்!'

நிசமான சாப்பாட்டைத் தான் என்முன்னே காணுகிறேனோ?'

'கால் வயிற்றுக்கேகிடைக்காமலிருந்தஎனக்கு இப்படிச் சாப்பாடு எப்படிக் கிடைக்கிறது?'

'அண்ணாவுக்கும் இப்படியே, எங்கேயாவது கிடைக்குமோ?'

'ஆரம்பத்திலேயே அவன் என் அண்ணன்தான் என்று நான் சொல்லியிருக்கலாமே!

எண்ண அலைகள் உணவைச்சுற்றி வந்து, வளர்ந்திவனுக்கு அவனை மோதின. அண்ணன் பக்கத்திலிருந்தால், அவனைப்பற்றியே சிந்தியாதவனாய்த்தன்வயிற்றை மட்டுமே இவன் நிரப்பியிருப்பான். ஆனால் அவன் பக்கத்திலில்லாதபோதுதான், அவனைப்பற்றிய எண்ணங்கள், அவனையிட்ட அக்கறை எல்லாம் தலைதூக்குகின்றன.

இது ஏன்?

ஆனந்தனுக்கு "அம்மா"வின் நினைவுதான் வந்தது. சில சமயங்களில் அந்த 'அம்மா' சோமுவுக்குத் தெரியாமலே ஆனந்தனுக்குச் சில பண்டங்களை உண்ணக் கொடுத்திருக்கிறாள். 'தாய்மை'யே பாரபட்சம் நிறைந்து கிடந்ததைக் கண்டு. அப்பொழுதெல்லாம் ஆனந்தன் அதை விரும்பியிருக்கிறான். இன்று இந்தச் சூழ்நிலையில், அந்தப் பார்[illegible] அடைப்பதுபோல அவனுக்குப்பட்டது. ஆயினும் அவன் வயிற்றினுள் இதமான உணவு இறங்கிக் கொண்டே இருந்தது.

சாப்பிட்டபின் இலையை எறிந்து கையலம்பிய பிறகு, திரும்பி வந்து மேசையைப் பார்த்தான். அம்மா இருக்கவேண்டிய இடத்திலிருந்த அந்தமேசை அவன் சிந்திய சோறுகறிகளோடு அவனைப் பார்த்துச் சிரித்தது.

அம்மா - அவளிருந்தால் இவற்றையெல்லாம் துடைத்து விட்டிருப்பாள்.

'மேசையின் கீழ்ச்சட்டத்தில் கிடக்கிற துணியை எடுத்து மேசையைத் துடை. பிறகு துணியைக்கழுவி இருந்த இடத்தில் உலரப் போடு".

அம்மாவே அசரீரியாக வந்து ஆபத்திற் காப்பாற்றியதுபோல வாத்தியாரின் குரல் அவனை இயங்கத்தூண்டியது.

அவன் வெளியே வந்தபோது, வீட்டு விறாந்தை ஓரத்திலே நின்ற வாத்தியார் அவனை அழைத்து பக்கத்திலிருந்த சிறிய மேசை ஒன்றைச் சுட்டிக்காட்டினார்.

"இங்கு சில புத்தகங்கள் இருக்கின்றன. படித்துக் கொண்டிரு'

வாத்தியார் கிணற்றடியை நோக்கிப் போய்விட்டார்.

'எந்த வகுப்பில் படிக்கிறாய்?'

புத்தகங்களைப் புரட்டி அவன் பார்த்துக்கொண்டிருந்த படங்களைப் பார்த்துவிட்டு வாத்தியார் கேட்டார்.

ஆனந்தனின் வாயடைத்துப்போயிருந்தது.

வாத்தியார் மறுபடியும் கேட்டார்.

'இப்பநீ பள்ளிக்கே போறதில்லையா?'

'இல்லை'.

'ஏன்?'

இரண்டாம் வகுப்புக்குப் பிறகு, தகப்பன் ஓடிவிட்ட பின், தாயின் முன்றானையோடு ஒட்டிக்கொண்டு திரிந்தவனுக்கு 'ஏன்' என்று தெரிந்தாலும், அதை மற்றவருக்கு விளங்கவைப்பது எப்படிஎன்று தெரியவில்லை! அவன் தாயைக் கேட்டிருந்தால் சொல்லியிருப்பாளோ!

'கடைசியாக எந்த வகுப்பில் படித்தாய்?'

'ரெண்டாம் வகுப்பு'.

வாத்தியார் மௌனமாகி அங்குமிங்கும் நடந்தார். பத்து, பதினைந்து நிமிஷங்களின்பின் அவர்குரல் மறுபடியும் ஒலித்தது.

'உனக்குச் சொந்தக்காரர் யாராவது இருக்கிறார்களா?"

ஆனந்தனின் தயக்கத்தினூடே, 'தெரியாது' என்ற பதில் பிறந்தது.

'நீ என்னோடிருந்துவிட விரும்புகிறாயா? முடியுமானால் உன் அண்ணனையும் கண்டுபிடிக்கலாம்."

தாயோ - தகப்பனோ சுற்றத்தவர்களோ இல்லாதவொரு சிறுவனுக்கு இப்படி ஒரு வாய்ப்புக்கிட்டுமா? தாய் செத்தபிறகு நாய், காகம் மாதிரி ஒருசிரட்டைக்கஞ்சிக்காகப் பட்ட அவலம், வெயிலில் குளித்துப் பலமைல் நடந்த களைப்பு, இரக்கமோ, மனிதாபிமானமோ அற்ற மனிதக் கூட்டத்தின் அசட்டை, பசியரக்கனின் தூண்டு[illegible]ணிஸ்' களவெடுத்த வெட்கக்கேடு எல்லாம் ஆனந்தனின் பிஞ்சு மனத்தினுள்ளே ஒருதரம் உருவெடுத்து மறைந்தன.

அவன்தாய் உயிரோடிருந்தபோதுகூட, அவன் நினைவுள்ளவரை அவன்தாய் சோமுவை வஞ்சித்து, தன் வயிற்றையும் கட்டிக் கொண்டு, அவனுக்கு அதிகமாகப் போட்டதெல்லாம் அவனுக்கு அரை வயிற்றையே நிரப்பவில்லை.

'அம்மா, நான் இங்கேயே இருந்துவிடட்டுமா?'

தாயின் முன்றானை மணம் அவனைச் சூழ்ந்து இன்னும் ஆட்சி செய்கின்ற நிலையில், ஆனந்தன் பாவம் தன் தாயிடம் அனுமதி கேட்கிறான்!

தன்னினைவு வந்து, அவன் நிகழ்காலத்துள் நழுவிய போது, வாத்தியார் அவனையே பார்த்துக்கொண்டு நிற்பது தெரிகிறது.

'என்ன சொல்ல?'

'என்ன சொல்லக்கிடக்கிறது?'

'நீங்கள் சொல்கிறபடியே செய்துவிடுகிறேன்.'

அவன் முகபாவத்தில் அவன் சம்மதத்தைக் கண்டு கொண்டவர்போல, அவனை அவன் நினைவுகளில் முழுகவிட்டு, வாத்தியார் சில நிமிஷங்கள் அங்குமிங்கும் நடந்தார். கடைசியில் தனக்கும் அவனுக்கும் சொல்கின்றவர் போல, 'சித்திரை விடுதலை இன்னும் பத்து நாட்களில் தொடங்கிவிடும். இருந்தாலும் நாளைக்கே பள்ளிக்குப் போய்ச் சேர்ந்துவிடுவது தான் நல்லது. படிச்சுத்தான் நல்லவனா. பெரியவனா வரவேணும்' என்று உள்ளே போய்விட்டார்.

(வளரும்)

# நிலவளத்துடன்
# நிறைந்த எங்கள்

ஈழத்தில் இயற்கையன்னையின் படைப்பில் தனிச் சிறப்புள்ளதாக விளங்குவது யாழ்ப்பாண குடாநாடாகும், இக்குடாநாட்டிலே தெற்குப் பகுதியாக அமைந்துள்ள தென்மராட்சியில் வரணிக் கோவிற்பற்றின் கீழ் உள்ள கிராமமே மந்துவில். கோவிற்பற்று என்பது அந்நியர் ஆட்சிக் காலத்தில் இலங்கையின் நிர்வாக முறைக்கென பிரிக்கப்பட்டிருந்த பிரதேசப் பிரிவாகும். அந்நியர் ஆட்சி ஒழிந்து இருபது வருடங்களுக்கு மேலாகியும் அவர்கள் புகுத்திய சொற்களின் பாவனை பல கிராமங்களில் இன்றும் வழக்கத்தில்இருந்துவருகின்றது.

## மந்துவிலின் கருத்து

மந்துவில் என்பது பற்பல கருத்துக்களைக் கொண்டிருந்தாலும் மந்தைச் செல்வங்களை நிறைய உள்ள இடம் என்பதே அர்த்தமாகும். யாழ்ப்பாணத்தில் மணற்பாங்கான பிரதேசமாக தென்மராட்சிப் பிரிவு அமைந்திருந்தாலும் அப்பிரதேச மக்களின் அயராத கடும் உடுப்பினால் இயற்கை வளத்தினை செழிக்கவைத்து செம்மையாக வாழ்கின்றனர். இந்த அடிப்படையில் நோக்கும்பொழுது இயற்கை அழகு வாய்ந்த மந்துவிலும் தன் மதிப்புக் குன்றாத அளவிற்கு கூடிய அளவில் இயற்கை வளம்கொண்டுள்ளது. வடக்கே வரணியையும், கிழக்கே கொடிகா தையும், தெற்கே கனிவ திற்குப் பேர்பெற்ற மீசா யையும், மேற்கில் சரசா யையும் எல்லையாகக்கொ டுள்ள மந்துவில் சங்க கா இலக்கியத்தில் எவ்வா பருத நிலம் சிறந்துவிளங் யதோ அதேபோன்று யாழ் பாணத்தில் மருத நிலமா காட்சியளிக்கின்றது. மந் வில் என்றதும் மட் விலா, அல்லது மந்திகை என்று வேறுபாடு தெரியா கேட்பவர்களும் யாழ்ப் ணத்தில் உண்டு. ஆனால் இ கிராமத்தில் கற்பக விரு சங்களான பனையும்தென் யும் வானுற ஓங்கி வள திருக்கும் காட்சியை இ கண்டவர்கள் இந்த வே பாட்டில் உட்படமுடியா

எந்த கிராமமாக இரு தாலும் அதன் முக்கிய வம் ஒரு தனிச்சிறப்ப மட்டும் முழுமையாக த

## எங்கள் கிராமம் — 12

யிடுப்பதில்லை இயற் வளம். இட அமைவு, கல் வசதிகள், அயலூ தொடர்புகள், மக்களி பண்பாடான வாழ்வுட சேர்ந்து உழைக்கும் திற என்பன ஒருங்கு சே பொழுதுதான் ஒரு கிராம நல்ல முறையில் வளர்ச் அடைய முடிகின்றது மேலும் சகல வசதிகளு ஒருங்கே அமைந்ததாகவு எல்லாக் கிராமமும் விளங் வதில்லை. இத்தன்மையி வைத்து நோக்கும்பொழு இக்கிராமம் ஓரளவிற் இயற்கை வளமும், மக் ளின் உழைப்பும் பெரும தரும் நிலையில் உள்ள அத்துடன் மற்றும் துறை ளிலும் படிப்படியா வளர் கொண்டு வரு தற்குரிய சூழ்நிலை ற்ப டுள்ளது. பரந்த நிலப்பர பைக் கொண்டுள்ள இக்கிர மத்தில் குடிசன அடர்த் சமமான நிலையில் அமை துள்ளதுடன் உண்மையா ஒரு கிராமத்தின் இயற் அழகினையும் காணமுடிகி றது.

## செம்பாடு

யாழ்ப்பாணக் குடா நா டிலே சில இடங்களிலே காணப்படும் சுண்ணப்பு கற்பாறைகள்கூட இக்கிர மத்தின் தென்மேற்குப் பி

## வை. இர

தேசத்தில் மேற்பரப்பி காணப்படுவதுடன் மக் ளுக்கு வருமானத்தை கொடுக்கும் முறையி தொழில்வாய்ப்பையு கொடுத்துள்ளது. இவ்விட தின் அருகாமையில் செம்மை யான சிவந்த மண்ணை கொண்டதும் வாழை தோட்டங்கள் நிறைய உ ளதுமான பகுதி அமை துள்ளது. இவ்விடத்தை 'செம்பாடு' என்றே அழை துக்கொள்வர். இக்கிராம தில் அதிகமான நிலப்பி தேசம் இருந்தாலும் பெரு பாலானவை பண்படுத் பயிர்ச்செய்கை செய்யமு யாத அளவிற்கு உவர் தன்மைகொண்ட தாழ் நில பிரதேசங்களாக உண்டு ஏனைய நல்நிலங்கள் யாவு மக்களின் முயற்சியினு தென்னஞ்சோலைகளும்பன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ன் நீர்வளமும் ...கள் மந்துவில்

...க கொடிகாமத்
...றிலே கனிவளத்
...பெற்ற மீசாலை
...றகில் சரசாலை
...லயாகக்கொண்
...வில் சங்க கால
... எவ்வாறு
...சிறந்துவிளங்கி
...போன்றுயாழ்ப்
...மருத நிலமாகக்
...ன்றது. மந்து
...து ம் மட்டு
...து மந்திகையா
...பாடு தெரியாது
...நும் யாழ்ப்பா
...டு. ஆனால் இக்
... கற்பக விருட்
...னையும்தென்னை
... ஓங்கி வளர்ந்
...ட்சியை இங்கு
... இந்த வேறு
...படமுடியாது.

...மமாக இருந்
...ன் முக்கியத்து
... தனிச்சிறப்பில்
...மையாக தங்கி

தேசப்புகளும் சேர்ந்து செழித்து வளரச் செய்துள்ளன. நில வளத்துடன் நீர் வளம் நிறைந்த இங்கு மாவும் பலாவும் கமுகும் நிறைந்து கனி வளத்தினை கொடுக்கின்றன.

## குள வளம்

யாழ்ப்பாணக்குடா நாட்டிலே எங்கும் இல்லாத அளவிற்கு குளங்கள் அதிகம் உள்ள இடமாக இருப்பதுடன் கிராமத்திற்கோர் தனிச் சிறப்பையும் கொடுக்கின்றது ஔவைப் பிராட்டியார் "ஆறில்லா ஊருக்கு அழகுபாழ்" என்று கூறியது போல ஓடுகின்ற ஆறுகள் இல்லாதுவிட்டாலும் ஆங்காங்கே காணப்படும் குளங்களே அழகு செய்யும் ஆறுகளாக விளங்குகின்றன. பத்துக்கு மேற்பட்ட குளங்கள் உள்ள இக்கிராமத்தில் 'கேலம்' என்னும் இடத்திலுள்ள குளம் மிகப் பெரிய குளமாகவும் என்றும் வற்றாதும் உள்ளது. எப்பொழுதாவது இக்குளத்தைப் பூரணமாக இறைத்துவிட முடியாதென்றும் அதன் அடியில் பழைய அரசர் ஒருவரின் இரும்பு உரல், இரும்பு உலக்கை ஆகியன தாட்டுள்ளதாகவும் அதை எடுப்பதற்கு குளத்தினை பூரணமாக வற்ற இறைத்தால் மழைவரும் என்றும் ஒரு கதை இக்கிராமத்தில் கூறப்படுகின்றது.

## தனங்கிளப்பு வெளி

'உழுதுண்டு வாழ்தலுக்கு ஒப்பில்லைக் கண்டீர்' என்பது போல பண்டுதொட்டே மக்கள் விவசாயத்தினையே முதற்பெரும் தொழிலாகச் செய்துவருகின்றனர். விவசாயம் மட்டுமல்ல, அரசாங்க உத்தியோகங்களிலும் பலர் தொழில் புரிகின்றனர். அத்துடன் திரைகடலோடியும் திரவியம் தேடும் பொருட்டு சிங்கப்பூருக்கும் பலர் சென்று அரசாங்கத் தொழிலை மேற்கொண்டுள்ளனர். யாழ்ப்பாணத்திலே உள்ளூர் கிராமங்களுக்கு அழகு செய்வனவாக விளங்கும் நெல் வயல்கள் உள்ள இடம் ஒரு சில கிராமத்திலேயே உண்டு. அவற்றில் தென்மராட்சிப் பிரிவு முதன்மைவகிக்கின்றது. இங்குதான் 'தனங்கிளப்புவெளி' என்று அழைக்கப்படும் பரந்த நெல்வயல்வெளி உண்டு. அடுத்தாக அமைந்துள்ள இடம் இக்கிராமத்தில் உண்டு. இவ்வளவுக்கு

கண்முன் தோன்றும். தமிழ் மக்கள் வாழ்க்கையில் மிகப் பெரும் செல்வமாக மதித்து வருவது மந்தைச் செல்வமாகும். மாடு என்றாலே செல்வம் என்று அர்த்தம் பெறும். இங்கு சாதாரணமாக ஒவ்வொரு வீட்டினரும் சுமார் பத்துமாட்டிற்கு மேல் வளர்த்துவருகின்றார்கள். மேலும் மாட்டுவண்டிச் சவாரியில்கூட பிரபல்யம் பெற்றவர்களாக விளங்குவதுடன், சிறந்த காளை மாடுகளை வாங்குவதற்கு அயலூர்களிலிருந்து இக்கிராமத்தை நோக்கி வருவதுண்டு. கழனிகளிலே அறுவடைக்காலம் ஆரம்பித்துவிட்டால் எங்கும் காளை மாடுகளின் சலங்கைச் சத்தமும் அம்மாடுகளைக் கொண்டு சூடு மிதிக்கும் பொழுது எழும் 'பொலி, பொலி' என்னும் சத்தமும் ஒலித்தவண்ணம் இருக்கும்.

## கற்பகவிருட்சம்

அடுத்ததாக இக்கிராமத்துக்குத் தனிச் சிறப்புக் கொடுப்பது கற்பகவிருட்சங்களான 'பனையும் தென்னையுமாகும். இதில் பனை தான் முதலிடம் பெறுகின்றது வேறு எங்குமே இல்லாத அளவிற்கு நெருக்கமாகக் காணப்படும் பனம் தோப்புகள் பார்ப்பதற்கு ஒரு கண்கொள்ளாக் காட்சியாகும். எனவே தான் 'பனங்காடு' என்றே ஒரு பகுதியை அழைத்து வருகின்றனர். பனம் பொருள் தொழிலை முன்னேற்றுவதற்கு திட்டமிடும் அரசினரோ அன்றி தனி நபரோ இக்கிராமத்தில் ஒரு பெரிய தொழிற்சாலையை நிறுவித் தொழிலை மேற்கொள்ளக்கூடிய பெரும் அளவு சாத்தியக் கூறுகள் இங்குண்டு. அத்துடன் பல இளைஞர்களுக்கு தொழில் வசதியையும் ஏற்படுத்த முடியும். சில ஆண்டுகளுக்கு முன்பு பனங்கட்டி செய்வதற்கென்று அரசினர் ஒரு தொழிற்சாலையைக் கட்டுவித்து ஆரம்பித்தாலும் இடையில் கைவிடப்பட்டுவிட்டது.

முக்கனிகளுள் சிறப்புப் பெற்ற வாழைக்கனி வளத்தை அள்ளி வழங்கும் வாழைத்தோட்டங்களும் வருவோரை வரவேற்கும் நெற்கதிர்களின் தலைகுனிவும், பணப்பயிராக விளங்கும் புகையிலைத் தோட்டத்தின் பச்சைக் காட்சியும், எல்லாவற்றினையும் மீறி உயர்ந்துநிற்கும் கற்பக விருட்சங்களின் காவலும் இக்கிராமத்திற்கு ஈடிணையற்ற தனிச் சிறப்பை வழங்கி உள்ளன. ஈழத்திலே உண்மையானதொரு இயற்கை வழத்தினை கொண்டுள்ள இடமாக விளங்குவதை இங்கொரு தடவை விஜயம்செய்யின் மறக்கவேமுடியாத தனிக்காட்சியாக இதயத்தில் அமைந்து விடும். 'விரலுக்குத் தக்கதுதான் வீக்கம்' என்பதுபோல இக்கிராமத்தின் சூழ்நிலைகள் மாறிக் கொண்டு வரவே முன்னேற்ற நிலையையும் அடையும் என்பதில் நாம் ஐயப்படத் தேவையில்லை.

— 12

...ப. இராசரத்தினம்

...இயற்கை
...வுமைவு, கல்வி
...அயலூர்
...மக்களின்
...வாழ்வுடன்
...ழக்கும் திறன்
...ங்கு சேரும்
... ஒரு கிராமம்
...பில் வளர்ச்சி
...டிகின்றது.
... வசதிகளும்
...மைந்ததாகவும்
...மமும் விளங்கு
...த்தன்மையில்
...க்கும்பொழுது
... ஓரளவிற்கு
...ளமும், மக்க
...யும் பெருமை
... உள்ளது.
...ற்றும் துறைக
...யபடியாக
...ண்டு வருவ
...நிலை ஏற்பட்
...ந்த நிலப்பரப்
...டுள்ள இக்கிரா
...ன அடர்த்தி
...யில் அமைந்
... உண்மையான
...தின் இயற்கை
...காணமுடிகின்

...க்குடா நாட்
... இடங்களிலே
... சண்ணைப்புக்
...கூட இக்கிரா
...மேற்குப் பிர

...மேற்பரப்பில்
...டன் மக்க
...குமானத்தைக்
...முறையிக்
...ப்பையும்
...து. இவ்விடத்
...யில் செம்மை
... மண்ணைக்
... வசழைத்
... நிறைய உள்
...ந்தி அமைந்
...இவ்விடத்தைச்
...ன்றே அழைத்
... இக்கிராமத்
...ன நிலப்பிர
...ர்லும் பெரும்
... பண்படுத்தி
... செய்யமுடி
...ற்கு உவர்த்
...ட தாழ் நிலப்
...க உண்டு.
...ங்கள் யாவும்
... முயற்சியினால்
...லைகளும்பனம்

வளம் நிறைந்த நெற்பரப்புகள் இருந்தும் கோடை காலத்தில் நீர்ப்பாய்ச்சல் மூலம் பயிர்ச் செய்கை செய்ய முடியாமல் இருப்பது மிகப் பெரிய குறையாக உள்ளது. இங்குள்ள நெல் வயல்கள் யாவற்றிலும் காலபோக அறுவடை முடிய தானியங்கள், மிளகாய், கிழங்கு வகைப் பயிர்கள் ஆகியன செய்யக்கூடிய வசதிகளை ஏற்படுத்தினால் இக்கிராமத்தின் செல்வ வளம் எவ்வளவுக்கோ உயர முடியும்.

## மாட்டு வண்டிச் சவாரியில் பிரபல்யம்

வேற்று மதத்தினருக்கு இடமில்லாத இங்கு, எங்கு திரும்பினாலும் சைவ ஆலயங்களின் கோபுரங்களே

# பலமுள்ளவராய் இருக்க......

லண்டனில் மாணவர்களில் 85வீதம் புகை பிடிக்கிறார்கள் லண்டனிலுள்ள ஆராய்ச்சி நிறுவனம் ஒன்று புகைப்பவர்களின் மத்தியில் தேர்வு நடத்தியது. புகைப்பவர்களா அல்லது புகைக்காமல் இருப்பவர்களா திடகாத்திரமுள்ளவர்கள் என ஆராயப்பட்டது. இதில் புகையாமல் இருப்பவர்களே திறமையானவர்களாகவும் புத்திக் கூர்மையாகவும் இருக்கின்றார்கள் என்பது தெரியவந்துள்ளது. இம் மாணவர்கள் எந்த வேலையையும் உற்சாகத்துடன் செய்கின்றார்கள் என்றும் தெரிய வந்தது.

# சி வை. 117

'ஈழகேசரி' பொன்னையா அவர்களது நினைவு நாளை 10 — 4 — 71 சனிக்கிழமை குரும்பசிட்டி சன்மார்க்கசபை கொண்டாடுகிறது. அகில இலங்கை ரீதியிலான பேச்சுப் போட்டியை நடாத்தி தங்க, வெள்ளி பதக்கங்களை அளித்தும் வருகிறது. ஈழத்து இலக்கிய வரலாற்றிலே ஈழகேசரிக் காலம் எனப் பலராலும் போற்றிப் புகழப்படும் பொற் காலத்தைச் சமைத்த பொன்னையா அவர்களது வாழ்க்கை வரலாறு சுவையானது. அவர் வரலாறு 'ஈழம் தந்த கேசரி' என இரசிகமணி கனக. செந்திநாதன் நூலாக எழுதி வெளியிட்டுள்ளார். அதன் தொடக்க அத்தியாயம் தான் இது இரசிகமணியின் அபார திறமை இம் முகவுரையில் அழகாக விழுந்திருக்கிறது.

1945-ஆம் ஆண்டுகார்த்திகை மாதம் 28-ந் திகதி கார்த்திகை மாதத்துமகம். காசினிக்குச் சைவநிலை போதித்து வழிகாட்டிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் தினம்.

குரும்பசிட்டியிலுள்ள, சாதாரணமான - ஆடம்பரமற்ற - ஒருகல்வீட்டிலேவிடிய எட்டுமணிக்குஉரத்தசத்தத்தில் யாரோ ஒருவர் பாடுங் குரல் கேட்கிறது.

"நல்லைநகர் ஆறுமுக
நாவலர் பிறந்திலரேல்
சொல்லு தமிழ் எங்கே?"

இந்த வரிகளை அவர் வாய் திரும்பத் திரும்பப் பாடுகிறது. உணர்ச்சியுடன் பாடுகிறது.

சிறிதுநேரம் மௌனம்; பேரமைதி.

மறுபடியும் அவர் வாய் அசைகிறது.

இப்போது அவர் உரத்துப் பாடுகிறார்; பாட்டில் வெறி கொண்டவர் போலப்பாடுகிறார்.

"ஜெயமுண்டு பயமில்லை
மனமே—இந்தச்
ஜென்மத்திலே விடுதலை
யுண்டு நிலையுண்டு
ஜெயமுண்டு பயமில்லை
மனமே."

பாரதியாரின் இந்தப் பாடல் அவர் வாயிலிருந்து வரும்போதுதான் அர்த்த புஷ்டி உடையதாக இருக்கிறது.



அந்த மனிதர் தூய வெள்ளைக் கதர்வேட்டியை, பாடிபடியே உடுக்கிறார்; கருநீலமேக வர்ணமுடைய கதர்ச்சட்டையைப் போடுகிறார்.

சி. வை. 117 என்ற இலக்கமுடைய அவரது மோட்டார்க்காரை முத்துக்குமாரு கொண்டுவந்து வாசலில் நிறுத்துகிறார்.

"ஒய், சின்னத்தம்பியரே, ஏறுங்காணும் காரிலே" என்று பிரபல கமக்காரரும் நம்மோடு ஒட்டிஉறவாடும் நண்பருமாகிய ஒருவரைப் பார்த்துத் தோழமையோடு கூறுகிறார். அந்தக் கமக்காரருக்கு மலையாளப் புகையிலைச் சங்கத்திலே பணம் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

கார் புறப்பட ஆயத்தமாகிறது.

பைசிக்கிளில் ஒரு தமிழாசிரியர் வந்து இறங்குகிறார்.

"நான் சைவ வித்தியா விருத்திச்சங்க (ஹிந்து போட்) மனேஜரை (இராசரத்தினத்தை) நேற்றுக் கண்டனான். உம்முடைய கஷ்டங்களை எல்லாம் சொன்னனான். கட்டாயம் தைமாதம் மாற்றிவிடுகிறேன் என்று சொன்னவர். இன்றைக்கும் அந்தப்பக்கம் போகப்போகிறேன். கட்டாயம் மனேஜரைச் சந்திக்கிறேன். பயப்படாமல் பள்ளிக்கூடம் போம்". ஆசிரியருடைய முகம் மலருகிறது.

முத்துக்குமாரு காரின் பின்பக்கத்தை (டிக்கியை)த் திறந்து ஒருபெட்டி நிறைய இருக்கும்வெற்றுச்சோடாப் போத்தல்களை வைத்து மூடுகிறார்.

பக்கத்து வீட்டிலிருக்கும் ஏழைக்கிழவி கேத்தல், பேணி இவற்றுடன் வந்து அவைகளை இணுவில் ஆஸ்பத்திரியில் இருக்கும் தன் பேத்தியிடம் கொடுக்கும்படி கேட்கிறாள்.

"என்ன பிள்ளை? ஆம்பிளைப்பிள்ளையா? நல்லது. கொடுக்கிறேனணை நீபோ". கிழவி தன் பொக்கை வாயால் சிரிக்கிறாள். கார் புறப்படுகிறது. சின்னத்தம்பிக் கமக்காரன் 'பின்சீற்'றில் உட்கார அவர் முன்சீற்றில் உட்கார்ந்து ஊர் விடயங்களைப் பற்றிப் பேசியபடியே தமது காரியாலயத்துக்குச் செல்கிறார்.

அவரது சி. வை. 117-ம் நம்பர் மோட்டாரை நாமும் பின்தொடர்வோம்.

அது சுன்னாகத்தில் தனலக்குமி புத்தகசாலை - திருமகள் அழுத்தகம் என்னும் 'போட்' பலகை தொங்கும் இடத்திற்போய் நிற்கிறது.

அவர் மெதுவாக இறங்கிப் போய்த் தனது கதிரையில் உட்காருகிறார்.

வந்த கடிதங்களை ஒவ்வொன்றாகப் பார்வையிட்டபடியே எழுதவேண்டிய பதில்களைப் பக்கத்தில் இருக்கும் 'சபா'விடம் கூறுகிறார்.

அதற்கிடையில் சி. வை. 117 இணுவில் ஆஸ்பத்திரிக்குப் போய்த் திரும்புகிறது.

சின்னத்தம்பிக்கமக்காரன் சுன்னாகம் சந்தைக்குப் போய் வாழைக்குலை, கத்தரிக்காய், முருங்கைக்காய் என்ன விலை விற்கிறது என 'நோட்டம் போட்டு'விட்டு வந்துகொண்டிருக்கிறார்.

கடிதங்களுக்குப் பதிலெழுதுமாறு கூறியபின் பக்கத்தில் உள்ள அறைக்கு அவர் வருகிறார். அங்கு பத்திரிகை வேலை நடக்கிறது. அரியம் ஒரு கட்டுரையைக்காண்பிக்கிறார். "சரி, போடலாம் போடு" என்று கூறியபடியே உள்ளே போய்க்கதவுநிலைப்படியில் நின்றபடியே. 'ஒரு மனேஜர் பார்வை' பார்க்கிறார்.

மெஷின்களின் 'கடாபுடா' ஓசை; அச்சுக்கோப்பவர்களின் துரிதமான வேலை; 'பைன்டர்'களின் (புத்தகங் கட்டுவோரின்) சுறுசுறுப்பான கைஅசைவு.

அவருடைய முகத்தில் திருப்தியின் தெளிவு.

பத்துமணியாகிறது.

சி. வை. 117 கடையின் முகப்பில் வந்துநிற்கிறது. பின் 'டிக்கி' திறக்கப்படுகிறது. சோடாப் போத்தல்கள் கொண்ட பெட்டி இறக்கப்பட, யாழ்ப்பாணத்திலுள்ள புத்தகக்கடைகளுக்குக் கொடுக்கவேண்டிய பாடபுத்தகங்கள் ஏற்றப்படுகின்றன.

அவர் புறப்பட ஆயத்தமாகிறார்.

அப்போது மகா வித்துவான் கணேசையரவர்கள் வருவது தெரிகிறது.

மிகப் பயபக்தியோடு எழுந்துநின்று கதிரையில் இருக்கச்செய்து சுகசேமம் விசாரித்து அவருக்கு என்ன தேவை என்பதைப் பௌவியமாக விசாரிக்கிறார்.

அப்பாக் குட்டியவர்களைக் கூப்பிட்டு ஐயா அவர்களின் தேவையைப் பூர்த்தியாக்கச் சொல்லிவிட்டுத் தமது அவசரவேலைகளைக் கவனிக்க ஐயா அவர்களிடம் மன்னிப்புக்கோரி புறப்படுகிறார்.

சி. வை. 117 யாழ்ப்பாணம் நோக்கி விரைகிறது.

## இரசிகமணி கனக. செந்திநாதன்

மலையாளப் புகையிலை ஐக்கியவியாபாரச் சங்கத்தின் நிர்வாகசபையில் அவர் ஒரு முக்கிய உறுப்பினர். அவர் அக்கட்டிடத்தினுள் நுழைந்ததும் பல முகங்கள் அன்பால் விரிகின்றன. அவர் தமது புன்சிரிப்பால் மறுமொழி கூறியபடியே சின்னத்தம்பிக் கமக்காரனின் விடயத்தை உரியவரிடம் கூறிப் பணத்துக்காக வேண்டிய ஒழுங்குகளைச் செய்துவிட்டு, "பணத்தை வாங்கிக்கொண்டு பஸ்ஸில் வீட்டுக்குப்போ" என அவருக்குச்

[12ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நான் விரும்பும் நூல்

—செல்வன் வ. ச. தவராசசிங்கம் —

நான் விரும்பும் நூல் திருக்குறளென்னும் திருநூல். இந்நூல் எல்லாம் நிறைந்தது எங்கும் பரந்தது. எவர்க்கும் பொதுவானது. எக்காலத்திற்கும் ஏற்ற இன்ப நிதியம். சுருக்கமும் விளக்கமும் சுவையும் பொலிந்த தூயமறை. இது தமிழனது இதயம். தமிழனது உயிர். இந்நூல் திருவள்ளுவநாயனார் உலகுக் கீந்த பொன்னூல்.

## பாராட்டுக்குரியது

இந்நூலைப் புலவர் தேசிய விநாயகம்பிள்ளை "வள்ளுவன் தந்த திருமறை தமிழ் மாதின் இனிய உயர்நிலை" என்று பாடினார் வள்ளுவர் காலத்துச் சங்கப் புலவர்கள் கடல்போலாழமும் வான்வெளிபோல விரிவுங் கொண்டதென இதனைப் பலவாறுகப் பாராட்டித் திருவள்ளுவமாலையொன்று பாடியிருக்கின்றனர். 'அணுவைத் துளைத்தேழ்கடலைப் புகுத்தி குறுகத் தறித்த குறள்' என்று ஔவையார் மிக மிக அழகாகப் புகழ்ந்துள்ளார். மதுரைத் தமிழ் நாகனாருந் தமது வாழ்த்துரையில் எல்லாப் பொருளுமிதன்பாலுள இதன்பாலில்லாத வெப்பொருளுமில்லை என்று போற்றியிருக்கின்றார்.

## சிறப்பும் மறுபெயர்களும்

இற்றைக்கு ஏறக்குறைய ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் கடைச் சங்கத்திலே அரங்கேற்றப்பட்ட இந்த தொன்னூல், நூற்றுமுப்பத்து மூன்றதிகாரங்களாக ஆயிரத்து முந்நூற்று முப்பது முத்துக் குறள்களால் ஆக்கப்பட்டிருக்கின்றது அன்றியும் அதன் கவிகளிலே ஒழுக்கமுயர்ந்திருக்கின்றது; அரசியலமைந்திருக்கின்றது; அறவுரைகளும் அறிவுரைகளும் நிறைந்திருக்கின்றன. பழமொழிகளும் உவமைகளும் நகைச்சுவையும் ஆங்காங்கே பரந்து கிடக்கின்றன தெய்வ நூல் தமிழ் மறை பொய்யாமொழி முப்பாலென்பன இதன் சிறப்புப் பெயர்களாகும்.

## 86 மொழிகளில்

காலத்தாலழிக்க முடியாத இக்கலைநூல் ஆங்கிலம் இலத்தின் ஜேர்மன் முதலாக இதுவரை எண்பத்தாறு மொழிகளிற் பெயர்க்கப் பட்டிருக்கின்றது. இப்பொழுது சிங்கள மொழியிலும் பெயர்க்கப்பட்டுவருகின்றது இதற்குரை எழுதினோர் பலர். அவற்றுள் பரிமேலழகரின் உரையே சிறந்ததென்பது ஆன்றோர் பலரின் கருத்தாகும். ஒருபானை சோற்றில் ஒரவிள் பதம்பார்த்தல் போல, இம் முத்துக்குவியலிலும் ஒரு முத்தைப் பொறுக்கி ஆராய்ந்து திருக்குறளின் சிறப்பை உணர்வோம்.

'கற்றதனுலாய பயனென்
கொல் வாலறிவன்
நற்றாடொழா அ ரெனின்'

இதுதான் அந்தக் குறள் முத்து. இரண்டு சிறு அடிகளிலேயே கல்வியின் சிறப்பையும் கற்றலின் நோக்கத்தையும் பயனையும் புலவர் வெகு நுட்பமாக எடுத்துக் காட்டியுள்ளார். வள்ளுவர் உலகிற் பரவியிருக்கும் பலவித வேற்றுமைகளைப் பார்த்தார். ஒற்றுமை தேங்கும் உயர்ந்த தமிழ்ச் சமுதாயத்தை உருவாக்கவேண்டுமென்று நினைத்தார்; முயன்றார். அவரது அரு முயற்சியும் வாழ்வுமே திருக்குறளென்னுந் தூய கருவூலமாக மாறித் தமிழ் நாட்டுக்குக் கிடைத்தது திருவள்ளுவப் பெருந்தகையியற்றிய இப் புனித நூலை இன்பத்தேன் கூட்டை உலகினுக்கொளி கொடுக்கும் மணிவிளக்கை தமிழ் நாட்டின் தனிப் பெரும் கலைச்செல்வத்தை ஆழ்ந்து கற்று கற்றதன் வழிச் செல்வதே நாம் அப் பெரியாருக்குச் செய்யும் பெருங் கைம்மாறும் கடனுமாகும்.

## இந்தியாவிலுள்ள உயர்ந்தகோபுரங்களும் அவற்றின் அளவும்

1 குதப்மினர் 238 அடி
2. டவர் ஆப் விக்டரி- சித்தூர் —122'
3 விக்டோரியா மெமோரியல் — 182
4 ஒச்சேர்லேரி கல்கத்தா —152'
5 தாஜ்மிரைட்ஸ்—137
6 தாஜ்மகால் —178
7 சால்மினர் (ஹைதராபாத்) 186'
8 கோல்கும்பஸ்— 198'
9 மதுரை கோபுரம்—152
10 புலானண்ட் தர்வாஜா —260'
11 ராஜாபிடவர்—260
12 கல்கத்தா நீதிமன்றம் — 180'

## உங்களுக்குத் தெரியுமா?

வினாக்கள்:

1 உலகிற் பெரிய கட்டடமெது?
2 'டாக்டரின் அனுமதியின்றி எவ்வகையான குயினையின் உண்ணுதல் ஆகாது?
3 பூமி நடுக்கம் ஏன் உண்டாகின்றது?
4 இலங்கையில் குஷ்டரோகிகளுக்குரிய வைத்தியசாலை எங்கிருக்கிறது
5 நால்வேதம், நாலு உலகம், நாற்படை என்பவற்றைக் கூறுக.
6 ஒலிம்பிக் விளையாட்டுக்களை ஆரம்பித்தவர் யார்?
7 வால்வெள்ளியின் வடிவம் எவ்வகையினது?
8 இலங்கையின் அடிமையை ஒழித்த தேசாதிபதியார்?
9 'நியூஸ்' என்னும் சொல் எப்படி உண்டாயிற்று?
10 மனித உடம்பில் எந்த உறுப்புப் பித்தத்தை உண்டுபண்ணுகிறது.

விடைகள்:

1 நியூயோர்க்கிலுள்ள அரசாங்கக் கட்டிடம். 102 மாடி. 1248 அடி உயரம
2 பிளாஸ்மோ அல்லது அற்றபரின்.
3 பூமியின் உள்ளே உள்ள படைகள் சுருங்கி நகர்வதால்.
4 கெந்தலையிலும் மாந்தீவிலும்.
5 இருக்கு, யசுர், சாமம் அதர்வணம், கிரேத, "திரேத. துவாபர, கலி, யானை, தேர், குதிரை, காலாள்.
6 கிரேக்கரும் உரோமரும்.
7 விளக்குமாறு போன்றது.
8 சேர் கொலின் காம்பெல் தேசாதிபதி.
9 வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கைக் குறிக்கும். நோத், ஈஸ்ட், வெஸ்ற், சௌத் என்னும் ஆங்கிலச் சொற்களின் முதல் எழுத்துக்கள் அத்திசைகளிலிருந்து வரும் செய்திகளைக் குறித்து வழங்கின. அவை சேர்க்கப்பட்டபோது (News) ஆயிற்று.
10 ஈரல்.

அனுப்பியவர்:
கரம்பனூர் செல்வி விஜயா சிவசம்பு
ஊர்காவற்றுறை.

## தெரிந்து கொள்ளுங்கள்

அட்லான்டிக் பெருங் கடலைத் தனியாக இரண்டாவது மனிதனாகவானூர்தியின் மூலம் கடந்து சென்றவர் அமெலியர் எர்ஹார்ட் ஆவர் இவர் 21 மே மாதம் 1932-ல இச் சாதனையைச் செய்தார்.

■ எர்னஸ்ட் ஜஸ்மர், மெட் என்பவர்கள் 1956 மே 23-ல் எவரெஸ்ட் மலையை இரண்டாவது நிலையில் ஏறி முடித்தனர்.

■ ஜனவரி 1961-ல் ககாரின் என்பவர் முதன் முதலாக உலகைச் சுற்றி வான வெளிக் கப்பலில் வலம் வந்தார். இரண்டாவது ஆள் ஜெர்மன் டிட்டோவ் ஆவர். 1961 ஏப்ரலில் இச் சாதனையைச் செய்து முடித்தார்.

■ பிரேசில் நாட்டின் [illegible] 1960 ஏப்ரல் 21-ல் தேர்ந்தெடுக்கப்பட்டது.

# எல்லாம் நன்மைக்கே!

— சி. நளினகுமாரி —

'எல்லாம் நன்மைக்கே' என்பது எந்தச் சூழ்நிலையிலும் பொருந்தக்கூடியதா? என்ற கேள்வியை ஒரு பெரியவரிடம் கேட்டேன்.

"ஆம் குழந்தை! தீமை வருவதும் நன்மைக்காகவே தான். இறைவன் வீணாக எதையும் படைத்திருக்கவில்லை. எல்லாவற்றையும் கருத்தோடு, நமக்கு ஏதாவது ஒருபாடத்தைக் கற்பிப்பதற்காகத்தான் படைத்துள்ளார்" என்றார். அப்போது என் காலில் ஏதோ குத்தியது. முள் தான்! அதைக்கையில் எடுத்துக் காட்டியவாறு "இந்த முள் என் காலைக் குத்தி வலி உண்டாக்கிவிட்டது. ஆனால் எனக்கு எதுவும் நன்மை செய்யவில்லையே" என்று கேட்டேன்.

"இல்லையம்மா; இந்தமுள் உன் காலில் குத்தியதால் தான் இம்முள்ளின் தன்மையை நீ அறிந்தாய். இனி நீ நடந்து செல்லும்போது வழியில் முள்ளைக்கண்டால் எடுத்து ஓர் ஓரமாகப்போடுவாய். அது மட்டுமல்ல; உலகில் எத்தனையோ பேர்கள் இந்த முள்ளைப்போன்று பிறரைத் துன்புறுத்தும் மனம் படைத்தவர்களாய் இருக்கின்றார்கள். அவர்கள் உன் வாழ்க்கையில் எதிர்ப்பட்டால் இந்த முள்ளை ஒதுக்குவது போன்று ஒதுக்கிவிட்டு வாழ்க்கைப் பாதையில் நீ நன்முறையில் முன்னேற வேண்டும்" என்று கூறி முடித்தார்.

## "ஒரு கணம் பொறுத்திடுக"

அடியான் ஒருவன் ஆண்டவனைக்காண எண்ணி அல்லும் பகலும் தொழுது வந்தான். இவனின் விருப்பத்தை நிறைவேற்றும் பொருட்டு ஆண்டவன் ஒரு நாள் அந்த அடியான் முன் தோன்றினார், ஆண்டவனைக் கண்ட அடியான் பெரும் மகிழ்ச்சி அடைந்தான். தான் நினைத்த எண்ணம் முடிந்துவிட்டதென எண்ணி மகிழ்ந்தான். இறைவன் அடியானை நோக்கிக் கேட்டார். உனக்கு என்னவேண்டும் என்று அதற்கு அடியான் ஆண்டவனே கோடி வருடங்கள் தங்கட்கு ஒரு கணம் என்று சொல்லுகின்றார்களே இது உண்மையா என்று கேட்டான். அதற்கு ஆண்டவன் நீ சொல்வது உண்மையே, எனக்கு ஒரு சதம்தான் ஒரு கோடி ரூபாய் என்று புன்சிரிப்போடு பதில் கூறினார். உடனே அடியவன் ஆண்டவனே எனக்கு ஒரு சதம் தந்தருளவேண்டுமென இரந்து நின்றான் அதற்கு ஆண்டவன் அடியவனைப் பார்த்து தருகின்றேன்; ஆனால் ஒரு கணம் பொறுக்க வேண்டுமென்றார். ஆண்டவன் கூறிய அப்பதிலைக் கேட்டதும், அடியவன் தேம்பித் தேம்பி அழுதான். தான் செய்த தவறை அப்பொழுதுதான் உணர்ந்தான். அடியவன் ஒரு சதம் பெறுவதற்கு ஒரு கோடி வருடங்கள் பொறுக்கவேண்டும் என்பதை யார் அறிவார்.

அனுப்பியவர்:
ஸ்ரீ நாவலன்,
பருத்திறைத்து.

## வீரப்புலி

ஒரு மாடும் புலியும் சைவ உணவு விடுதிக்குள் நுழைந்தன. முதலில் மாடு இரண்டு வாழைப் பழங்களும் ஒருவாளித் தண்ணீரும் கொண்டு வருமாறு பணியாளிடம் கூறியது. அதைக் கேட்ட பணியாள் புலியிடம் திரும்பி அதற்கு என்னவேண்டும் என்று கேட்டான். அதற்கு புலி இப்போது ஒன்றும் வேண்டாம் மாடு பழத்தைச் சாப்பிட்டு வரட்டும் நான் அதை முடித்துவிடுகிறேன்" என்றது.

## முள் !


காலில் முள் தைத்துவிட்டால் அந்த முள்ளை இன்னொரு முள்ளால் எடுக்கிறோம் ஒரு முள் மற்ற முள்ளை எடுக்க உதவியதே என்பதற்காக அதனிடம் நன்றி விசுவாசம் பாராட்டி பற்றுக்கொண்டு அந்த முள்ளை நாம் மீண்டும் காலில் குத்திக்கொண்டு மகிழ்வதில்லை. குத்திய முள்ளோடு எடுத்த முள்ளையும் விட்டெறிந்து விடுகிறோம். பற்று விடுவதற்காகப் பற்றற்றான் பற்றினைப் பற்றுவதும் நல்லோர்களின் சேர்க்கையை நாடுவதும் முள்ளை முள்ளால் எடுக்கும் காரியமாகவே அமைய வேண்டும்.


## 'சோவியத் நாடு'

★ சோவியத்-ஈழத்து மக்களின் நப்புறவின் குரல் "சோவியத் நாடு"

'சோவியத்நாடு' வாசியுங்கள்

★ சோவியத் மக்களின் சாதனைகளைப் பற்றியும், விசேஷமாக மத்திய ஆசிய மக்களின் புதிய வாழ்வைப் பற்றியும் அறிந்து கொள்ளலாம்.



'சோவியத்நாடு' வாசியுங்கள்
எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்:-
தகவல் பகுதி, சோவியத் ஸ்தானிகராலயம்,
27, ஸர் எர்னஸ்ட் டி சில்வா மாவத்தை, கொழும்பு-7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட மகாகவி



பாரதம் மட்டுமன்றி உலகே போற்றும் உன்னத கவி பாரதி. அடிமைவிலங்கினுல் கட்டுண்டு நாடு சுதந்திரத்தை இழந்து. பெண்கள் அடிமைகளின் அவல நிலையில் உரிமைகள் எதுவுமின்றி இருந்தவேளையில் அடிமை விலங்குகளை அறுத்தெறியச்செய்தவர் பாரதியார். ஆணும் பெண்ணும் நாட்டின் இருகண்கள்போன்ருேர். இருகண்களில் ஒன்று ஊனம் அடையின் சரிவர எதனையும் செய்யமுடியாது ஆகவே நாட்டின் கண்களாகிய இவ்விருபாலரும் இணைந்து செயலாற்றவேண்டும் என்பதைப் பாரதி நிலைநாட்டினுர்.

நாட்டின் பெண்கள் அடிமைகளாக, உரிமையற்றவர்களாக இருப்பின் அந்நாட்டுச் சந்ததியினரும் அவ்வாறே ஆகிவிடுவர். நல்ல வீரம் நெஞ்சுரம் கொண்ட நல்மக்கள் உருவாகமாட்டார்கள். நன்மக்கள் நாட்டில்தோன்ற பெண்கள் நன்நிலையில் இருக்கவேண்டும் என்பதை உணர்ந்து பெண்கள் விடுதலைக்கு ஆவனசெய்தார். இந்தநாட்டு நலன், பெண்களின் விடுதலையில் தான் தங்கியிருக்கிறது என்பதைமனதிற்கொண்டு தம் பாடல்களில் முக்கிய இடத்தைக் கொடுத்தார். கல்வி, செல்வம், வீரம் எனும் முப்பெரும் கொடைகளுக்கும் பெண்ணை இருப்பிடமாக்கினுர். இம்மூன்றும்ஒருவனுக்கு இன்றியமையாதன என்பதை எடுத்துக்கூறி அவற்றினைத் கலைமகள், திருமகள், காளி என்று உருவகித்து வணங்கும் தெய்வங்களின் நிலையைக் கொடுத்துள்ளார்.

பெண்கல்விக்குப் பாரதி பாரேவித்திட்டார். இவரது

— நிர்மலா

இவ்வித்தின் பயனை இன்று பெண்கள் கல்வியறிவிற் சிறந்து விளங்க முடிகிறது. பெண்கள் ஒழுக்கந்தவருது இருப்பதற்கு ஏதுவானகல்வியின் முக்கியத்துவத்தையும், அறிவினுல் திமிர்ந்த ஞானச் செருக்குண்டாவதினுல் பெண்கள் தவருன வழியில் செல்லார்கள் எனக் கூறும் பாரதிஆணும்பெண்ணும்சரிநிகர்என்றுகருதிச் செயலாற்றினுல்இவ்வுலகம் அறிவில் ஒங்கி நன்றாக சகல துறைகளிலும் நன்மையடையும் எனவும் கூறுகிறுர்.

பெண்கள் நன்னெறி பிறழாது இருக்க அறிவு முக்கியம் என்பதை-

நிமிர்ந்த நன்னடை
நேர்கொண்டபார்வையும்,
நிலத்தில் யார்க்கும்
அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கும்
இருப்பதால்
செம்மை மாதர்
திறம்புவதில்லையாம்

என்ற அடிகள்மூலம் வற்புறுத்துகிறுர். அவர்காலத்தில் பெண்கள் அடிமை நிலையில் இருந்தனர். ஆனல் தம் ஞானக்கண்ணில் வருங்காலப் பெண்கள் எப்படியிருப்பர் என கற்பனை பண்ணி பாவாக அமைத்துள்ளார். பல கலைகளும் கற்று, பழைய முட்டுக்கட்டைகள் மூடக்கொள்கைகளை தகர்த்து மானிட ஜென்மத்தை நல்வழியில் செலுத்தி ஆண்கள் போற்றிட வாழ்வார்கள் என்று குறிப்பிடுகிறுர். ஆகவே அதற்கேற்ப பெண்கள் நற்செய்கைகளைச் செய்வதில் ஈடுபடவேண்டும். நாட்டு நன்மைக்காக உழைத்து வீட்டு நலனைப்பேணி செயற்படவேண்டியது பெண்களின் இன்றியமையாத கடமை என்பதில் ஐயமில்லை பாரதத்தில்மட்டுமன்றி பார் சிறக்கப் பெண்கள் செயற்பட வேண்டும். மூடக்கொள்கைகள் வேண்டாத பழக்கமுறைகளை நீக்கி நாட்டுக்குகந்த நற்செயல்களைச் செய்தல் அவர்களது இன்றியமையாத கடனுகும்.




# சகோதரிகளுக்கு ஒரு செய்தி

விலையுயர்ந்த ஹேர் ஆயில்களும், உயர்தர சோப்புகளும், பேஸ்டுகளும் வாங்கச் செலவிடுவது தவிர்க்கப்படவேண்டிய ஒன்றுதான். பல் விளக்க உமிக்கரியையும் தலைக்குத் தடவத் தேங்காயெண்ணெயையும் விட இவை எந்தவிதத்திலும் உயர்ந்ததல்ல வேண்டுமானுல் மருந்துச் சத்துள்ள ஹேர் ஆயில்களை வீட்டிலேயே தயாரித்து கொள்ளலாம்.

0 0 0

பவுடர், ஸ்நோ போன்றவற்றை முகத்தில் பூசிக் கொள்வதால் சருமத் துவாரங்கள் அடைபட்டுக் கிருமிகள் புகுந்து பருக்கள் உண்டாகும். இயற்கையாகக் கசியும் எண்ணெயையும் வியர்வையையும் இவை தடை செய்வதால் வேறுபல கேடுகள் நேருகின்றன. இவற்றைக் கூடுமானவரை உபயோகிக்காமல் இருப்பதுதான் நல்லது. நம் நாட்டுச் சீதோஷ்ண நிலைக்கு இவை தேவையேயில்லை.

# வனிதையர் வனப்புடன்-திகழ.... சிகையலங்காரம்

கூந்தலை எந்நேரமும் ஒரே மாதிரியாக அலங்கரிக்காது நாம்போகும் இடத்திற்கு ஏற்ப அலங்கரிப்பதே சிறந்தது. ஆகவே பல்வேறுபட்ட தனித்து நாமே நம்மை அலங்கரித்துக்கொள்ளக்கூடிய கூந்தல் அலங்கார முறைகளைக் கைக்கொள்வது சிறந்ததும் அழகைக் கொடுக்கக்கூடியனவுமாகும்.

## கட்டையான கூந்தலா கவலை வேண்டாம்

கட்டையான கூந்தலையுடையோர் கவலைப்படவேண்டியதில்லை. அதிக விலை கொடுத்து முடிமயிர் வாங்கத் தேவையில்லை. தினமும் உதிரும் முடியை பக்குவமாக எடுத்துச் சேர்த்து வைத்தல் வேண்டும். இது ஓரளவு சேர்ந்தபின் அவற்றைச் சவர்க்காரம் போட்டுக் கழுவி உலரவிடவேண்டும். உலர்ந்ததை வட்ட வடிவாகச் செய்யவேண்டும் அதனைக் கொண்டைக்குப் போடும்] மெல்லிய கண்ணறையுள்ள நெற்றினுள் வைத்து விட்டால் பார்ப்பதற்கு அழகாகவும் ஒழுங்காகவும் அமையும்.

இவ்விதம் செய்வதை 'பண்' என்போம்.

## பண்ணும் சுருளும்

இந்தப் பண்ணை வைத்துத் தலையலங்காரம் செய்வதை பார்ப்போம். இதில் பண்ணும் சுருளும் சேர்ந்துள்ளது. விரும்பியோர் உச்சி அமைப்பது ஒருமுறை.

கூந்தல் அலங்காரம் செய்யுமுன் எண்ணெய்ப் பசையற்று இருப்பதே சிறந்தது. கூந்தலை நன்கு வாரி ஒன்றுகச் சேர்த்துக் கட்டிவிடவேண்டும். கட்டியதை மேலும் கீழுமாக இரண்டு பிரிவாகப் பிரித்தல் வேண்டும். மேலாக நாம் எடுக்கும் கூந்தல் கீழே விட்டதிலும் பார்க்க குறைவானதாக இருந்தால் நன்று. மேல்பக்கமாக எடுத்ததை வலையின்மேல் கொண்டுவந்து அரைவாசியில் கிளிப் குத்திவிடல் வேண்டும். இதற்குமேல் தயாரித்துவைத்த 'பண்'ணை வைத்து ஹேயாப்பின்னுல் குத்தி விழாதவாறு செய்யவேண்டும் முன்பு மேலே கொண்டுவந்த கூந்தலின் மிகுதியினுல் இந்தப் 'பண்'ணை மூடி நன்கு மறைத்துக் குத்தி மிகுதியை முன்பு கட்டிய முடியுடன் சேர்த்துக் கட்டல் நன்று. பிற்பகுதியில் நீளமாக இருக்கும் முடியை நான்காகப் பிரித்து முறையே ஒவ்வொன்றுக எடுத்துச் சுருட்டி பண்ணுக்கு முன்புறமாக கொண்டுவந்து கிளிப் குத்தல் வேண்டும் இச்சுருள் வட்ட வடிவாக அமையும்.

இதற்கு இரண்டு பக்கமாக இரண்டு கிளிப் குத்தல் சிறந்தது. இதன்படி பக்கத்துக்கு இரண்டாக நான்கு சுருள்கள் இடம் பெறும். அடர்த்தியான கூந்தல் உள்ளோர் ஆறாகவும் பிரிக்கலாம். இச்சுருள்கள் மினு மினுப்பாக இருக்கவேண்டின் வஸ்லின் கிறீமை உபயோகிக்கலாம். எண்ணெய் உபயோகிக்கக் கூடாது. விரும்பினுல் இச்சுருள்களுக்கிடையில் பூக்களை வைத்து அலங்கரிக்கவிரும்பியோர் உச்சி வகிர்ந்துகொள்ளலாம். உச்சி இன்றியும் இதனை அமைக்கலாம்.

இது இளம் பெண்கள் எங்கு செல்லும்போதும் அலங்கரித்துக்கொள்ளத்தக்க ஓர் அழகான கொண்டை ஆகும்.

(13 ம் பக்கம் பார்க்க)



# அழகு குறைவாக

(6-ம் பக்கத் தொடர்ச்சி;

பப்பாளி இலைகளை நீரில் அவித்து அந்நீரால் கழுவுவதோடு இலையை வாட்டி வலி உள்ள பகுதியில் போட்டால் வலி குறையும்.

## சரும ரோகங்களுக்கு

இலங்கையில் சராசரி 4 பேரில் ஒருவருக்கு என்ற விகிதத்தில் ஏதாவது ஒரு சரும நோயால் பீடிக்கப்பட்டவர்களாக இருக்கின்ருர்கள். பப்பாளிப் பாலில் நாம் செய்த ஆராய்ச்சியின் பயனுக பலவகையான சரும ரோகங்கள்: படர்தாமரை வேர்க்குரு சிரங்கு கட்டிகள் காலில் ஏற்படும் காய்ப்பு மார்பில் ஏற்படும் மற்று போன்றவற்றிற்குப் பப்பாளிப் பாலிலிருந்து செய்த மருந்துகள் நிறையப் பலனைக் கொடுத்துள்ளன. தேள், எறும்பு கொட்டிய இடத்துக்கு பப்பாளிப் பாலை தேய்த்துவிடுவதால் வலி குறைவதாக அறிகின்ருேம். யானைக்கால் வியாதிக்குக் கூட பப்பாளிப்பழத்திலிருந்து மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## யானைக்கால் வியாதிக்கு

யானைக்கால் வியாதிக்கு பப்பாளிப்பழத்தை உலர்த்தி அதிலிருந்து கிடைக்கும் தூளிலிருந்து மருந்து கண்டு பிடிக்கலாம். இலையை அரைத்து வெளிப் பூச்சாகப் பூசி வந்தால் குறைவதாக நாம் அறிகின்ருேம்.

வாசகர்கள் யாவரும் இக்கட்டுரையை வாசித்த பின்னர் பப்பாளியின் மகிமையை உணர்வார்கள் என நினைக்கின்றேன்.

இந்த பப்பாளி, சத்துணவுத் திட்டத்தின்கீழ் மிகப் பயன்படும். எனவே மருந்துக்கும் விருந்துக்கும் பப்பாளியை நிறையப் பயிரிடுங்கள். அவை நிறையப் பிரயோசனப்படும்.

களைப்பும் சோர்வும் ஏற்பட்டிருப்பவர்கட்கு உடல் நிறைவையும் சத்துப் பொருள் நிறைவையும்பெற பப்பாளிப்பழத்தோடு சர்க்கரையும் எலுமிச்சம் பழமும் சேர்த்துத தயாரித்து நிறையப் பருகுங்கள்.

இக்கட்டுரையில் இதுவரை நாம் அறிந்ததைத் தந்தோம். இனிமேலும் அறியப்போவதை மீண்டும் தருவோம்.

—"ஹரிஸ்"


"நிலமே மக்களின் நிரந்தரச் செல்வம்"

எங்களிடம் யாழ்ப்பாண மாவட்டத்தில் விற்பனைக்கு சகல வசதிகளும் அமைந்த பல காணிகள் உண்டு.

நேரில் தொடர்பு கொள்ளுங்கள்:-

இலங்கா நிதி லிமிட்டெட்

284, காங்கேசன்துறை வீதி - 284, K. K. S ROAD.

வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவை 117

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

சொல்லிவிட்டு, சைவவித்தியா விருத்திச் சங்கக்கந்தோரைநோக்கிவிரைகிருர்.

அங்கே 'மனேஜர்' இல்லை.

திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையை நோக்கி சி. வை. 117 பறக்கிறது

முத்துத்தம்பி வித்தியாசாலையில்படிக்கும்அநாதைக்குழந்தைகள்- சின்னஞ்சிறுசுகள்-நாற்பதடி ஆழமான கிணற்றில் துலாவால் தண்ணீரள்ளிக் குளிக்க, குடிக்க படும் அவஸ்தையை எப்படி நீக்குவது என 'மனேஜர்' இராசரத்தினம் மண்டையைப் போட்டு உடைக்கும் தருணம் சி. வை. 117 உள்ளே நுழைகிறது.

மனேஜர்தனதுதேவையை நாசூக்காக அவருக்கு எடுத்துச் சொல்கிருர்.

அவர் சிறிதுநேரம் யோசித்துவிட்டுத் தாம் அந்தத் தேவையைப் பூர்த்தியாக்குவதாக வாக்களிக்கிருர்.

பின்பு 'கஷ்டப்படும் அந்த ஆசிரியர்' பிரச்னையைக்கூறி 'நல்ல முடிவுடன்' விடைபெறுகிருர். சிவை. 117 மறுபடியும் யாழ்ப்பாணம் விரைகிறது. கஸ்தூரியார் இல்லத்தில் பரிகாரியார் கதிரவேற்பிள்ளையுடன் சிறிதுநேரம் சல்லாபித்துவிட்டு அங்கு வந்த யோகர் சுவாமிகளை வணங்கி ஸ்ரீலங்கா புத்தகசாலைக்கு வருகிருர்.

ஸ்ரீலங்கா புத்தகசாலையில் பாடபுத்தகங்கள் இறக்கப்படுகின்றன. அவரும் ஸ்ரீலங்கா புத்தகசாலை உரிமையாளர் தெய்வேந்திரமும் 'அரட்டை' அடிக்கிருர்கள் மனம் விட்டுப் பணப்பிரச்னை பாடபுத்தகப் பிரச்னை அச்சுக்கூடப்பிரச்னை எல்லாவற்றையும் பேசுகிருர்கள். 'கொழும்புச்சோடா — கச்சல்சோடா' ஒன்றை வாங்கி முழுவதும் குடித்துவிட்டுத் தமது வருகால — கமத்தொழில் கைத்தொழில் பாடசாலை பற்றிய திட்டங்களை அவர் விவரிக்கிருர்.

அதற்கிடையில் சிவை. 117 பல புத்தகசாலைகளுக்கும் பாடபுத்தகங்களை விநியோகித்து விட்டுவந்து காத்துநிற்கிறது.

தமது தனலக்குமி புத்தகசாலைக்கு வேண்டிய புத்தகங்களை ஏற்றிக்கொண்டு அவர் சுன்னுகம் திரும்புகிருர்.

அப்போது மணி ஒன்றடித்து ஓய்கிறது. புத்தகக்கடையில் புத்தகங்களை முத்துக்குமாரு இறக்கி வைக்கிருர்.

அரைமணித்தியாலத் தாமதத்திற்குப்பின் அவர் குரும்பசிட்டிக்கு வருகிருர்.

இன்னும் அவர் வேலை ஓயவில்லை.

முத்துககுமாருவை வீட்டுக்குப் போய்ச் சாப்பிட்டுவிட்டு மூன்று மணிக்கு வரும்படி சொல்கிருர்.

சலரோகநோய் கொண்ட அவர் அதற்கேற்றபடி சமைக்கப்பட்ட சாப்பாட்டை உண்டு சிறிது ஓய்வெடுக்கிருர்.

ஆளுக்குத் தோதில்லாத சிறிய சைக்கிள் ஒன்றிலே ஏறி தாம் வாங்கியுள்ள பன்னிரண்டு ஏக்கர் காணியிலே நடைபெறும் கமத்தொழிலைப் பார்க்கச் செல்லுகிருர். மத்தியான வெய்யில் தான் என்ருலும் அவருக்கு அந்தத் தோட்டத்தில் நடைபெறும் வேலையைப் பார்த்தால்தான் நித்திரை வரும் ஆள் ஒரு நல்ல கமக்காரன்.

நெல்லு வளர்ந்திருக்கும் அழகிலே சொக்கி விளைவிக்க முடியாது என்றுபலர் சொல்லிய சிரகமும் உள்ளியும் விளைந்திருக்கின்ற காட்சியிலே நெஞ்சுபூரித்துவாழைகுலை தள்ளியிருக்கும் மாட்சியிலே மனமகிழ்ந்து வேலை செய்யும் ஆட்களை உற்சாகப்படுத்தி வீடு திரும்புகிருர்.

அப்பாடா வெய்யிலென்ன வெய்யில். கொண்டு வந்த பத்திரிகைகளை ஈசிசேரில் படுத்தபடியே மேலோட்டமாகப் படித்து முடிக்கிருர்.

பின்னேரம் 3 மணி.

சிவை, 117 மயிலிட்டிக் கிராமசங்கக் கட்டடம் நோக்கி விரைகிறது. அதற்குள் அவர் நுழைகிருர்.

பார்த்துக் கையெழுத்திட வேண்டிய காகிதங்களைப் பார்வையிடுகிருர். அடுத்த கூட்டத்துக்கு வேண்டிய ஒழுங்குகளைக் கவனிக்கிருர். ஆம் அவர் மயிலிட்டிக் கிராமசங்கத்தின் தலைவர்தான். ஒரு மணிநேரம் கழிகிறது:

அடுத்து தெல்லிப்பழையில் ஒரு கூட்டம், முக்கியமான கூட்டம் வலி வடக்குப் பண்டகசாலைகளின் சமாசக் கூட்டம் அந்தச் சமாசத்தில் அவர் ஒரு நிர்வாக உறுப்பினர்.

பெரிய 'பெருச்சாளி'கள் இருந்து நடைபெறும் கூட்டம், பிச்சல் பிடுங்கல் தலைவலி மிகுந்த கூட்டம் ஆறுதலாக அமைதியாகத் தகுந்த ஆலோசனைகள் கூறுகிருர். ஒருவழியாகக் கூட்டம் முடிகிறது. அவசரம் அவசரமாக ஊர் திரும்புகிருர்.

அவர் சிறப்பாக நடத்தும் குரும்பசிட்டி சன்மார்க்க சபையில் நாவலர் நினைவுதினக் கூட்டம்.

தலைமை தாங்கி நாவலர் தமிழுக்கும் சைவத்துக்கும் செய்த பெருந்தொண்டுகளை விபரிக்கிருர். பேச்சாளர்களை அறிமுகப்படுத்திக் கூட்டத்தை நடாத்துகிருர்.

எட்டரை மணிக்குக் கூட்டம் முடிகிறது.

வாசலில் வந்து நிற்கிருர் குரும்பசிட்டி சங்கக்கடை மானஜர் பாலசந்திரன் எதிர்ப்படுகிருர். கடை ஒழுங்குகளை விசாரித்து, கடன்களை அறவாக்க வேண்டுமென்று கூறிவிட்டு வீட்டுக்குப் போகிருர். அங்கே அவர் நிலத்தில் வேலை செய்யும் ஒருவனின் இளம்பெண் தன்கணவன் தனக்குச் செய்யும் கொடுமைகளைக் கூறிப் பரிகாரம் கேட்கிருள். அவர் அவளின் குறையைத் தீர்ப்பதாக வாக்களிக்கிருர். பிறகு வானொலியைத் திருப்புகிருர். வானொலியில் யாரோ அருமையாகப் பாடுகிருர். ஆஹா என்று கேட்டு இரசிக்கிருர்

சிவை 117என்னும் மோட்டார் இரவு 9 மணிக்கு கொட்டகைக்குள் பூட்டப்படுகிறது இந்த மோட்டார் பிரசித்தமானது இதை அறிந்தவர் பலர்

இதன் சொந்தக்காரர் யார்?

அதில் ஏறி இவ்வளவு வேலைகளையும் தினசரி கடமையாகச் செய்தவர் யார்?

அலுப்புச் சலிப்பில்லாமல் உழைப்பு, முயற்சி உற்சாகமான வேலை எனப் பாடுபட்டு உயர்ந்தவர் யார்?

'வானந் துளங்கிலென் மண் கம்ப மாகிலென்' என்ற தேவாரத்தையே தமது இலட்சிய முத்திரையாக்கித் துணிவே துணை என வாழ்ந்தவர் யார்?

அவர்தாம் ஈழகேசரி பொன்னையா' அவர்கள்

அவர் தனலக்குமி புத்தகசாலை மனேஜர்; திருமகள் அழுத்தக அதிபர்; ஈழகேசரி என்னும் தேசிய வாரவெளியீட்டின் பத்திராதிபர்; யாழ்ப்பாணம்— மலையாளப் புகையிலை ஐக்கிய வியாபாரச் சங்கத்தின் நிர்வாக உறுப்பினர்; சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் முக்கிய உறுப்பினர்களில் (டைரக்டர்களில்) ஒருவர். மயிலிட்டிக் கிராமசங்கத் தலைவர், வலி வடக்குப் பண்டசாலைச் சமாசத்தில் நிருவாக அங்கத்தவர் குரும்பசிட்டிச் சன்மார்க்க சபைத் தலைவர்; குரும்பசிட்டி ஐக்கிய நாணய சங்கம், பண்டசாலைச்'சங்கம் இவற்றின் தலைவர். இந்தப் பத்துத் தாபனங்கள் மாத்திரமன். இன்னும் எத்தனையோ சங்கங்களில் அங்கம் வகித்துத் திறம்படச் செயலாற்றியவர் அவர்

'பேருக்காக' உறுப்பினர் புகழுக்காகத் தலைவர் என்று இருந்தவர் அல்லர் அவர்.

பொன்னையா வெளியிட்ட புத்தகமா? அதன் அழகே தனி.

திருமகள் அழுத்தகம் வெளியிட்ட ஒரு சிறு துண்டுப் பிரசுரம்கூடக் கண்ணையும் மனத்தையும் கவரும்.

ஈழகேசரிப் பத்திரிகையா? அது தரத்தில் உயர்ந்து முத்துமுத்தான எழுத்துடன் பிழை என்பதே ஒன்றுகூட இல்லாமல் இருபத்தேழு வருடம் வாராவாரம் வெளிவந்தது.

பொதுச்சங்கங்களா? அவர் இருந்தகாலத்தில் உயிரூட்டம்பெற்று ஒழுங்கான சேவை என்பதையே குறிக்கோளாகக் கொண்டு விளங்கின.

'கூலிக்கு மாரடிக்காத
முயற்சி
குணம்பல கொண்டு
மலர்ந்த அரும்பு
போலிச் சரக்கல்ல
ஆண்மையில் வாழ்ந்த
பொன்னைய வள்ளல்
அளித்து மறைந்தனன்'

எனக் கவிஞர் சோ. தியாகராசன், பொன்னையா அவர்களைப் பற்றிப் பாடியுள்ளது எழுத்துக்கெழுத்து உண்மை

# சிறுகதை

(5ம் பக்கத் தொடர்ச்சி)

அவரை வேண்டினன். குருக்கள் சிலையாகிவிட்டார். சிவராமன் தன் தாயை இழந்ததே தன்னுல்தான்; அப்படியிருந்தும் தன் மகனைக்காப்பாற்றியதோடல்லாமல் தன்னிடம் மன்னிப்புக்கேட்டது குருக்களின் அறியாமையை அடியோடு அழித்துவிட்டது. 'சிவராமா என்னை மன்னித்துவிடப்பா; இனிமேல் இந்த மூடநம்பிக்கைகளுக்கு அடிமையாகமாட்டேன். இப்பொழுதே சென்று கோவில் கதவை எல்லோருக்கும் திறந்துவிடுவேன்' என்று உணர்ச்சி வசப்பட்டுக்கத்திவிட்டார். அப்போது சிவராமனை நெருங்கிவந்த வரதன் "என்னையும் மன்னித்துவிடப்பா. குருக்கள் திறப்பதற்கு இப்போ தேவை[illegible]தவில்லை. அதற்கு நான் டைனமற் வைத்துவிட்டேன். அந்த டைனமற் கோவில் கதவைத்தான்திறந்திருக்கிறது. ஆனல் உன்னுடைய அன்புவழியோ எங்கள் இராம மக்கள் அத்தனைபேரின் அறியாமைக்கதவுகளையும் திறந்திருக்கிறது' என்று சொல்லிக் கண்ணீர் மல்க நின்ருன். அங்குநின்ற அத்தனைபேர்களின் கண்களிலிருந்தும் விழுந்த நீர் ஒன்ருகி ஓர் ஆருக ஓடும் காட்சி அக்கிராம மக்கள் ஒற்றுமையாகிவிட்டனர் என்பதைச் சொல்லாமல் சொன்னது' அந்த ஆனந்தச் செய்தியை தன் தாய்க்கு அறிவிக்க வேண்டுமென்று நினைத்தாளே என்னவோ அவன் [illegible]

(யாவும் கற்பனை)

# பஞ்சாமிர்தம்

## வணக்கத்துக்கு நேரமெங்கே!

"ஓ, ஆதாமின் மக்களே! நான் உங்களுக்கு செல்வத்தை வழங்கினுல், நீங்கள் என்னை மறந்து அதிலேயே லயித்திருப்பீர்கள். உங்களை வறியவர்களாக்கினுலும், மனமுடைந்துபோய் எனது பெருமையைப் போற்றமாட்டீர்கள் செல்வம் வந்துற்றகாலை தற்பெருமை கொண்டு உதாசீனமாய் நடக்கிறீர்கள். வறுமைவந்தால் புண்பட்டு துயரடைகிறீர்கள். இன்பம், துன்பம் இரண்டிலும் உங்கள் நிலைமை இப்படியிருந்தால் கடவுளைத் துதிக்க உங்களுக்கு எப்பொழுது நேரம் கிடைக்குமோ. நான் அறியேன்!"

— பாரசீக வேதம்

## மகாத்மாவின் கலாரஸனை

மகாத்மாகாந்தி ஒருதடவை மைசூரிலுள்ள விஷ்ணு ஆலயம் ஒன்றுக்குப் போயிருந்தார். அங்கே இருந்த ஓர் அழகான சிற்பத்தைக் கண்டு சொக்கிப்போய் அதன் முன்னுல் வெகுநேரம் நின்று ரஸித்துக்கொண்டிருந்தார். அவரோடு சென்றவர்களுக்கு இதுபெரும் விந்தையாயிருந்தது. ஒன்று அவருக்கு கலைகளில் அவ்வளவு ஈடுபாடு கிடையாது. மற்றது அந்தச் சிற்பத்தின் தன்மை அப்படிப்பட்டது. அதில் ஓர் இளம்பெண் சர்வ நிர்வாணமாகவே நின்றுகொண்டிருந்தாள் அவள் காலடியில் அவள் களைந்தெறிந்த சேலை கிடந்தது. அதன் பக்கத்தில் ஒரு தேள் இருந்தது பல நூற்றுண்டுகளுக்கு முன்பு அந்தச் சிற்பத்தைச் செதுக்கிய பெயர் தெரியாத சிற்பியின் திறமையைப் புகழ்ந்துவிட்டு மகாத்மா சொன்னுர் 'காமத்தைக் குறிக்கும் இந்தத் தேள் இவ்விளம் பெண்ணைக் கொட்டிவிட்டது. அவள் அதில் வெறுப்படைந்து தான் அணிந்திருந்த ஒரேயோர் ஆடையைக் களைந்தெறிந்துவிட்டாள். அத்துடன் காமம் என்கிற தேளையும் தூக்கி எறிந்துவிட்டாள்.' மனத்தில் மிகவும் ஆழமாப் பதிந்துவிட்ட இந்த சிற்பத்தைப்பற்றி அவர் பின்பு ஒரு கட்டுரையும் எழுதினுர்

## ரொக்கட் ரயில் வண்டி

மணிக்கு 2500 கிலோமீட்டர் வேகத்தில்(சுமார் 1525 மைல்) செல்லக் கூடிய ரயில் வண்டி ஒன்றை டாக்டர் ஒஸாவா என்ற ஜப்பானிய பேராசிரியர் உருவாக்கிக்கொண்டிருக்கிருர். ஆகாயத்தில் விமானம் பறக்கும் வேகத்தில் இந்த ரயின்வண்டி தரையில் பிரயாணம் செய்யும். சமீபத்தில் அவர் தயாரித்த ஒரு மாதிரி ரயில் 2100 கிலோமீட்டர் வேகத்தில் சென்றது. ஆனல் அதற்குள்ளிருந்த இரு பிரயாணிகள்-ஓர் ஆமையும் ஒரு கரப்பான் பூச்சியும்-கொல்லப்பட்டுவிட்டனர். அடுத்த சோதனையில் மிருகங்களின் உயிருக்கு சேதமில்லாமல் அவற்றை காப்பாற்றலாம் என்று டாக்டர் ஒஸாவா நம்புகிருர். இந்த ரொக்கட் ரயில் புகையில்லாத ஒரு வெடிமருந்து கலவையினுல் உந்தப்பட்டு பிரமாண்டமான காற்று முதலிய வாயுக்கள் இல்லாத சூனியமான குழாய்கள்வழியாகவிரையும். பிரயாணிகள் இடையில் ஏறி இறங்குவதற்கு ஸ்டேஷன்களுமுண்டு. வெகுசீக்கிரத்தில் இது மனிதர்களையும் ஏற்றிச் செல்லக்கூடிய முறையில் உருவாக்கப்படும் என்று பேராசிரியர் ஒஸாவா நம்புகிருர்.

## சூரியனை நேரில் பார்க்கமுடியாது!

விஞ்ஞானம் படித்த நண்பர் ஒருவர் இப்படிச் சொன்னுர். இதென்ன பைத்தியம். மேகக்கூட்டங்கள் இல்லாவிட்டால் ஒவ்வொரு நாளும் தானே சூரியனைப் பார்க்கிருேம் என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? ஆனுல் அந்த நண்பர் சொன்னதில் உண்மை இருக்கிறது. சூரியன் பூமியிலிருந்து 9 கோடியே 27 லட்சம் மைல் தூரத்தில் இருக்கிறது. அதன் ஒளிக்கிரணங்கள் விநாடிக்கு 186,000 மைல் வேகத்தில பூமியை வந்தடைய 8 1/2நிமிடங்கள் ஆகின்றன. இந்த 8 1/2 நிமிட நேரத்தில் சூரியன் தனது குறுக்கு விட்டமாகிய 8 லட்சத்து 64,000 மைல் தூரத்தைப்போல இரண்டு மடங்கு தூரம் அப்பால் நகர்ந்துவிடுகிறது ஆகையால் நாம் எப்போதும் 8 1/2 நிமிடங்களுக்கு முன் இருந்த இடத்தைப் பார்க்கிருேமேயன்றி சூரியனை நேரில் பார்ப்பதில்லை. இதுபோலத்தான் வியாழன், சனி முதலிய கிரகங்களையும் நட்சத்திரங்களையும் நாம் ஒருபோது நேரில் பார்ப்பதில்லை. அவை சில நேரத்துக்கு முன் இருந்த இடத்தையே பார்க்கிருேம், சில நட்சத்திரங்களின் ஒளி பூமிக்கு வந்துசேர வருடங்கள் செல்கின்றன. அவற்றை நாம் பார்க்கும்போது சில வருடங்களுக்கு முன்பு அவை இருந்த இடத்தையே பாக்கிருேம். அவை அதற்குள்ளாக வெடித்து அழிந்துபோயிருக்கக் கூடும். ஆனுல் அவற்றின் ஒளி நம்மை நோக்கிவந்து கொண்டேயிருக்கும்.

## வேலைக்கேற்ற கூலி!

ஒரு வங்கியின் இரும்புப்பெட்டி திறக்கமுடியாமல் பூட்டி சிக்குப்பட்டுக்கொண்டது. மனேஜர் உடனே பக்கத்திலிருந்த ஒரு சிறைச்சாலைக்கு டெலிபோன்செய்து, இரும்புப்பெட்டிகள் திறப்பதில் சாமர்த்தியசாலியான கைதி ஒருவரை அனுப்பும்படி வேண்டினுர் சில நிமிடங்கள் கழித்து ஒரு கைதியை சிறைச்சாலை காவலாளி ஒருவர் அழைத்து வந்தார். இரும்புப் பெட்டி திறப்பதில் நிபுணனுன அந்தக் கைதிக்கு இது ஒரு சுலபமான வேலை. ஐந்து நிமிடங்களுக்குள் அந்தப் பணப்பெட்டி திறபட்டுவிட்டது. மகிழ்ச்சியடைந்த வங்கி முதலாளி கைதியைப் பார்த்து, 'உனக்கு என்னப்பா நான் தரவேண்டும்' என்று பரிவுடன் கேட்டார். கைதி சிறிது நேரம் யோசித்துவிட்டு, 'ஐயா, கடைசியாக நான் ஓர் இரும்புப் பெட்டியைத் திறந்தபோது ஐயாயிரம் ரூபாய் கிடைத்தது!' என்ருன்.

—தயாரிப்பு: வழிபோக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**9-4-71 வெள்ளி**

செய்திகள்: காலை 6-45, 12-45, மாலை 6-00, இரவு 9-00

**344M & 61M**

6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை. 6-35 பௌத்த நற்சிந்தனை, 6-40 பக்திப் பாடல்கள், 7-15 பண்ணுரிந் தமிழ் 7-45 பௌத்தர் உபதேசம். 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி 8-15 ஞானமிர்தம் டி. ராமசாமி, 8-25 இந்துக்கள் செய்திக்கடிதம். 8-30 சைவநீதி - அருள் தியாகராசா.

**344M & 49M**

9-00 கிறிஸ்தவ பக்திப் பாடல்கள், 9-30 முஸ்லிம் சமயப் பாடசாலை, 10-00 பெரிய வெள்ளி. 11-00 துணுக்குகள், 11-15 சிறுவர் மலர் 12-00 கிறிஸ்தவ பெரியவெள்ளி, 12-55 அறிவிப்புக்கள். 1-05 பெண்ணுலகம்.

**344M & 61M**

4-30 சங்கமம், 5-00 பிறந்தின வாழ்த்துக்கள், 5-30 பாட்டு-சுந்தரவல்லி, 6-10 இடைவேளை இசை, 6-15 மெல்லிசை, 6-30 திருவாரூரும் திருப்புகலூரும் வேளூரும்-தேவாரப் பாடல்கள் 7-00 தாளவாத்தியக் கச்சேரி, 7-30 விவேகச் சக்கரம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நிகழ்ச்சித் தொகுப்பு 9-45 பாட்டு-எஸ். பாலசிங்கம், 10-30 செய்தித் தொகுப்பு.

# வனிதையர்

(12ம் பக்கத்தொடர்ச்சி)

### மணப் பெண்களுக்கு

''பொம்பே பீசைல்'':- என்னெய் பசையற்றுக் கூந்தலை முன்னுக்குப் பக்கவாட்டாக இரண்டாகப் பிரித்து விடல்வேண்டும் அதிகமாக விடவேண்டியதில்லை. பின்னுக்கு உள்ளதைக் கூட்டிக் கட்டிவிடல்வேண்டும். எடுத்து வைத்த பண்ஐ தலையின் நடுப்பகுதியில் வைத்து கேசப் பின்னினால் விழாதவாறு குத்திவிட்டு, பக்கவாட்டாக விட்டதை மறைத்துக் குத்தவேண்டும். மறைத்த மிகுதியை முன்பு கட்டியதுடன் சேர்த்துக் கட்டிவிடல்வேண்டும். காது மறைக்க விரும்பினால் மறைத்துக்கொள்ளலாம். பின்னால் ஒன்றாகக் கட்டியிருக்கும் கூந்தலைச் சிறிது சிறிதாக எடுத்துச் சுருட்டி, கட்டிக் கட்டியதைச் சுற்றி வைத்துக் கிளிப்குத்திவிடல் வேண்டும் ஒவ்வொரு சுருளும் ஒவ்வொன்றினதும் இடையில் வைத்தல் நன்று. இதனை மணப் பெண்கள் தம் முடியை அலங்கரிக்க உபயோகிக்கலாம் விரும்பினால் இச்சுருள்களின் இடையில் பூக்களையோ அல்லது அலங்காரத்துக்கு ஏற்ற முத்து மணிகளையோ உபயோகித்தால் அழகாக இருக்கும்.

---

## சர்வோதய பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம்,விபா

அகில இலங்கை காந்தி சேவா சங்கம் தமிழ்நாடு சர்வோதய சங்கத்தின் ஆதரவோடு இலங்கையில் சர்வோதய பயிற்சி முகாம்களை அமைத்துள்ளது.

இளைஞர்களுக்கு இந்தியாவில் தொழில் பயிற்சியளிக்கும் திட்டத்தையும் சங்கம் வெளியிட்டுள்ளது.

இதில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் பயிற்சிபெறச் சேர்ந்துள்ளார்கள் என்று தெரிகின்றது.

இந்தியாவில் பயிற்சி பெறு முன்பு காந்திசேவா சங்க ஸ்தாபனங்களான உருத்திரபுரம் காந்திநிலையம் இரத்மலானை சர்வோதய நிலையம் ஆகியவைகளில் ஓர் ஆண்டு சேவை செய்ய வேண்டுமென இவர்கள் கோரப்பட்டுள்ளார்கள்.

பயிற்சிமுகாமில் சர்வோதய விடயங்கள் இளைஞர்களுக்கு விளக்கப்படும்.

10மணி நேரம் உடலுழைப்பு நடைபெறுவதுடன் கருத்தரங்கும் நடைபெறுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

நாளொன்றுக்கு 10, 15 சிகரெட் புகைக்கும் பல இளைஞர்களும் முகாமில் புகைக்கும் பழக்கத்தைக் கைவிட்டுள்ளார்கள்என்றும் சுவையான உணவு உண்ணும் பழக்கத்தையும்விட்டு சிக்கன சீரிய வாழ்க்கை முறைகளையே பழகி வருகிறார்கள் என்றும் தெரியவருகின்றது.

## பழமையிலும் பயனுண்டு

வெள்ளவத்தை, புதன்

பழம் பெருமை பேசுவதால் பயனில்லை என்று சொல்ல முடியாது பழம் பெருமைகளை நினைவுகூர்ந்தால்தான் புதிய வரலாற்றை சமைக்க முடியும். என்று மட்டக்களப்பு ஆட்சிமன்ற பிரதிநிதி திரு. செ. இராசதுரை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் 'தமிழன் அன்று' என்ற தலைப்பில் பேசுகையில் கூறினார்.

கல்முனை அண்ணா கலை நிதிக்கான தமிழ்த்தாய் மன்றத்தினரால் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த இக்கூட்டத்தில் திருவாளர்கள் எம். கே. அந்தனிசில் ஆலாலசுந்தரம் ஆகியோரும் பேசினர்.

டாக்டர் திரு இ. முவி நாகநாதன் தலைமை தாங்கினார்.

'தமிழன் இன்று' என்ற தலைப்பில் திரு எம். கே. அந்தனிசில் பேசினார்.

அட்வகேட் திரு. ஆலாலசுந்தரம் 'தமிழன் நாளை' என்ற தலைப்பில் பேசுகையில் ''நான் ஒரு சோதிடனல்ல. பாலத் தமிழனின் நாளைய தலைவிதியை நிர்ணயிக்க முடியாது. இதுவரை நடந்த தவறுகளை உணர்ந்து இனியும் தவறுகள் விடாமல் தமிழர்கள் நிதானமாகவும் பொறுப்புணர்ச்சியுடனும் நடந்துகொள்ள வேண்டும். என்றார்.

'தமிழன் கனவு' என்ற கவிதை நூலும் வேறு பிரசுரங்களும் விற்பனை செய்யப்பட்டன:

---

## ஹரிஹரபுத்திர..:

(2ம் பக்கத் தொடர்ச்சி)

தமது வைராக்கிய பக்தியை ஐயனாருக்குக் காட்டிடுவர்.

தேர்த் திருவிழாவிற்கு வரும் அடியார்களுக்கு அன்னதானம், தாகசாந்தி முதலியன அளிக்க தர்மசித்தைப் படைத்தவர்கள் ஏற்பாடு செய்துள்ளனர். கோவில் பூஜைகளை நடாத்திவரும் பூசகரும், மனேஜருமான திரு. சி. ஐயாத்துரையுடன் பரிபாலன ஆதரவாளர் சபையினரும் இவர்களுக்கு உதவியாகத் தொண்டர் படையினரும் திரண்டு வரும் பக்தர்களுக்கு வேண்டிய உதவிகளைப் புரிந்து வருகிறார்கள். அனைவரும் ஆண்டவன் குழந்தைகளாகவே இங்கு மதிக்கப்படுகின்றார்கள். அனைவரும் ஆண்டவன் குழந்தைகளாகவே இங்கு மதிக்கப்படுகிறார்கள்.

வருடாந்த பொங்கல் தினத்தில் இங்கு ஐயனுக்கு நேர்த்திக்கடனாக வந்து குவியும் ஆட்டுக்கடாக்களும் சேவல் கோழிகளும் அளவிறந்தவை. ஐயனது சங்காபிஷேகத் தினத்திற்கு பக்தர்கள் வழங்கும் அரிசி, காய்கறி, பழவகை, அபிஷேகத் திரவியங்கள் முதலியனவும் வேறெங்கும் காணமுடியாதவையாகும்.

அழகிய ஐயனாரது ஆலயத் திருப்பணிக்கு நிதி உதவிய அன்பர்கள் ஒவ்வொருவரும் உடனுக்குடன் அவனருள் பெற்று உயர்வு அடைந்து மேலும் மேலும் உதவ முன்வந்துள்ளார்கள்.

ஐயனார் ஆலய வருடாந்த மகோற்சவம் இப்பொழுது நடைபெற்று வருகிறது 9ந் திகதி போயா தினத்தன்று ரதோற்சவம் நிகழும்.

ஐயன் பெருமைகளைச் சிந்தித்து உயர்வடைவோமாக!

## சுங்க ஏல விற்பனை

28-5-1954-ம் திகதியிடப்பட்டு (இல. 10675) அரசாங்க வர்த்தமானியில் (பகுதி 1 தொகுதி II) பிரபிரசுரிக்கப்பட்ட சுங்க ஏல நிபந்தனைகளுக்கிணங்க கீழ்க்காணும்பொருட்கள் 1971-ம் ஆண்டு சித்திரை மாதம் 20-ம் தேதி காலை 10-30 மணிக்கு இவ்வலுவலகத்தில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். விற்பனைப் பொருட்களை அன்றுகாலை9-30 மணிக்குப் பார்வையிடலாம். இத்திகதியில் விற்கப்படாத மிகுதிப்பொருட்கள் அடுத்த நாள் (21-ம் தேதி) காலை 10-30மணிக்குத்தொடர்ந்து ஏலத்தில் விற்கப்படும்.

எஸ். எம். ஜே சேனரத்ன.
(ஒப்பம்)
யாழ். மாவட்ட சுங்க சேகரிப்பாளருக்காக.
சுங்க அலுவலகம்.
யாழ்ப்பாணம்,
30-3-71.

1. சராம்பு 14 மூடைகள்.
2. நைலோன் மீன்பிடிவலைகள் 19 (புதியது).
3 பாய்கள் (இந்தியா)
4. மின்சூள்(டோச் லைட்).
5. இந்தியா ஊற்றுப் பேனாக்கள் (ஒஸ்வோல்ட்) கனிப்பேனாக்கள்(லெக்ஸிசன்)
6. யொஸ் மின்சார ஹாரன்.
7 பிளாஸ்டிக் காப்புகள் (இந்தியா)
8. செயற்கை ஆபரணங்கள்.
9. மீன்பிடி வலைகள் (பாவிக்கப்பட்டது).
10. சீப்புகள், பிளாஸ்டிக் பூக்கள், கறுப்பு றிபன்கள், பிளாஸ்டிக் பொத்தான்கள், சேலைக்கரைகள், கழுத்து மணிமாலைகள், சாய்ப்புச் சாமான்கள், தெய்வ உருவங்கள், நைலோன் நூல்
11. மின்சார அறை சூடேற்றிகள், உருக்கு இரும்பு சூடு கட்டுப்படுத்துமானி, மின் அமிழ்த்துச் சூடேற்றி.
12. ஓவல்டின் ஹோர்லிக்ஸ், தேங்காய் எண்ணை கலன் டின்களில்.
13 மோட்டார் வாகன ஏரியல்
14. இந்தியா றெக்கோர்டுகள்,
15. புடவைச் சாயங்கள்.

3239

---

## தேவை

நற்குணமும் பத்துவருட அனுபவமும் பழுது பார்க்கும் திறமையும் கொண்டவரும் 35— 45 வயதுக்கு உட்பட்டவருமாகிய கார் சாரதி ஒருவர் கொழும்பில் உள்ள எங்கள் கம்பனி டிறெக்டருக்குக் கார் ஓட்டுவதற்குத் தேவை

தங்கும் வசதி அங்கு உண்டு நேரில் தொடர்பு கொள்ளவும். ஜபர்ஜி பிறதர்ஸ், இல- 6. ஸ்ரான்லி ரோட் யாழ்ப்பாணம்.

2753

---

500 இளம்பனைகள் உடைய காடு தோட்டத்தில் வேம்பொடுங்கணி, பனையில் கறியலுக்கு உண்டு பார்வையிட்டபின் சிவானந்தன், தெணியம்பை, வல்வெட்டித்துறையில் விண்ணப்பிக்கவும். 2757

---

## விற்பனைக்கு

3 சிறீ பியட் 500, B. L. மொறிஸ் மைனர் வெஸ்பா ஸ்கூட்டர் விற்பனைக்கு உண்டு. செல்வேந்திரன் டச்ரோட், சாவகச்சேரி

2758

---

நல்லூர் வடக்கில் எட்டு அறைகளுள்ள புதிய வீடும் மூன்று பரப்பும் முப்பதினையாயிரம். ஒன்பது பரப்பு இருபத்தேழாயிரம். விலை கேட்கலாம். விபரங்களுக்கு உரிமையாளர் (தரகரல்ல) 92, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி.

2733

---

ராஜா (யாழ்ப்பாணம்)
காலை9-30 மட்டும்
ராஜேந்திரகுமார் வைஜந்திமாலா நடித்த
**சாதி**
(கலர்—ஹிந்தி)

---

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி காலை10-00
சிவாஜி கணேஷன் கே. ஆர். விஜயா நடித்த
**ராமன் எத்தனை ராமனடி**

---

வின்ஸர் [யாழ்ப்பாணம்]
தினசரி காலை 10-30 மட்டும்
மாஸ்ரா பிரபாகர் பேபி சுமதி - லெட்சுமி நடித்த
**வா ராஜா வா**

---

2-வது வாரம்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 9-30
எம்.ஜி.ஆர். (இருவேடங்களில்) சரோஜாதேவி ரத்னா நடித்த
**எங்க வீட்டுப்பிள்ளை**

---

கெபிட்டல் - பிளாசா - மைலன் திரைகளில்வெகுவிரைவில் எதிர்பாருங்கள்
ரவிச்சந்திரன்-ஜெயலலிதா மனோகர், அசோகன், ஆனந்தன் நாகேஷ், சுந்தரராஜன் நடித்த
விஜயா பிக்சர்ஸ்
**மூன்றெழுத்து**
(வர்ணச்சித்திரம்)

---

நாகம்ஸ் சினிமா
சுன்னாகம்
தினசரி 9-30, மட்டும்
எஸ். எஸ். ஆர். - விஜயகுமாரி நடித்த
**சாரதா**

---

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 9-30, மட்டும்
சிவாஜி - சரோஜாதேவி நடித்த
**அன்பளிப்பு**

---

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி 10 30, மட்டும்
ஜெய்சங்கர் - விஜயகுமாரி நடித்த
**குழந்தையும் தெய்வமும்**


---

REGAL - Jaffna
Daily- 9- 30 a.m. Only
Birth Rynolds
in
NAVAJO JOE

---

மனோகரா
(யாழ்ப்பாணம்)
Daily10-30am only
Spell Binding Suspence Thriller
BANDITS in ROME
[அவசரகாலநிலைமையுன்னிட்டு 'லக்ஷ்மிகல்யாணம்' காண்பிக்க முடியவில்லை]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மணிமொழி

அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது. அன்புக்குப் பொறாமையில்லை. அன்பு தன்னைப் புகழாது. இறுமாப்பாயிராது. அயோக்கியமானதைச் செய்யாது. தற்பொழிவை நாடாது. சினமடையாது. தீங்கு நினையாது. அநியாயத்தில் சந்தோஷப்படாமல் சத்தியத்தில் சந்தோஷப்படும் ஆபத்தையும் தாங்கும் சகலத்தையும் விசுவசிக்கும். சகலத்தையும் நம்பும். சகலத்தையும் சகிக்கும்.' அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்க தரிசனங்களானாலும் ஒழிந்துபோம். அந்நிய பாஷைகளானாலும் ஒய்ந்துபோம். அறிவானாலும் ஒழிந்துபோம்.

கொரிந்தியர்

''மப்பு மந்தாரம் உடையநாள் மோசமான நாளன்று. மேலாம் செயலில் ஈடுபடாது கழிந்த நாளே மோசமானது'' — தர்ம சக்கரம்.

காலம் பெறுமதியானது. காலத்தை வீணுக்காதீர்கள். மில்க்வைற் சலவைப் பவுடர் வாங்கிப் பாவித்து நேரத்தையும், பணத்தையும் மிச்சப்படுத்துங்கள். பாவித்த உறைகளை அனுப்பி மிக உயரிய பரிசுகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க்வைற் சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.

# பயங்கரவாதிகளுக்கு உதவினால் சொத்து பறிமுதல்; மரணதண்டனை!

## ஊரடங்கு இல்லாத நிலையிலும் வெளியில் கூட்டமாக நிற்காதீர்

### அரசாங்கம் எச்சரிக்கை

கோட்டை, வியா.

பயங்கரவாதிகளுக்குத் தூண்டுதலாக இருந்து உதவி அளித்தார்களெனக் குற்றம் சாட்டப்பட்டு நிருபிக்கப்பட்டவர்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படுமென்றும் அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படுமென்றும் அரசாங்கம் ஓர் அறிவித்தல் மூலம் எச்சரிக்கை செய்திருக்கிறது.

பயங்கரவாதிகளை முறியடிப்பதற்குப் பொலிசாரும் ஆயுதப்படையினரும் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்ய நேரிடும் சூழ்நிலை ஏற்பட்டிடுப்பதாகவும் இதனால் ஊரடங்கு உத்தரவு அமுலில் இல்லாத சமயங்களிற் கூட பொதுமக்கள் பொது இடங்களில் கூட்டங்கூட்டமாக நிற்காமல் அவரவர் அலுவல்களை அவசர அவசரமாகக் கவனித்துக் கொண்டு தங்கள் தங்கள் வீடுகளில் இருக்கும்படியும் அரசாங்கம் விடுத்துள்ள அறிக்கையில் பொதுமக்களுக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

## பிக்குகள் உடையில் பயங்கரவாதிகள்

பயங்கரவாதிகள் சிலர் பௌத்த குருமார் அணியும் அங்கிகளை அணிந்து மாறுவேடத்தில் பயங்கர நடவடிக்கைகளில் ஈடுபட்டது கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகவும் இந்த இயக்கத்தில் சேர்ந்தவர்களெனக் கைது செய்யப்பட்டவர்கள் பலர் மொட்டைத் தலையுடனிருப்பது இதை உறுதிப்படுத்துவதாகவும் எனவே பௌத்த பிக்குகள் தங்கள் தங்கள் ஆலயங்களிலும் விகாரைகளிலும் தங்கியிருப்பது நல்லதென்றும் அரசாங்கம் அறிக்கை ஆலோசனை கூறுகிறது.

### சீர்குலைகிறது

பயங்கரவாதிகளின் நடவடிக்கைகள் சீர்குலைகிறதென்றும் அறிக்கை தெரிவிக்கிறது.

### சுட்டுக் கொலை

நொச்சியாகமஎன்றஇடத்தில் நோயாளிகளை ஏற்றிச் சென்ற அம்புலன்ஸ் வண்டியொன்றை பயங்கரவாதிகள் தடுத்து நிறுத்தி மருத்துவ உதவியாளரைச் சுட்டுக் கொலை செய்ததாகவும் நோயாளர்களைக் கொடுமைப்படுத்தியதாகவும் தகவல் கிடைத்ததாக தகவல் பகுதி டைரக்டர் இன்று பிற்பகல் பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் தெரிவித்தார்.

[illegible] பகுதியில் கிராமசபைத் தலைவர் ஒரு[illegible] மிகக் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டாரென்றும் பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளை முறியடிப்பதற்கு அப்பகுதி மக்கள் கண்காணிப்புக் குழுவொன்றை நியமித்துள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

## யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில் நுட்ப கல்லூரி பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம். ஞாயிறு கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் பரீட்சைப் பகுதியினரால் நடத்தப்பெற்ற யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரி இறுதிப் பரீட்சையில் சித்தி பெற்றவர்கள் விபரம் வருமாறு;

கணக்குப்பதிவாளர்-சுருக்கெழுத்துத் தட்டெழுத்தாளர் வணிக தகுதிப்பத்திரம் (தமிழ்):

சி சிவராசா, வே த வேலாயுதம். சோ கமலாதேவி, இ நற்குணதேவி, க தாகேஸ்வரி, நா நாகேந்திர ராணி. ந நீலாம்பரன், இ புவனேஸ்வரி.

சுருக்கெழுத்து - தட்டெழுத்தாளர் வணிக தகுதிப் பத்திரம் (தமிழ்):

நா சிவசண்முகநாதன், க சுப்பிரமணியம், சி திருச்செல்வம், க த அகிலாண்டேஸ்வரி, க. திருவிளங்கம் நா அனுசூயாதேவி, க முத்துலட்சுமி, பொ சண்முகலிங்கம், கி செல்வராசா, க மகேந்திரன், க இந்திரா, அ இராசாம்பிகை. செ குணவதியம்மாள், சி நாகேஸ்வரி, ந புவனேஸ்வரி, க லோகேஸ்வரி, நா வடிவாம்பிகை, ச றதினி தியாலோஜினி.

சுருக்கெழுத்தாளர் தகுதிப் பத்திரம் சாதாரணம் (தமிழ்):

தே சேவியர். எ ஜெகநாதன், நா சந்திரலேகாதேவி. க சரோஜினிதேவி, ப மகேந்திராதேவி, ஐ ஆனந்ததேவன், மு சந்திரகுமார், எஸ் எம் மெய்யதீன், அ இந்திராணி, செ சரோஜினிதேவி, பா சரோஜினிதேவி, கா தயாபரி.

கணக்குப்பதிவாளர், சுருக்கெழுத்து - தட்டெழுத்தாளர் உயர்வணிகம் (தமிழ்)

த மகேஸ்வரி.

கணக்குப்பதிவாளர்வணிக தகுதிப் பத்திரம் (தமிழ்):

அ நெ ம அபதுல் அஸீஸ் மஹ்மூத் மரைக்கார். ம அ இ ம் பொருள், கு ஆனந்தநடராசா, த இந்திரகுமாரி. க இரவீந்திரன், தே எமிலியானுஸ்பிள்ளை. மு கணேசன், சோ கௌஸ்துபமணி, ச சந்திரசேகரம், இ நா சிவராசா, தெ சிவராஜலிங்கம், செ தர்மராசா மு தனமாலன். இ நாகராசா, க பஞ்சரத்தினம். இ பொன்னம்பலம், ஆ மனோகரன், அ ல முகமது தாஸிம், அ வ முறியாழ், மா ச ஜெகநாதன், தி. ஜெஜேந்திரன், சி. ஈஸ்வரலிங்கம், க. கனகசபை, செ. செல்வநாயகம், வை செல்வேந்திரன், பொ. பாலசிங்கம், ஆ க ஐ யோசேவ், இ இராஜராஜேஸ்வரி, நா இராசேஸ்வரி, வே கண்ணகாதேவி, வை கனகம்மா சு சீதா.

கணக்குப்பதிவாளர் உயர் வணிக தகுதிப்பத்திரம் (தமிழ்):

க கதிரமலை. செ நாகராசா. பே. பஞ்சலிங்கம், சி பொ நா வே நாயகம், வ கந்தசாமி இ சோதிலிங்கம். செ ஜெயசேகரம்

சுருக்கெழுத்து- தட்டெழுத்தாளர் உயர்வணிக தகுதிப் பத்திரம் (தமிழ்):

த கா புனிதவதி, வே நீற்ருஜானகி பா கேதாரகௌரி, ந சிறிமதிநகுலராதா.

சுருக்கெழுத்தாளர் தகுதிப்பத்திரம் உயர்தரம் (தமிழ்): அ தவராஜகுமாரி. க நா சிவகாமசுந்தரி.

கணக்குப்பதிவாளர்வணிக தகுதிப் பத்திரம் (ஆங்கிலம்) தி நாகேஸ்வரி. அ கா விஜயரத்தினம், க. சுசீலா, கு பிரியசீலி, இ வசந்தா, லூ பெர்னாண்டஸ்.

கணக்குப்பதிவாளர், சுருக்கெழுத்து தட்டெழுத்தாளர் வணிக தகுதிப்பத்திரம் (ஆங்கிலம்):

பொ புவனேஸ்வரி, ந விஜயாம்பிகைதேவி.

சுருக்கெழுத்து - தட்டெழுத்தாளர் வணிக தகுதிப் பத்திரம் (ஆங்கிலம்) சி குலசிங்கம்.

கணக்குப் பதிவாளர் உயர் வணிக தகுதிப்பத்திரம் (ஆங்கிலம்) து பேரின்பநாயகி.

மற்றும்சிலரது பெறுபேறுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

## கொடிகாமத்தில் ஒருவர் கொலை

கொடிகாமம், வியாழன் கொடிகாமப்பகுதியைச் சேர்ந்த போக்கட்டி என்ற இடத்தில் நேற்று கிட்டினன் என்பவர் கொலை செய்யப்பட்டார். இச்சம்பவம் சம்பந்தமாக சந்தேகநபரான சாமி என்பவரை பொலிசார் தேடி வருகின்றனர்.

## தபாற்சேவை இல்லை

யாழ்ப்பாணம், வியாழன் மறு அறிவித்தல்வரை தபாற்சேவை நடைபெறாதென்றும், தபாற்கந்தோர் வேலைகள் நண்பகல் 12 மணி வரைதான் நடைபெறுமென்றும் தபாற்கந்தோர் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

## அமைச்சர் -

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

சேகுவேரா என்கின்ற மக்கள் புரட்சிவாதியுடைய பெயருக்குக் களங்கம் கற்பிக்கும் வகையிலே இன்று இக் கிளர்ச்சிக்காரர்களின் செயல்கள் அமைந்துள்ளன. ஏனைய நாடுகளிலுள்ள சுதந்திர விடுதலை இயக்கத்தினர் தம் நாட்டை ஆக்கிரமிக்கும் வெளிநாட்டவர்களையே அகற்றி விடுதலைகாணப் புரட்சி செய்கின்றனர். சுதந்திரத்தைப் பெறுவதற்கு அவர்களின் இயக்கம் போராடுகின்றது. ஆனால் இங்கு சுதந்திரத்தை பாதுகாக்கின்ற பொலிஸ் நிலையங்களையே இவர்கள் தாக்கியுள்ளனர்.

கடந்த பத்து மாதகாலம் இந்த இயக்கம் திட்டமிட்டு இன்றைய ஆட்சியின் நல்ல திட்டங்களை முறியடிக்கவும் மக்களின் சுதந்திரத்திற்குக் குந்தகம் விளைவிக்கவும் முற்பட்டுள்ளது.

இந்த நாட்டில் இத்தகைய நாசகாரச்செயல் இப்போதுதான் நடைபெறுகின்றதென்பதில்லை. 1959-ம் ஆண்டு நடைபெற்ற செயலினால் திரு. பண்டாரநாயக்காவுக்கு அகாலமுடிவு கிடைத்தது. 1962-ம் ஆண்டிலும் இதே ரீதியில் நடந்துள்ளது.

இந்தப் பயங்ரவாதிகளை முறியடித்து திடமான சோஷலிஸ சுதந்திர ஆட்சியை உண்டாக்கப் பொதுமக்கள் முன்வரவேண்டும்.

## தொழிலாள

(1ம்பக்கத் தொடர்ச்சி)

தங்களைப் பாவித்து ஏழை எளிய மக்களின் அரசாங்கத்தை வன்முறையால் கவிழ்த்து பாசிச முறையான ஆட்சியை ஏற்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருப்பது தெரிகிறதென்றும் இதற்கு இடங்கொடாமல் இந்த அரசாங்கத்துக்கு உதவியும் ஒத்துழைப்பும் அளித்து அதைக் காப்பாற்ற வேண்டியது தொழிலாளரினதும் பொதுமக்களினதும் தலையாய கடமையாகும் என்றும் அந்தக் கூட்டறிக்கை கூறுகிறது.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு [ஏப்ரல் மாதம் 9-ந் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org